# மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 - 2030

பாகம் I



நகர அபிவிருத்தி அதிகார சபை
2019 ஜூன்

# மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம்
2019–2030

முதலாம் தொகுதி

பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகார சபை

# மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 - முதலாம் தொகுதி

நகர அபிவிருத்தி அதிகார சபை – இலங்கை – 2019

© அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

அனைத்துப் பதிப்புரிமையுடையது. இவ் வெளியீடானது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்படுகிறது. இவ் அதிகார சபையின் முன் அனுமதி இன்றி இவ் வெளியீட்டை முழுமையாகவோ, பகுதியளவிலோ மீள் வெளியீடு செய்தல், விற்பனை செய்தல், விநியோகித்தல், எழுத்து மூல அனுமதி இன்றி பிரதி எடுத்தல் அல்லது நவீன தொழிநுட்ப முறைகள் மூலம் இறுவட்டு தயாரித்தல் அல்லது விநியோகித்தல் அல்லது வியாபார நோக்கத்திற்காகப் பயன்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளலாகாது.

**வெளியீடு**

நகர அபிவிருத்தி அதிகார சபை – இலங்கை
6, 7 மற்றும் 9 ஆம் மாடி,
"செத்சிறிபாய", பத்தரமுல்ல, இலங்கை

இணையத்தளம் – www.uda.gov.lk
மின்னஞ்சல் - info@ uda.gov.lk
தொலைபேசி இலக்கம் - +94112873637

வெளியீடு – 2019 ஜூன்

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 பிரதானமாக இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளதுடன், அது முதலாம் தொகுதி மற்றும் இரண்டாம் தொகுதி என்றவாறு வெளியிடப்படும். இதன் போது முதலாம் தொகுதியானது இரண்டு உப பகுதிகளைக் கொண்டிருப்பதோடு, அது பகுதி ஒன்று மற்றும் பகுதி இரண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு வெளியாகும் முதலாம் தொகுதியின் பகுதி ஒன்று மூலம் அபிவிருத்தித் திட்ட அறிமுகம், பின்புல ஆய்வு, அபிவிருத்தித் திட்டமொன்றிற்கான தேவைப்பாடு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதன் பகுதி இரண்டு மூலம் அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கு, நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள், கருத்துருத் திட்டம், அபிவிருத்தி மூலோபாயத் திட்டம் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் தொகுதி பிறிதொரு வெளியீடாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் 2019 – 2030 வரையான காலப் பகுதிக்காக நடைமுறையில் உள்ள மற்றும் கட்டிட அபிவிருத்திக்கான ஒழுங்கு விதிகள் மற்றும் வலயமாக்கல் ஒழுங்கு விதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேல் மாகாண பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பல்வேறு பிரிவுகளினதும் வளவாளர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் முன்னோடியாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**மேற்பார்வை நடவடிக்கைகள்**

கலாநிதி திரு. ஜகத் முணசிங்க *தலைவர் – ந.அ.அ.,* பொறியியலாளர் திரு. எஸ்.எஸ்.பி. ரத்னாயக்க *பணிப்பாளர் நாயகம் - ந.அ.அ.,* நகர கட்டிடக் கலைஞர் திரு. கே.ஏ.டீ. சந்திரதாச *மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - ந.அ.அ.,* நகர கட்டிடக் கலைஞர் திரு. டீ.எம்.பீ. ரணதுங்க *பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) - ந.அ.அ.,* திரு. வை.ஏ.கே. குணதிலக்க *பணிப்பாளர் (மேல் மாகாண பிரிவு) - ந.அ.அ.,* நகர கட்டிடக் கலைஞர் திரு. ஜனக் ரணவீர *பணிப்பாளர் (அபிவிருத்தித் திட்டமிடல் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு) - ந.அ.அ.,* நகர கட்டிடக் கலைஞர் திரு. லலித் விஜயரத்ன *முன்னாள் பணிப்பாளர் (அபிவிருத்தித் திட்டமிடல் பிரிவு) - ந.அ.அ.*

**திட்டமிடல் குழு**

நகர கட்டிடக் கலைஞர் செல்வி. தயானி பிரான்சிஸ் *பிரதிப் பணிப்பாளர் திட்டமிடல் (மேல் மாகாண பிரிவு) - ந.அ.அ.,* பீ.எல். ரஞ்சித் *உதவிப் பணிப்பாளர் திட்டமிடல், (மேல் மாகாணப் பிரிவு) - ந.அ.அ.,* திருமதி. பி.டீ.சீ. ஜயமாலி ஜயவர்தன *திட்டமிடல் உதவி உத்தியோகத்தர் (மேல் மாகாணப் பிரிவு) - ந.அ.அ.,* திருமதி. ஷானிக்கா சுமனபால *உதவி திட்டமிடல் உத்தியாகத்தர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு) - ந.அ.அ.,* செல்வி. மொனாலி ரூபசிங்க *உதவி திட்டமிடல் உத்தியாகத்தர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு) - ந.அ.அ.*

**உதவியாளர்கள் குழு**

சுற்றாடல் மற்றும் நிலத்தோற்றப் பிரிவு – ந.அ.அ.
புவியியல் மற்றும் தகவல் முறைமை பிரிவு - ந.அ.அ.
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு - ந.அ.அ.

# வாழ்த்துரை

மொறட்டுவை மாநகர சபை பிரதேசம் உள்ளடங்கும் வகையில் 2019 – 2030 காலப் பகுதிக்காக வகுக்கப்படும் இவ் அபிவிருத்தித் திட்டமானது நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகை பிரதானமாகக் கொண்டு பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரதும் ஒருங்கிணைப்புடன் வகுக்கப்பட்டுள்ளது.


பிரதானமாக இப் பணியை வெற்றிகரமாக்குவதற்கு மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சம்பிக்க ரணவக்க அவர்களின் தலைமைத்துவத்தையும் ஒத்துழைப்பையும் மிக உயர்வாக மதிக்கிறோம். அதே போன்று மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கௌரவ செயலாளர் உட்பட பணிக்குழுவானது மிக உன்னதமான பணியை நிறைவேற்றியதோடு, இப் பணிக்கு ஆர்வம் காட்டி, ஒத்துழைப்பை நல்கினர். அத்தோடு, மொறட்டுவை மாநகர சபையின் கௌரவ நகர முதல்வர் உட்பட ஒட்டுமொத்த பணிக்குழுவினருக்கும் இதன் பொருட்டு வழங்கிய ஒத்துழைப்பிற்கு எமது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், அரச மற்றும் தனியார் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பல்வேறு திறத்தவர்களும் இதற்கு பங்களிப்பு வழங்கியுள்ளதுடன், அவர்களது கருத்துக்கள், யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் போன்றன இவ் அபிவிருத்தித் திட்டத்தை வகுக்கையில் பெரிதும் துணையாக அமைந்தன. அதே போன்று பிரதேசத்தில் வாழும் பொது மக்களும் வழங்கிய பல்வேறு தகவல்கள், கருத்துக்கள் மற்றும் யோசனைகள் கூட இவ் அபிவிருத்தித் திட்டத்திற்குப் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளன என்பதுடன், திறத்தவர்களின் கூட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்டு வழங்கிய ஒத்துழைப்பை பெரிதும் மதிக்கிறேன்.

இவ் அபிவிருத்தித் திட்டத்தை வகுக்கும் தொழிற்பாட்டின் ஆரம்பம் முதல் இறுதி வரை நிழலாக பின்னாலிருந்து சிறந்த வழிகாட்டுதலையும் மற்றும் தலைமைத்துவத்தையும் வழங்கி, புதிய தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்தி, புதியதொரு வடிவில் இத் திட்டத்தை முன்வைப்பதற்கு அர்ப்பணிப்பு செய்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் கௌரவ தலைவர் கலாநிதி ஜகத் முணசிங்க அவர்களுக்கு எமது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு, பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் திரு. எஸ்.எஸ்.பி. ரத்னாயக்க, மேலதிக பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்), அனைத்துப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக அனைத்து திட்டமிடல் பணிக்குழுவினருக்கும் ஏனைய பணிக்குழுவினருக்கும் இத் திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்காக வழங்கிய ஒத்துழைப்பிற்கு மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதே போன்று இப் பணிக்கு தொடர்ச்சியாக வழிகாட்டலை வழங்கிய மேல் மாகாணப் பிரிவு, அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு, புவியியல் மற்றும் தகவல்கள் முறைமை பிரிவு, அமுலாக்கல் பிரிவு, சுற்றாடல் மற்றும் நிலப்பரப்பு பிரிவு, கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவு, நகர மறுமலர்ச்சிப் பிரிவு உட்பட ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துப் பிரிவுகளுக்கும் எமது கௌரவ நன்றிகள் உரித்தாதல் வேண்டும். அதே போன்று இவ் அபிவிருத்தித் திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் பணிக்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துத் தரப்பினருக்கும் எமது இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# கௌரவ அமைச்சரின் செய்தி



1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையானது தாபிக்கப்பட்டு நாற்பது வருடங்கள் பூர்த்தியாகின்ற இத் தருணத்திலே இலங்கையின் திட்டமிடப்பட்ட நகர அபிவிருத்தியின் பொருட்டு கடமைப்பட்டுள்ளது. மேலும், மேல் மாகாண சபையின் அனைத்து நகர்ப்புறங்களுக்கும் விரிவானதொரு நகரத் திட்டத்தை வகுப்பதன் ஊடாக நகர அபிவிருத்தி அதிகார சபையானது மற்றுமொரு தடத்தைப் பதித்து வருகிறது.

நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரக் கட்டமைப்பினுள் முறையானதொரு நகரமயமாக்கலைத் தாபிப்பது சவால் மிக்கதாகும். பல்வேறு அரசாங்கங்கள் ஆட்சிக்கு வருகையில் தேசியக் கொள்கை இன்றி நாட்டிற்குப் பொருந்தாத நகர அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் பல்வேறு நகர்ப்புற நெருக்கடிகள் உருவாகியுள்ளன. எமது உள்நாட்டு அடையாளத்தைப் பாதுகாத்து, நாட்டிற்குப் பொருத்தமான மிடுக்கானதொரு நகர முறைமையை உருவாக்குதல் வேண்டும். மக்கள் வாழ்க்கையை முடக்கிப் போடும், பசுமையான சூழலை அழிக்கும், மக்கள் பணத்தை அதிகம் செலவிடும், பயனற்ற, முறையற்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களை முன்னெடுத்தலை நிறுத்துதல் வேண்டும். அதற்கமைய, திட்டமிடலுடன் கூடிய கருத்திட்டங்களை இனங் கண்டு, பிரதேச பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கக் கூடியவாறு மற்றும் பொதுமக்களின் நலனைப் போன்றே பிரதேசத்தின் முறையான அபிவிருத்தியின் பொருட்டும் செயற்படல் வேண்டும்

குறித்த மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தை வகுப்பதற்கு புதிய தொழிநுட்பம் மற்றும் புதிய செயன்முறைகளைப் பயன்படுத்துவதுடன், தொழில்வாண்மையாளர்கள், நிபுணர்கள், உரிய திறத்தவர்கள் மற்றும் சமூகத்தினருடன் விரிவான முறையில் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன என்பதை நான் புரிந்து கொண்டேன். இப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபை தலைவர், பணிப்பாளர் நாயகம், திட்டமிடல் குழு மற்றும் இம் முயற்சியை வெற்றிகரமாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துப் பணிக்குழுவினரதும் அர்ப்பணிப்பை நான் பெரிதும் மதிக்கிறேன். அதே போன்று, மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு ஒன்றிணைந்து செயற்பட்ட குறித்த உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் துறையின் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் நான் பெரிதும் மதிக்கிறேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க
***கௌரவ பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர்***

# கௌரவத் தலைவரின் செய்தி



தற்போது இலங்கை நகர்ப்புறச் சூழல் நிலைமைகளை முகாமை செய்யும் பொறுப்புடன் திட்டமிடலை நடைமுறைப்படுத்தும் முன்னணி நிறுவனமாகத் திகழ்வது நகர அபிவிருத்தி அதிகார சபையேயாகும். நகர்ப்புறங்களிலுள்ள அனைத்து மக்களதும் நலனுக்காக அபிவிருத்தி மேம்பாடு மற்றும் ஒழுங்குப்படுத்தலின் பொருட்டு ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் 1978 ஆம் ஆண்டு அதிகார சபை தாபிக்கப்பட்டது.

1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் (பகுதி II இன் 8 ஆம் பிரிவின் 8 அ (1)) பிரகாரம் அமைச்சரினால் நகர அபிவிருத்திப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பது அத்தியாவசியமானதொதரு விடயமாக மாறியுள்ளது. மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லைக்கு வகுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலானது குறித்த ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையை நகர அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதன் விளைவாக நகர அபிவிருத்தி அதிகார சபையானது மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சூழல் சார் விடயங்களைக் கவனத்திற் கெண்டு, மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் நாம் செல்லும் வழியானது மென்மையானது அல்ல என்பதுடன், சவால்கள் நிறைந்த, நிச்சயமற்றவற்றால் உருவாகிய மோசமான எதிர்பார்ப்புக்களினால் அசுத்தமடைந்த கரடுமுரடானதொரு பாதை என்பதை நாம் மறக்கவில்லை. தேவையான முறைமை, கருவிகள் மற்றும் மூலோபாயங்களுடன் சவால்களுக்கு முகம் கொடுக்கவும், நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்வதன் மூலம் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையை முறையானதொரு அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்வதற்கும் நகர அபிவிருத்தி அதிகார சபையானது தற்போது உறுதி பூண்டுள்ளது.

இவ் விரிவான பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அரப்பணிப்புடன் அயராது செயற்படும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் குழுவுக்கும் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதற்கு இதனை ஒரு வாய்ப்பாகக் கொள்வதோடு, இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இதற்கு இணையான ஒத்துழைப்பை எதிர்காலத்திலும் எதிர்பார்க்கின்றேன்.

கலாநிதி ஜகத் முணசிங்ஹ
***தலைவர் – நகர அபிவிருத்தி அதிகார சபை***

# கௌரவ நகர முதல்வரின் செய்தி



பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லைக்குத் திருத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டமொன்றை வகுத்து, இவ்வாறாக சட்ட ரீதியாக பிரகடனப்படுத்துதல் குறித்து முதலில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதேசத்தில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் தேவைப்பாடுகளை இனங் கண்டு, பிரதேச மக்களைப் போன்றே நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வாறான அபிவிருத்தித் திட்டமொன்றை வகுத்தலானது முறை-யானதொரு அபிவிருத்திக்கு மிகவும் உகந்ததாகும். எமது கருத்துக்களைப் போன்றே பிரதேசத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிக்குழுவினர், பிரதேசவாசிகள் மற்றும் அபிவிருத்தி முதலீட்டாளர்கள் போன்ற பல்வேறு துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறித்த தரப்பினர்களை தொடர்புபடுத்தி, இவ் அபிவிருத்தித் திட்டம் வகுக்கப்படுகின்றமைக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

பிரதேசத்தின் அபிவிருத்தியை முறைப்படுத்தி, பொதுமக்களின் நலனுக்காக இவ் அபிவிருத்தித் திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வலிமை குறைவின்றிக் கிடை-த்திடப் பிரார்த்திக்கின்றேன்.

சமன்லால் பிரனாந்து,
***கௌரவ நகர முதல்வர்,***
***மொறட்டுவை மாநகர சபை***

# முன்னுரை

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 3(1) மற்றும் (2) ஆகிய பிரிவுகளின் அதிகாரங்களின் பிரகாரம் ஏதேனும் ஒரு பிரதேசத்தை நகர அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த நகர அபிவிருத்தி குறித்த விடய அமைச்சருக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதிய மற்றும் 26/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நகர அபிவிருத்தி குறித்த விடய அமைச்சரினால் மொறட்டுவை பிரதேசம், நகர அபிவிருத்தி அதிகார எல்லையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லைக்கு 2019 – 2030 காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் இவ் அபிவிருத்தித் திட்டமானது பிரதேச மக்களுக்கு பௌதீக, பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான நீடித்த அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் வகுக்கப்பட்டுள்ளதுடன், 2018 வரையான காலம் வரை பிரதேசத்தை அண்டிய தகவல்கள் இதன் பொருட்டு பயன்படுத்தப்பட்டன.

இவ் அபிவிருத்தித் திட்டமானது முதலாம் மற்றும் இரண்டாம் தொகுதி என இரு நூல்களைக் கொண்டிருப்பதோடு, முதலாம் தொகுதியானது பகுதி ஒன்று மற்றும் பகுதி இரண்டு என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. அதன் முதலாம் பகுதி மூன்று அத்தியாயங்கள் ஊடாகத் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளதுடன். அதன் முதலாவது அத்தியாயத்தின் மூலம் மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தின் விடயப் பரப்பு, அபிவிருத்தித் திட்டத்தை வகுப்பதற்குப் பங்களிப்பு வழங்கிய திறத்தவர்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டத்தை வகுக்கையில் பின்பற்றப்பட்ட திட்டமிடற் படிமுறைகள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது அத்தியாயத்தின் மூலம் மொறட்டுவை பிரதேசத்தின் வரலாற்றுப் பின்புலம் மற்றும் பௌதீக, பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூகத் துறைகளின் கீழ் திட்டம் மற்றும் சூழ்நிலை குறித்து விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், மொறட்டுவை பிரதேசத்துக்குரிய தேசிய மற்றும் வலயமாக்கல் தொடர்புகள், பூர்வாங்கத் திட்ட முயற்சிகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்தும் மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தை வகுக்க வேண்டிய திட்டமிடல் வரையறை செய்தலும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மீளாய்வு ஊடாக இனங் காணப்பட்ட சிக்கல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மொறட்டுவை திட்டமிடல் பிரதேசத்திற்கு அபிவிருத்தித் திட்டமொன்றை வகுக்க வேண்டியதன் அவசியம் குறித்து மூன்றாம் அத்தியாயத்திலும் விரிவாகக் கலந்துரையாடப்படும்.
அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் பகுதி நான்காம் அத்தியாயத்துடன் ஆரம்பமாவதோடு, அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நோக்கு மற்றும் அந் நோக்கை அடைவதற்கான நோக்கங்கள் மற்றும் அதற்குரிய குறிக்கோள்களும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மொறட்டுவை திட்டமிடல் அதிகார எல்லையில் இனங் காணப்பட்ட பலங்கள், பலவீனங்கள், அபிவிருத்தி வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஐந்தாவது அத்தியாயத்தின் மூலம் விரிவாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இத் திட்டத்தின் நீண்ட கால நோக்கங்கள் ஊடாக நோக்கை அடைவதற்கு மற்றும் உத்தேச எதிர்கால அபிவிருத்தியை அடைவதற்குரிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளும் முறை குறித்து ஆறாம் அத்தியாயத்தின் கீழ் தெளிவுபடுத்தப்படும். அதன் போது 2019 – 2030 காலப் பகுதிக்கு இனங் காணப்பட்ட அபிவிருத்தி மூலோபாயங்கள் ஊடாக உத்தேச நிலப் பயன்பாட்டுத் திட்டம் குறித்து கலந்துரையாடப்படுவதோடு, உத்தேச நோக்கங்களை அடைவதன் பொருட்டு சமூக மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மூலோபாயங்கள், பொருளாதார அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் நீடித்த சுற்றாடல் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அதன் மூலோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேச அபிவிருத்திக் கருத்திட்டம் குறித்தும் விரிவாக விபரிக்கப்படும்.

இரண்டாம் தொகுதியின் முதலாம் அத்தியாயத்தின் மூலம் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக இனங்காணப்பட்ட வலயங்கள் மற்றும் அவற்றின் எல்லைகள், ஒவ்வொரு வலயத்திற்கும் தனித்துவமான ஒழுங்கு விதிகள் குறித்து தெளிவுப்படுத்தப்படுவதுடன், இரண்டாம் அத்தியாயத்தில்" திட்டமிடல் மற்றும் கட்டிட ஒழுங்கு விதிகள்" விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதன் ஊடாக மேற்குறித்த வலயங்களின் காணிகள் மற்றும் கட்டிட அபிவிருத்திக்கு நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

# உள்ளடக்கம்

வாழ்த்துரைt III
கௌரவ அமைச்சரின் செய்தி IV
கௌரவத் தலைவரின் செய்தி V
கௌரவ நகர முதல்வரின் செய்தி VI
முன்னுரை VII
உள்ளடக்கம் VIII

பகுதி ஒன்று

அத்தியாயம் 01 – அபிவிருத்தித் திட்டத்தின் பின்புலம் 01 - 06

1.1. அறிமுகம் 02
1.2. அபிவிருத்தித் திட்டத்தின் ரப்பினர்கள் 02
1.3. அபிவிருத்தித் திட்டத்தின் விடயப் பரப்பு 04
1.4. திட்டமிடல் செயற்பாடு 05

அத்தியாயம் 02 – ஆரம்ப ஆய்வு 07 - 42

2.1. ஆய்வு எல்லை 08
2.2. திட்டமிடல் மற்றும் சூழ்நிலை 10
2.3. திட்டமிடல் பிரதேசத்தை நிர்ணயித்தல் 41

அத்தியாயம் 03 – அபிவிருத்தித் திட்டமொன்றின் தேவைப்பாடு 43 - 50

3.1. அறிமுகம் 44
3.2. சிக்கல்களை இனங் காணல் 44

பகுதி இரண்டு

கௌரவ அமைச்சரின் அங்கீகாரம் 52
வர்த்தமானி அறிவித்தல் 53

அத்தியாயம் 04 –அபிவிருத்தித் திட்டச் சட்டகம் 59 -63

4.1. அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கு 60
4.2. நோக்கின் வெளிப்பாடு 61
4.3. அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்கள் 62

அத்தியாயம் 05 – SWOT பகுப்பாய்வு 65 -91

5.1. சாராம்சப்படுத்தப்பட்ட SWOT பகுப்பாய்வு 66
5.2. விரிவான SWOT பகுப்பாய்வு 69

அத்தியாயம் 06 – அபிவிருத்தித் திட்டம் 93 -176

6.1. கருத்துருத் திட்டம் 94
6.2. உத்தேச நிலப் பயன்பாட்டுத் திட்டம் 96
6.3.உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் மூலோபாயத் திட்டம் 99

6.3.1. சேவை முகாமைத்துவத் திட்டம் 99
6.3.2. வீதிப் போக்குவரத்துத் திட்டம் 106
6.3.3. நீர் விநியோகத் திட்டம் 122
6.3.4. மின் விநியோகத் ட்டம் 124
6.3.5. மலம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத் திட்டம் 126
6.3.6. திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் 129

6.4. பொருளாதார அபிவிருத்தி மூலோபாயத் திட்டம் 132

6.4.1. ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தித் திட்டம் 132
6.4.2. விடயப் பரப்பு 132
6.4.3. பொருளாதார அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் கருத்திட்டங்கள் 134

6.5.நீடித்த சுற்றாடல் அபிவிருத்தி மூலோபாயத் திட்டம் 137

6.5.1. சுற்றாடல் பாதுகாப்புத் திட்டம் 139
6.5.2. நிலத்தோற்ற முகாமைத்துவத் திட்டம் 141
6.5.3. பொது திறந்தவெளி மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் குறித்த இடம்சார்ந்த 144
6.5.4. அனர்த்த முகாமைத்துவத் திட்டம் 147

6.6.கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் மூலோபாயத் திட்டம் 148

6.6.1. மூலோபாயக் கருத்திட்டம் 148
6.6.2. நிறுவனம் சார் கட்டமைப்பு 184

சுருக்கக் குறியீடு 187
வரைபடப் பட்டியல் 188
உருக்கள் பட்டியல் 188
அட்டவணைப் பட்டியல் 189
இணைப்புக்கள் 191
மேலதிக வாசிப்புக்கள் 206



# பகுதி ஒன்று

# 01

அத்தியாயம்



# அபிவிருத்தித் திட்டத்தின் பின்புலம்

**அத்தியாயம் 01**
அபிவிருத்தித் திட்டத்தின் பின்புலம்

அறிமுகம்

அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதிகள்

## 1.1. அறிமுகம்

நகர அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படும் பிரதேசங்களில் பொருளாதாரம், பௌதீகம், சமூகம் மற்றும் சுற்றாடல் ஆகிய துறைகள் குறித்து கவனம் செலுத்தி, குறித்தத் துறைகளை மேம்படுத்தல் மற்றும் முறைப்படுத்தலின் பொருட்டு ஒருங்கிணைந்த திட்டமொன்றை வகுக்கும் செயற்பாட்டை அபிவிருத்திக் கருத்திட்ட வகுத்தல் என அறிமுகம் செய்யலாம்.

1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3(1) மற்றும் (2) ஆகிய பிரிவுகளின் தத்துவங்களின் பிரகாரம் ஏதேனும் ஒரு பிரதேசம் நகர அபிவிருத்தி அதிகார எல்லையாக நகர அபிவிருத்தி குறித்த விடயப் பொறுப்பு அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்படலாம் என்பதோடு, அவ்வாறு பிரகடனப்படுத்தப்படும் பிரதேசத்திற்குரிய அபிவிருத்தித் திட்டத்தை வகுக்கும் அதிகாரமானது 1982ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8 II அ வின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

1930ஆம் ஆண்டில் நகரசபை அதிகார எல்லையாகக் காணப்பட்ட மொறட்டுவை நகரமானது 1998ஆம் ஆண்டில் மாநகர சபையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு, 1979 மார்ச் 07ஆம் திகதிய மற்றும் 26/8ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நகர அபிவிருத்தி குறித்த விடயப் பொறுப்பு அமைச்சரினால் மொறட்டுவை நகரமானது நகர அபிவிருத்தி அதிகார எல்லையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த அதிகார எல்லையின் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முதன் முறையாக 2005 – 2020ற்காக வகுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமானது 2005 ஜூன் 07ஆம் திகதி மற்றும் 1396/7ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

2005 – 2020ற்காக வகுக்கப்பட்ட மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தின் கால எல்லை முடிவுறும் தருவாயில் காணப்படுகின்ற காரணத்தினாலும், பிரதேசத்தின் புதிய பௌதீகம், பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் ஆகிய துறைகளுக்கு மூலோபாய தலையீட்டிற்கான தேவைப்பாடு எழுந்துள்ளமையின் காரணமாகவும் மொறட்டுவை நகரத்திற்கு புதிய அபிவிருத்தித் திட்டமொன்றை வகுக்கும் பணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 1.2. அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதிகள்

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தை வகுக்கையில் பிரதானமாக பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்வதற்கு எண்ணியதோடு, கைத்தொழில், சுற்றுச்சூழல் , பொருளாதாரம், நிர்வாகம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய துறைகளின் பிரதிநிதித்துவ நிறுவனங்களின் கருத்துக்களும் யோசனைகளும் அபிவிருத்தித் திட்டத்தை வகுப்பதற்குப் பயன்-படுத்தப்பட்டன. குறித்த பிரதிநிதிகள் பின்வரும் ஒழுங்கில் அமைகின்றனர்.

### பிரதான பிரதிநிதி

1. *மொறட்டுவை மாநகர சபை*

### ஆலோசனை நிறுவனங்கள்

- *மொறட்டுவை பிரதேச செயலகம்*
- *தொகைமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்*
- *தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்*
- *தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை*
- *மத்திய சுற்றாடல் அதிகார சபை*
- *கரையோரப் பாதுகாப்பு திணைக்களம்*

- இலங்கை புகையிரத திணைக்களம்
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கை காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனம்
- இலங்கை போக்குவரத்துச் சபை
- வீதி அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கை ரெலிகொம்
- பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
- மொறட்டுவை பொலிஸ் நிலையம்
- டீ சொய்சா மாவட்ட வைத்தியசாலை – லுனாவை
- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை
- சிவில் விமான சேவை அதிகார சபை
- கட்டிட திணைக்களம்
- தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்
- காணி உபயோகக் கொள்கைத் திட்டமில் திணைக்களம்
- மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
- கொழும்பு மாவட்ட செயலகம்
- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
- இலங்கை மின்சார தனியார் கம்பனி
- இலங்கை மின்சார சபை

## ஏனைய பிரதிநிதிகள்

- தச்சு கைத்தொழிற் சங்கம் – மொறட்டுவை
- முச்சக்கர வண்டிகள் சங்கம் – மொறட்டுவை
- வர்த்தகச் சங்கம் – மொறட்டுவை
- கடற்றொழில் சங்கம் – மொறட்டுவை

## பிரதான திட்டமிடல் குழு, நகர அபிவிருத்தி அதிகார சபை

- திரு. ஜனக் ரணவீர – பணிப்பாளர் (மேல் மாகாணம்)
- திட்டமிடலாளர். தயானி பிரென்சிஸ் – பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) மேல் மாகாண பிரிவு
- திருமதி. தமரா ஜயகொட - பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) மேல் மாகாண பிரிவு
- திரு. பீ.எல். ரஞ்சித் – உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) மேல் மாகாண பிரிவு
- திருமதி. பி.டீ.சீ.ஜயமாலி ஜயவர்தன – (திட்டமிடல் உதவியாளர்) மேல் மாகாண பிரிவு
- திருமதி. ஷானிக்கா சுமனபால – உதவி திட்டமிடல் உத்தியோகத்தர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு)
- செல்வி. மொனாலி ரூபசிங்ஹ - உதவி திட்டமிடல் உத்தியோகத்தர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு)

## ஏனைய ஒத்துழைப்பு திட்டமிடல் குழு - நகர அபிவிருத்தி அதிகார சபை

- அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு
- புவியியல் தகவல்கள் முறைமைப் பிரிவு
- சுற்றாடல் மற்றும் நிலப்பரப்பு பிரிவு

# 1.3. அபிவிருத்தித் திட்டத்தின் விடயப் பரப்பு

கொழும்பு மாவட்டத்திற்குரிய பிரதான மாநகர சபையான மொறட்டுவை நகரின் ஊடாக செல்லும் கொழும்பு – காலி பிரதான வீதி மற்றும் கடலோர புகையிரத வீதி காரணமாக மேல் மாகாணத்திற்கும் தென் மாகாணத்திற்கும் இடையே வலய ரீதியிலான ஒரு தொடர்பு ஏற்பட்டுள்ளது. அதே போன்று தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் ஊடாக வகுக்கப்பட்ட தேசிய பௌதீக கட்டமைப்பு ரீதியான திட்டம் 2030 பிரகாரம் மொறட்டுவை நகரமானது கொழும்பு அதி நகர மயமாக்கல் வலயத்தினுள்ளும் அமைந்துள்ளதோடு, மேல் மாகாண வலய பெருநகர திட்டத்திற்கு அமைய மொறட்டுவை நகரமானது அதிக அடர்த்தியுடைய வலயத்தில் அமைந்துள்ளது. கொழும்பு நகர்ப்புற அபிவிருத்தி வலய கட்டமைப்பு ரீதியான திட்டத்திற்கு அமைய மொறட்டுவை நகரத்தை இரண்டாம் நிலை நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாலும் மேற்குறித்த திட்டம் தொடர்பில் ஆராய்ந்து மொறட்டுவை நகரத்தை இரண்டாம் நிலை நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகருக்கு மிக அண்மையில் அமைந்துள்ள மொறட்டுவை நகரமானது நகர சூழலைக் கொண்டமைந்திருந்தாலும் கண்கவர் கடற்கரை, பொல்கொட ஆறு மற்றும் லுனாவை களப்பு என்பவற்றால் சூழப்பட்ட இயற்கை அமைவுக்கு அமைய மொறட்டுவை நகரத்தை இயற்கை எழில் மிகுந்த முழுமையான ஒரு நகரமாகக் குறிப்பிடலாம். இருப்பினும், நகரில் இடம்பெறும் முறைகேடான செயற்பாடுகள் காரணமாக எழுந்துள்ள சுற்றுச்சூழல் ரீதியான மற்றும் சமூக ரீதியான சிக்கல்களைத் தவிர்த்து, முறையான அபிவிருத்தியை அடைவதற்கு மூலோபாய ரீதியிலான நகர அபிவிருத்தித் திட்டமொன்றின் தேவை எழுந்துள்ளது

கொழும்பு வர்த்தக நகரத்தில் இடம்பெறும் நகரமயமாக்கலுக்கு இணையாக மொறட்டுவை நகரமயமாக்கலோடு எழக் கூடிய சிக்கல்களைக் குறைத்து, முறையானதொரு அபிவிருத்தியை நோக்கி ஈடுபடுத்தும் நோக்கில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதன் ஊடாக பசுமை மிகு வசிப்பிட நகரமொன்றை உருவாக்க எண்ணுவதோடு, 2030ஆம் வருடமாகையில் இந் நிலையை அடைவதன் பொருட்டு நிலையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு மூலோபாயங்கள், தரிப்பிட வசதிகள் அபிவிருத்தி மூலோபாயங்கள், பொருளாதார அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி மூலோபாயங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, பௌதீக, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய துறைகளின் நிலையான அபிவிருத்தியின் பொருட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

2019 – 2030 இன் பொருட்டு வகுக்கப்படும் மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூலோபாயத் திட்டங்கள் ஊடாக மேற்குறித்த துறைகளுக்கு ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டமொன்று வகுக்கப்படுவதுடன், இத் திட்டத்தை வகுப்பதற்கு அடிப்படையாக அமைந்த நோக்கு நீண்ட காலத்தைக் கொண்டதாக இருப்பினும் அபிவிருத்தித் திட்டத்தை 12 வருட காலப் பகுதிக்கு வகுப்பதனை எல்லையாகக் குறிப்பிடலாம். நடைமுறை நிலப் பயன்பாட்டு முறை குறித்து நோக்குகையில் மொறட்டுவை நகரமானது வணிகம் மற்றும் கைத்தொழில் பயன்பாட்டிற்கு அதிக ஈடுபாடு காட்டினாலும் கொழும்பு மையப் பகுதியின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய நீரியல் அபிவிருத்தியை மொறட்டுவை நகரில் ஏற்படுத்துவதன் மூலம் சுற்றுலாத் துறையை விருத்தி செய்தலை இத் திட்டத்தின் எல்லையாகக் காட்டலாம்.

## 1.4. திட்டமிடல் செயற்பாடு

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லைக்கான அபிவிருத்தித் திட்டத்தை வகுக்கையில் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை திட்டமிடல் செயற்பாடொன்றிற்கு அமைய செயற்பட்டதோடு, அது பத்து கட்டங்களைக் கொண்டமைந்துள்ளது. அத்துடன் குறித்த திட்டமிடல் படிமுறைகளை உரு 1.1 மூலம் பின்வருமாறு சாராம்சப்படுத்தலாம்.

**பின்புல ஆய்வு**

ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளைத் திரட்டல் : கள ஆய்வு, பலதரப்பட்ட திறத்தவர்களுடன் மேற்கொண்ட நேர்முகக் கலந்துரையாடல்கள், அலுவலகத் தரவுகள், இணையத்தளம், கூகுள் வரைபடம், ஆவணங்கள் பரிசீலனை மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. இதன் போது ஆரம்ப ஆய்வுகள் மற்றும் தர பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் போது புவியியல் அமைப்பைப் போன்றே வரலாற்று ரீதியிலும் மொறட்டுவை பிரதேசத்தில் காணப்படும் முக்கியத்துவம், வலய ரீதியிலான தொடர்புகள் என்பவற்றை இனங்காணல், பொருளாதார, சமூக, சுற்றாடல் மற்றும் பௌதீகத் துறைகளை உள்ளடக்கும் வகையில் ஆரம்ப ஆய்வுகளை மேற்கொண்டு, இப் பிரதேசம் குறித்த சிறந்த தெளிவைப் பெற்றுக் கொள்ளல். (2017 ஜூன் முதல் நவம்பர் வரை)

**விடயப் பரப்பு**

தற்போது பிரதேசத்தில் காணப்படும் நிலையை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அபிவிருத்திப் போக்குகளை இனங் காணல்.
(2017 நவம்பர் முதல் 2018 ஜனவரி வரை)

**சிக்கல்கள் மற்றும் சாத்தியக்கூறுகளை இனங் காணல்**

2017-12-11ஆம் திகதி பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுள்ள திறத்தவர்களை தொடர்புபடுத்தி நெவ்ரோ பீச் ஹோட்டலில் நடைபெற்ற செயலமர்வின் போது பெற்றுக் கொண்ட கருத்துக்கள் மற்றும் யோசனைகளுடன் தரவுப் பகுப்பாய்வின் மூலம் சிக்கல்கள் மற்றும் சாத்தியக்கூறுகளை இனங் காணல்.
(2017 டிசம்பர் முதல் 2018 பெப்ரவரி வரை)

**நோக்கு, குறிக்கோள் மற்றும் நோக்கங்கள்**

சிக்கல்கள், சாத்தியக்கூறுகள் மற்றும் அபிவிருத்திப் போக்குகள் பிரகாரம் பொருளாதார, பௌதீக, சுற்றாடல் மற்றும் சமூகம் போன்ற துறைகள் ஒருங்கிணைந்து, நகர அபிவிருத்தி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நோக்கு, குறிக்கோள் மற்றும் நோக்கங்களை கட்டியெழுப்பல்.
(2018 மார்ச் முதல் மே வரை)

**விரிவான பகுப்பாய்வு**

SWOT பகுப்பாய்வு மூலம் நோக்கு மற்றும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு விரிவான முறையில் தரவுகளை பகுப்பாய்வு செய்தல்.
(2018 மே முதல் ஆகஸ்ட் வரை)

**திட்டம் மற்றும் வழிகள்**

நோக்கு மற்றும் நோக்கங்களை அடைவதற்கு மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லைக்கான கருத்தமைவு திட்டம் மூலம் 2030 நிலப் பயன்பாட்டு முறையை திட்டமிடல் மற்றும் அதற்குரிய தரிப்பிட வசதிகளின் அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலையான சுற்றாடல் அபிவிருத்தியின் பொருட்டான மூலோபாயத் திட்டங்களுக்கு மேலதிகமாக கருத்திட்ட அமுலாக்க மூலோபாயங்களை ஏற்பாடு செய்தல். (2018 ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை)

**திட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள்**

திட்டம் மற்றும் கட்டிட ஒழுங்குவிதிகளை வகுத்தல் : காணி அபிவிருத்தி தொடர்பான சட்ட திட்டங்கள், காணிப் பாவனை தொடர்பான சட்ட திட்டங்கள், சுற்றாடல் முக்கியத்துவம் மிகுந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான சட்ட திட்டங்களைப் போன்றே, அபிவிருத்தித் திட்டத்தை அடைகையில் எழக் கூடியவை எனக் கருதும் சிக்கல் நிறைந்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கான ஒழுங்குவிதிகளை வகுத்தல். (2018 டிசம்பர் முதல் மார்ச் வரை)

**கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்**

அபிவிருத்தித் திட்டத்தின் பொருட்டு திறத்தவர்களின் கருத்துக்கள், யோசனைகள், எதிர்ப்புக்கள் மற்றும் திருத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தொழில் வல்லுநர்களிடம் அபிவிருத்தித் திட்டத்தை முன் வைத்தல்.

**அண்ணளவான திட்ட அறிக்கையைக் கையளித்தல்**

அபிவிருத்தித் திட்டத்தை தலைமை திட்டக் குழுவிடம் முன் வைத்தல் மற்றும் அபிவிருத்தித் திட்டத்தை பிரிவிடம் கையளித்தல்

**அங்கீகாரம் மற்றும் பிரகடனப்படுத்தல்**

நகர அபிவிருத்தி அதிகார சபை முகாமைத்துவக் குழுவினதும் கௌரவ அமைச்சரினதும் அங்கீகாரத்தை அபிவிருத்தித் திட்டத்திற்குப் பெற்றுக் கொள்ளல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்து, சட்டமாக்கல்.

***உரு 1.1 :*** *மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தை வகுக்கும் செயற்பாடு*

# 02

## அத்தியாயம்



# ஆரம்ப ஆய்வு

நடைமுறைத் திட்டமிடல் பிரதேசத்தின் நிலைமை ஆய்வின் ஊடாக அண்மித்த எதிர்காலத்தைப் போன்றே எதிர்வரும் 12 வருட காலப் பகுதியிலும் நடைமுறைப்படுத்தக் கூடிய அபிவிருத்தி யோசனைகளை முன் வைப்பதன் பொருட்டு பயன்படுத்த வேண்டிய அபிவிருத்திப் போக்குகள் இனங் காணப்பட்டன. அதற்கமைய இந்த அத்தியாயமானது, ஆய்வுப் பிரதேசம், திட்டமிடலும் நிலைமையும் மற்றும் திட்டமிடல் பிரதேசத்தை நிர்ணயித்தல் என்றவாறு பிரதானமான மூன்று பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.


ஆய்வுப் பிரதேசத்தின் கீழ் மொறட்டுவை நகரின் இட அமைவு மற்றும் பௌதீக எல்லைகள் குறித்து இனங் காணப்பட்டதுடன், திட்டமிடல் மற்றும் நிலைமையின் கீழ் மொறட்டுவை நகரின் வரலாற்றுப் பின்புலம், பௌதீக, சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் பண்புகள், முன்னைய திட்டமிடல் முயற்சிகள் மற்றும் நடைமுறை நிலப் பயன்பாட்டு முறைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டன. திட்டமிடல் பிரதேசத்தை நிர்ணயிக்கையில் மேற்குறித்த அனைத்து விடயங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டதுடன், மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தை வகுப்பதற்கான செற்பாட்டு எல்லைகள் மற்றும் நிர்வாக எல்லைகளின் அடிப்படையில் திட்டமிடல் எல்லை நிர்ணயிக்கப்பட்டது.

## 2.1. ஆய்வுப் பிரதேசம்

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு – காலி பிரதான வீதியில் கொழும்பிலிருந்து 19 கிலோ மீற்றர் தெற்கில் அமைந்துள்ள மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையானது மூன்று பக்கங்களாலும் இயற்கையான எல்லைகளால் சூழப்பட்ட 23.4 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட நிலப்பரப்பாகும். மேற்கு திசையில் அலங்கார கடற்கரை, கிழக்கிலும் தெற்கிலும் பொல்கொடை ஆறு என்றவாறு மூன்று புறங்களிலும் நீரினால் சூழப்பட்டு அமைந்துள்ள நகர அதிகார எல்லையான மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையை கொழும்பு நகருக்குரிய ஐந்து மாநகர சபைகளுள் ஒன்றாகக் குறிப்பிட முடியும் என்பதுடன், 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. உரு 2.1 மூலம் மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் இட அமைவு காட்டப்பட்டுள்ளது.

அதே போன்று, வடக்கில் இரத்மலானை பிரதேச செயலகம், கிழக்கில் பொல்கொடை ஆறு மற்றும் கெஸ்பேவை பிரதேச செயலகப் பிரிவு, மேற்கில் 10.5 கிலோ மீற்றர் அளவிலான கடற்கரை, தெற்கில் பொல்கொடை ஆறு காணப்படுவதுடன், களுத்துறை மாவட்டமானது மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையின் பௌதீக மற்றும் நிர்வாக எல்லையாகும்.

## ஆய்வுப் பிரதேசம்




***உரு 2.1 :*** *மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் இட அமைவு*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*


## 2.2. திட்டமிடல் மற்றும் நிலைமை

மொறட்டுவை நகரத்தின் திட்டமிடல் மற்றும் நிலைமை பகுப்பாய்வு ஆய்விற்காக முதலில் நகரத்தின் வரலாற்று நிலைமை ஆய்வு செய்யப்பட்டதுடன், பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ஆகிய துறைகளின் கீழ் நடைமுறை திட்டமில் பிரதேசம் இனங் காணப்பட்டதுடன், முன்னைய திட்டமிடல் முயற்சிகளின் மூலம் மொறட்டுவை நகரத்தை தேசிய, வலய ரீதியிலான மற்றும் பிரதேச ரீதியில் அமைத்தலும் இவ் அத்தியாயத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

### 2.2.1. வரலாற்றுப் பின்புலம் மற்றும் மாற்றம்

#### 2.2.1.1. புராணக் கதைகளுடன் தொடர்புடைய பெயர் மாற்றம்

பழங்கால புராணக் கதைகளின் படி மொறட்டுவையில் பூவம் (சிங்கள மொழியில் “மொரகஸ்” எனப்படும்) வனம் ஒன்று காணப்பட்டதாகவும், மொரகஸ் வனம் ”மொற அட்ட” ஆகி பின்னர் ”முற அட்டுவை” ஆகவும், பிற் காலத்தில் அது மொறட்டுவை ஆகவும் மாற்றம் அடைந்ததாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும், வடமொழியில் கூறப்பட்டுள்ள வகையில் ”மோறு” என்பதைக் குறிக்க ”மொறாட்டா” என்பது பயன்படுத்தப்படுவதால் அது மொறட்டுவை என மாற்றம் அடைந்தது என மற்றுமொரு பழங்கதை கூறுகிறது.




***உரு 2.2 :** பழைய மொறட்டுவை நகரம்*
***மூலம் :** லங்காபுர இணையத்தளம்*

திசர சங்தேசய, கிரா சங்தேசய மற்றும் கோக்கில சங்தேசய ஆகிய தூது இலக்கியங்களில் மொறட்டுவை குறித்து பல்வேறு தகவல்கள் காணப்படுவதோடு, ஏறத்தாழ கி.பி. 1348இல் ஐந்தாம் பரகும்பா அரசன் தெதீகமபுரவை ஆட்சி செய்த காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் திசர சங்தேசயில்” நெத்து சித்து சனசவமின் நொசலவ மொறட்டு எளியே” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிரா சங்தேசயில் ”கவப்பல் கெளின கெளியன யவ இட்டு மொறட்டு எளியெஹி” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோக்கில சங்தேசயில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு லக்ஷப்பத்திய எனும் கிராமத்தில் தென்னந் தோப்பு ஒன்று இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.2.1.2 நிர்வாக எல்லைகளின் முறையான மாற்றம்

*(அ) காலணித்துவ ஆட்சிக்கு முன்னர்*

இலங்கை காலணித்துவ ஆட்சிக்கு உட்படுவதற்கு முன்னர் மொறட்டுவை நகரமானது மொறட்டு எளிய, மொறட்டு பிட்டிய, மொறட்டு உயன, மொறட்டு முல்ல, மொறட்டு வெல்ல, மொறட்டு திக்வெல்ல என ஆறு நிர்வாகப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

*(ஆ) காலணித்துவ ஆட்சிக் காலம்*

பல்வேறு காலப்பகுதிகளில் ஏற்பட்ட வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள் காரணமாக மொறட்டுவை நிர்வாக எல்லைகள் முறையே மாற்றங்களுக்கு உள்ளானதுடன், 1930ஆம் ஆண்டில் மொறட்டுவை நகரசபை நிர்வாகப் பிரதேசம் தாபிக்கப்படும் வரையான முறையான மாற்றங்கள் பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் – கி.பி. 1735 இல், அதாவது ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் மொறட்டுவையில் அது வரை காலமும் காணப்பட்ட நிர்வாகப் பிரதேசத்தை மேலும் விரிவுப்படுத்தி, கொரலவெல்ல பிரதேசமும் மொறட்டுவைக்குச் சொந்தமான பிரதேசமாகப் பெயரிடப்பட்டது.

பிரித்தானியர் ஆட்சிக் காலம் – கி.பி. 1835 இல் மொறட்டுவை பிரித்தானியர் ஆட்சிக்கு உள்ளானதோடு, அவர்கள் கட்டுக்குருந்த மற்றும் எகொட உயனவை மொறட்டுவையுடன் இணைத்தனர். 1908ஆம் ஆண்டில் மொறட்டுவை பிரதேச சபை தாபிக்கப்பட்டதுடன், 1930ஆம் ஆண்டில் அது மொறட்டுவை நகரசபையாக்கப்பட்டது.

மேலும், அந்நியர்களின் தாக்கத்தின் காரணமாக கலாசார ரீதியிலும் சமூக ரீதியிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டதோடு, கத்தோலிக்க மதம் பரவுவதற்கும், கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கும் அது காரணமாக அமைந்தது.

*(இ) காலணித்துவ ஆட்சிக் காலத்திற்குப் பின்னர்*

1979 மார்ச் 07ஆம் திகதிய மற்றும் 26/8ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மொறட்டுவை நகரசபை அதிகார எல்லையானது, நகர அபிவிருத்தி குறித்த விடயப் பொறுப்பு அமைச்சரினால் 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 3(1) மற்றும் (2) ஆகிய பிரிவுகளின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார எல்லையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

அது வரை காணப்பட்ட மொறட்டுவை நகர சபையானது 1998ஆம் ஆண்டில் மாநகர சபையாக தாபிக்கப்பட்டதுடன், தற்போது கொழும்பு மாவட்டத்திற்குரிய ஐந்து மாநகர சபைகளுள் ஒன்றாக அதனைக் குறிப்பிடலாம்.


## 2.2.2. தற்போதைய மொறட்டுவை

மொறட்டுவை பிரதேசத்தின் தற்போதைய திட்டமிடல் சூழலை அறிந்து கொள்வதற்காக பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் போன்ற துறைகள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

### 2.2.2.1.பௌதீகத் துறை


நிலப் பயன்பாட்டு முறை, தேசிய மற்றும் வலய ரீதியிலான தொடர்புகள், போக்குவரத்து அமைப்பு மற்றும் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற விடயங்களின் பகுப்பாய்வின் மூலம் மொறட்டுவைப் பிரதேசத்தின் பௌதீகப் பண்புகள் இனங் காணப்பட்டன.

*(அ) நிலப் பயன்பாட்டு முறை*




*உரு 2.3 : மொறட்டுவை நிலப் பயன்பாட்டுப் பரம்பல் – 2016*
*மூலம் : லங்காபுர இணையத்தளம்*

வரைபடம் 2.1 மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 2016ஆம் ஆண்டின் நிலப் பயன்பாட்டு முறைக்கு அமைய மொத்த நிலப் பரப்பின் 60% வசிப்பிடங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், வணிக நடவடிக்கைகளுடன் ஒப்பிடுகையில், 4% ற்கும் அதிகமான நிலப்பரப்பு கைத் தொழில் நடவடிகைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. மொறட்டுவை நகர சபை பகுதியின் 2016 நிலப் பயன்பாட்டுப் பரம்பல் உரு 2.3 மூலம் காட்டப்பட்டுள்ளது.




நிலப் பயன்பாடு-2016
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்

0 0.25 0.5 1 1.5 2 Kilometers

நகர அபிவிருத்தி அதிகார சபை
டிசம்பர் 2018


மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை | மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) | தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

*வரைபட இலக்கம் 2.1 : மொறட்டுவை நிலப் பயன்பாட்டு முறை* | *மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## *(ஆ) தேசிய மற்றும் வலய ரீதியிலான தொடர்புகள்*

மொறட்டுவை மாநகர சபை பகுதியில் தேசிய மற்றும் வலய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல அரச நிறுவனங்கள் காணப்படுவதோடு, மொறட்டுவை பல்கலைக்கழகம் உள்ளடங்கலாக ஏனைய நிறுவனங்களான ஜேர்மன் தொழிநுட்க் கல்லூரி, ஆத்தர் சீ கிளார்க் நிலையம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, சர்வதேச சொய்சா விளையாட்டரங்கு, இலங்கை தொழிநுட்ப அபிவிருத்தி சபை, கைவினைத் தொழில் உயர் பயிற்சி நிறுவனம், தேசிய வடிவமைப்பு நிலையம் போன்றன அவற்றுள் பிரதானமானவையாகும். மேலும், இரத்மலானை உள்ளக விமான நிலையமானது 5.4 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

வலய ரீதியிலான தொடர்புகளைக் கவனத்திற் கொள்கையில், உரு 2.4 மூலம் காட்டப்பட்டுள்ளவாறு வடக்கில் இரத்மலானை, கிழக்கில் பிலியந்தலை, தெற்கில் பாண-ந்துறை போன்ற நகர கேந்திர நிலையங்களுடன் மொறட்டுவை நகரமானது நேரடி உள்ளகத் தொடர்பைக் கொண்டுள்ளது. மேலும், கொழும்பை அண்மித்த பிரதேசத்திலிருந்து கொழும்பு மாவட்டத்தின் தெற்கு எல்லை வரையான காலி வீதியின் ஊடாக முறையே கொள்ளுப்பிட்டி, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெஹிவளை, இரத்மலானை மற்றும் மொறட்டுவை ஆகிய நகர கேந்திரங்களின் அமைவின் காரணமாக நேர்வரிசை அபிவிருத்தி ஏற்படுவதை இனங் காணலாம்.




***உரு 2.4 :*** *மொறட்டுவை நகருடன் தொடர்புடைய வலய ரீதியிலான தொடர்பு*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## *(இ) போக்குவரத்துத் திட்டமிடல்*

மொறட்டுவை பிரதேசத்தின் போக்குவரத்து அமைப்பானது காலி வீதியை முதன்மையாகக் கொண்ட நெடுஞ்சாலை முறைமை மற்றும் கடலோர புகையிரத வீதியைக் கொண்டமைந்துள்ளதோடு, மொறட்டுவை பேருந்து தரிப்பிடம் மற்றும் புகையிரத தரிப்பிடம் என்பன ஒன்றிணைந்து காணப்படுகின்றமையை முக்கியமானதொரு சாத்தியக் கூறாக இனங் காணலாம்.

### நெடுஞ்சாலை முறைமை

பிரதேசத்தின் நிலப் பயன்பாட்டு அமைப்பைக் கவனத்திற் கொள்கையில், நெடுஞ்சாலை முறைமைக்கு மொத்த நிலப் பரப்பில் 12% ஒதுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த நெடுஞ்சாலை முறைமையின் மொத்த நீளம் ஏறத்தாழ 160 கிலோ மீற்றராகும். அதன் போது காலி வீதி "ஏ" தரத்திலும், பிலியந்தலை – கட்டுபெந்தை வீதி "பீ" தரத்திலும், ஏனைய அனைத்து வீதிகளும் "சீ" மற்றும் "டீ" தரங்களிலும் உள்ளடங்கும். இருப்பினும் இவ் வீதிகளுள் ஏறத்தாழ 80% வீதிகள் 10 – 15 ற்கு இடைப்பட்ட குறைந்த பட்ச அகலத்தைக் கொண்டவை என்பதுடன், நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு நடவடிக்கைகள், நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மொறட்டுவை மாநகர சபை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

கொம்டிரான்ஸ் அறிக்கைக்கு அமைய காலி வீதி ஊடாக நாளொன்றிற்கு ஏறத்தாழ 30000 பயணிகள் பயணிப்பதோடு, மொறட்டுவை புதிய காலி வீதி ஊடாக நாளொன்றிற்கு கொழும்பு நோக்கி 11,600 வரையான வாகனங்களும், காலி நோக்கி 10,900 வரையான வாகனங்களும் பயணிப்பதோடு, வீர புரான் அப்பு ரஜ மாவத்தை வழியே காலி வீதி ஊடாக காலி நோக்கி 580 வாகனங்கள் வரையிலும், கொழும்பு நோக்கி 700 வாகனங்கள் வரையிலும் பயணிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### புகையிரத வீதி முறைமை

மேல் மாகாணத்தின் பிரதான புகையிரத வீதியான கடலோர புகையிரத வீதியில் 11 கிலோ மீற்றர் மொறட்டுவை திட்டமிடல் பகுதிக்கு உரித்தாவதோடு, மொறட்டுவை பிரதான புகையிரத நிலையத்தை கேந்திரமாகக் கொண்ட லுனாவை, அங்குலானை, கொரலவெல்ல மற்றும் எகொட உயன போன்ற நான்கு உள்ளக புகையிரத நிலையங்கள் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் அமைந்துள்ளன. இரத்மலானை புகையிரத நிலையத்திலிருந்து பாணந்துறை புகையிரத நிலையம் வரை புகையிரதம் பயணிக்கும் சாதாரண வேகம் மணித்தியாலத்திற்கு 18 கிலோ மீற்றராவதோடு, கொம்டிரான்ஸ் அறிக்கை படி பம்பலப்பிட்டியவிலிருந்து மொறட்டுவை வரை இரு திசைகளுக்கும் நாளாந்தம் 79,000 வரையான பயணிகள் பயணிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## *(ஈ) சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்*

### வீடமைப்பு

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையின் வீட்டுப் பரம்பலைக் கவனத்திற் கொள்கையில், கடற்கரை வலயம் மற்றும் புகையிரதக் காப்பு வழியே மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடும் மக்கள், ஆற்றுக் காப்பினைச் சூழவுள்ள குறைந்த வருமானமுடைய மக்கள், மொறட்டுமுல்ல, இந்திபெத்த, வில்லோரவத்தை அருகாமையில் மர வேலைகளை அடிப்படையாகக் கொண்ட மக்கள், கட்டுபெத்த பிரதேசத்தில் பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி, சொய்சாபுர, கல்தெமுல்ல, லக்ஷப்பத்திய, தெலவல போன்ற பிரதேசங்களில் நடுத்தர மற்றும் உயர் வகுப்பு வருமானமுடையோரும் வாழும் சமூக ரீதியிலான பின்புலம், பொருப்பன, தெலவல, மாலிகாவ வீதி போன்ற பிரதேசங்களில் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட பின்புலம் என்ற வகையில் தொடரான அபிவிருத்தியைக் காணலாம்.

தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் தொகைமதிப்பு அறிக்கையின் படி மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் 1981ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு வரை வீடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமை தொடர்பில் பின்வரும் அட்டவணை இலக்கம் 2.1 மூலம் விபரிக்கப்பட்டுள்ளது.

**அத்தியாயம் 02**
ஆரம்ப ஆய்வு


திட்டமிடல் மற்றும் நிலைமை

தற்போதைய மொறட்டுவை

| ஆண்டு | வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1981 | 24,656 |
| 1991 | 32,143 |
| 1994 | 33,541 |
| 1999 | 37,335 |
| 2001 | 40,168 |
| 2012 | 41,633 |

**அட்டவணை இலக்கம் 2.1 :** மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் வீடுகளின் பரம்பல் 1981–2012 | **மூலம் :** தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் அறிக்கை 1981 – 2012

2012 தொகைமதிப்பு அறிக்கையின் படி மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 41,633 ஆவதோடு, நிரந்தர வீடுகள் 37,033 எனவும், பகுதியளவிலான நிரந்தர வீடுகள் 4,470 எனவும் மற்றும் தற்காலிக வீடுகள் 130 எனவும் வகைப்படுத்தலாம். குறித்த விடுகளுள் 69% தனி வீடுகள், 18% மாடி வீடுகள், 5% தொடர்மாடி வீடுகள், 5% ஒன்றுடன் ஒன்று இணைந்த வீடுகள், 0.7% இரட்டை வீடுகள், 1% தொடர் வீடுகள் மற்றும் 1.3% குடிசை வீடுகள் உள்ளடங்கும். (உரு 2.5)




**உரு இலக்கம் 2.6 :** *மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் வீடுகளின் வகைப்படுத்தல்*
**மூலம் :** *தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் அறிக்கை, 2012*

2012 தொகைமதிப்பு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியில் வீடுகளின் அடர்த்திப் பரம்பலானது வரைபட இலக்கம் 2.2 மூலம் காட்டப்பட்டுள்ளது. மேலும், குறித்த தொகைமதிப்பு தரவுகள் பிரகாரம் கொழும்பு நகரில் அமைந்துள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கையில் 7.27% மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் அமைந்துள்ளமை உறுதியாகிறது. அதே போன்று கொழும்பு மாவட்டத்தில் வேறு பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில், ஹோமாகமை, மஹரகமை, கொலன்னாவை, கெஸ்பேவை மற்றும் கடுவளை ஆகிய பிரதேசங்களுக்கு ஒப்பீட்டளவில் மொறட்டுவை பிரதேசத்தின் வீடுகளின் அடர்த்தியானது ஒரு சதுர மீற்றருக்கு 1,783 வீடுகள் என்ற உயர் பெறுமதியைப் பெறுகின்றமை அட்டவணை இலக்கம் 2.2 இன் தரவுகள் படி தெளிவாகிறது.


| பிரதேசம் | வீடுகளின் அடர்த்தி சதுர மீற்றர் |
|---|---|
| கொழும்பு மாவட்டம் | 3893 |
| ஹோமாகமை | 399 |
| மஹரகமை | 1133 |
| கொலன்னாவை | 1445 |
| கெஸ்பேவை | 839 |
| கடுவளை | 608 |
| திம்பிரிகஸ்யாய | 2475 |
| மொறட்டுவை பி.செ.பி. | 1783 |

***அட்டவணை இலக்கம் 2.2 :***
*வீடுகளின் அடர்த்தி ஒப்பீடு*

***மூலம் :*** *தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம், 2012*

குறிப்பாக மொறட்டுவை அதிகார எல்லையின் நிலப்பரப்பின் மட்டுப்பாடு காரணமாக குறைந்த வருமானமுடைய மக்கள் வனக்காப்புப் பகுதிகள் மற்றும் நீர் நிலைகளை நிரப்பி குடிசை வீடுகளை அமைக்கும் செயற்பாடு அதிகரித்துள்ளமையைக் காண முடிவதோடு, டிக் குடிசை அலகொன்றில் இரண்டு குடும்பங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான குடும்பங்கள் வாழும் சந்தர்ப்பங்கள் அதிகரித்த நிலையில் உள்ளது. மொறட்டுவை அதிகார எல்லையின் பிரதான சிக்கலான இக் குடிசை வீடுகளுக்குத் தீர்வாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, செஞ்சிலுவை சங்கம், நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அரச சார்பற்ற பல்வேறு நிறுவனங்களின் தலையீட்டில் சொய்சாபுர, சயுர புர மற்றும் சுனாமி தொடர்மாடி வீட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள போதும் 2017.12.11ஆம் திகதி நடைபெற்ற திறத்தவர்களுக்கான செயலமர்வின் போது மற்றும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர்களுடன் மேற்கொண்ட உரையாடல்களின் போது வனக்காப்புப் பகுதிகளில் ஏறத்தாழ 6,000 குடிசைவாசிகள் வாழ்வதாகத் தகவல்கள் அறிய முடிகிறது.

2012 தொகைமதிப்பு அறிக்கை படி மொறட்டுவை அதிகார எல்லையில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை 41,633 ஆவதோடு, குடும்பங்களின் எண்ணிக்கை 42,000 ஆகும். அதற்கமைய 367 வீட்டு அலகுகள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றமை தெளிவாகினாலும், இவ் வீட்டுப் பற்றாக்குறையில் வனக்காப்பை அண்மித்து அமைந்துள்ள குறைந்த வசதிகளுடனான குடிசை வீடுகள் உள்ளடங்கவில்லை. பல்வேறு திறத்தவர்களிடமிருந்தும் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கு அமைய வனக்காப்புப் பகுதிகளில் வாழும் ஏறத்தாழ 6,000 மக்களுக்கு 1,500 வீடுகள் மற்றும் தன்தெனியவத்தை, பிட்டனியவத்தை, பெட்டரி வத்தை மற்றும் சமரகோன் வத்தை ஆகிய அரசாங்க காணிகளில் வாழும் குறைந்த வருமானமுடைய மக்களுக்கு ஏறத்தாழ 1000 வீடுகள் தேவைப்படுவதோடு, அதற்கமைய மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லைக்கு அண்ணளவாக 3000 வீடுகளுக்கான தேவை காணப்படுகின்றமை இனங் காணப்பட்டுள்ளது.




***வரைபட இலக்கம் 2.2 :*** *மொறட்டுவை பிரதேசத்தின் வீடுகளின் அடர்த்தி – 2011*

***மூலம் :*** *தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், 2011*

## நீர் வசதிகள்

அம்பத்தலே, லபுகம மற்றும் கலட்டுவாவ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிக்கப்படும் நீரை மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்திற்கு விநியோகிக்கும் நடவடிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் மேற்கொள்ளப்படுகிறது. 500,000 கனவளவு கொண்ட நாளாந்த நீர் விநியோகக் கொள்திறனை உடைய அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் நீர் விநியோகத்தில் மொறட்டுவை வடக்கு பிரதேசம் அதாவது, அங்குலானை, சொய்சாபுர மற்றும் பொருப்பன பிரதேசங்கள் உள்ளடங்கினாலும் அம்பத்தலே நீர் விநியோக முறைமை மிக சிக்கலானது என்பதால் மொறட்டுவை பிரதேசத்திற்கு மாத்திரம் விநியோகிக்கப்படும் நீர் விநியோகக் கொள்ளளவை உறுதியாக கணிப்பது கடினமாகவுள்ளது. நாளாந்தம் 60,000 கனவளவு கொள்ளளவுடைய கலட்டுவாவ நீர் விநியோக முறைமை மூலம் அம்பத்தலே விநியோகத்தின் ஊடாக உள்ளடக்கப்படாத எஞ்சிய பிரதேசங்களுக்கு நீர் விநியோகம் செய்வது போதுமானதாக உள்ளது.

இதற்கு மேலதிகமாக இயற்கை நீர் மூலமாக பொல்கொட ஆறு காணப்படுவதால் பிரதேசத்தின் நிலத்தடி நீர் மட்டம் உயர் பெறுமதியைக் கொண்டுள்ள போதும் தொழிற்சாலைகளிலிருந்து பொல்கொட ஆற்றுக்கு வெளியேற்றப்படும் முறையாக சுத்திகரிக்கப்படாத அசுத்தமான நீர் காரணமாக நிலத்தடி நீரும் மாசடைந்து பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளது.

## மின்சார வசதிகள்

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லைக்கு இலங்கை மின்சார சபை மற்றம் இலங்கை தனியார் மின்சார கம்பனி ஊடாக மின் விநியோகம் செய்யப்படுவதோடு, ஒவ்வொரு நகர பிரிவும் 33 கிலோ வாட்ஸ் மற்றும் 11 கிலோ வாட்ஸ் மின் இணைப்புக்கள் மூலம் மின்சாரத்தைப் பெறுகின்றன. 33 கிலோ வாட்ஸ் மின் இணைப்புக்கள் ஊடாக 60 கி.மீ. வரையான தூரம் உள்ளடக்கப்படுவதோடு, 11 கிலோ வாட்ஸ் மின் இணைப்புக்கள் ஊடாக 230 கி.மீ. வரையான தூரம் உள்ளடக்கப்படுகிறது. தெலவல, கட்டுபெத்த மற்றும் ராவத்தாவத்தை போன்ற இடங்களில் அடிப்படை மின் விநியோக நிலையங்கள் தாபிக்கப்பட்டிருப்பதோடு, 124 உப மின் நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. மொறட்டுவை அதிகார எல்லையில் மொத்த மின் விநியோகத்தில் 85% வீட்டுப் பாவனைக்காகவும், 9% வணிக நடவடிக்கைகளுக்காகவும், 4.5% தொழிற்சாலைகளுக்கும் மற்றும் 0.55% மத நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. வ/ப இலங்கை மின்சார தனியார் கம்பனி மூலம் மொறட்டுவை நகர சபை பிரதேசத்திற்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பு உள்ளடங்கிய திட்டம் இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.

## மனிதக்கழிவு மற்றும் கழிவு நீர் முகாமைத்துவம்

மொறட்டுவை பிரதேசத்தில் உயர் அடர்த்தியுடன் கூடிய பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் வீடுகள் பரவிக் காணப்பட்டாலும் குறித்த பாவனைகள் ஊடாக நாளாந்தம் உற்பத்தியாகும் கழிவு நீரை முறையாக அற்றுவதற்குரிய செயன்முறை இல்லை. மனிதக்கழிவு மற்றும் கழிவு நீர் ஒரே குழாய் முறைமை ஊடாக அகற்றப்படுவதோடு, பொருப்பன, தெலவல மற்றும் ராவத்தாவத்தை பிரதேசங்கள் மாத்திரம் இவ் வசதிகளைக் கொண்ட பிரதேசங்களாக இனங் காணப்பட்டுள்ளன. (இணைப்பு 2)

## திண்மக் கழிவுகள் முகாமைத்துவம்

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையை ஐந்து வலயங்களாகப் பிரித்து, சேதன மற்றும் அசேதன என்றவாறு திண்மக் கழிவுகளை வகைப்படுத்தி, நாளாந்தம் 70 – 120 மெட்ரிக் டொன் சேர்க்கப்படுவதோடு, குறித்த திண்மக் கழிவுகளின் கூட்டானது பிளாஸ்டிக் 10%, உயிரியில் சிதைவுக்கு உள்ளாக்கக் கூடிய பொருட்கள் 78% மற்றும் கடதாசி 12% என்றவாறு இனங் காணப்பட்டுள்ளது.

ஒன்று திரட்டப்படும் கழிவுகள் மொறட்டுவை வர்த்தகத் தொகுதி வளாகத்திற்குப் பின்பக்க நிலத்தில் இடைநிலை சுத்திகரிப்பு செய்யப்பட்டு, சேதன கழிவுகளில் ஒரு பகுதி (நாளாந்தம் ஒரு மெட்ரிக் டொன் வீதம்) பசளை உற்பத்திக்கும் மீதமாகும் கழிவுகள் கரதியான கழிவகற்றல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, மீள்சுழற்சி செய்வதற்கு அல்லது மீள் பாவனைக்கு அல்லது பசளையாக்குவதற்கு அல்லது சக்தி உருவாக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இதன் போது திண்மக் கழிவுகளில் 30 மெட்ரிக் டொன் அளவிலானவை பசளை உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதோடு, அச் செயற்பாட்டின் போது திண்மக் கழிவு நிறையில் 60% வரை ஆவியாகி, பசளையாக சேதனப் பொருட்கள் 10% ற்கும் 20% ற்கும் இடையில் எஞ்சுகின்றன. அவ்வாறு உருவாக்கப்பட்ட பசளையானது "மிஹிசரு" வர்த்தகப் பெயரில் சந்தையில் விநியோகிக்கப்படுகின்றது.

மேலும், மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் ஒன்று சேரும் கழிவுகளை மீள் சுழற்சி செய்வதற்காக வேறு 20 அமைப்புக்கள் மூலம் கழிவுகள் வகைப்படுத்தப்பட்டு வருவதுடன், அக் கழிவுக் கூட்டானது வாரத்திற்கு அண்ணளவாக 1 பிளாஸ்டிக் டொன், 1 பொலித்தீன் டொன், 2 கேன் டொன் மற்றும் 6 டொன் வேறு பொருட்களைக் கொண்டிருக்கும்.

## 2.2.2.2. பொருளாதாரத் துறை

பிரதேசத்தின் பிரதான பொருளாதார முன்னோடிகளாக தச்சுத் தொழில், மீன்பிடித் தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம் எனினும், தற்போது சுற்றுலாத் துறைக்கும் கேள்வி இருப்பது இனங் காணப்பட்டுள்ளது.

### *(அ) தச்சுத் தொழில்*

மொறட்டுவை பிரதேசத்திற்கே உரித்தான பொருளாதார சாத்தியக்கூறாக தச்சுத் தொழிலைக் குறிப்பிட முடிவதோடு, வரைபட இலக்கம் 2.3 இல் காட்டப்பட்டுள்ளவாறு மொறட்டுமுல்ல, இதிபெத்த, மோல்பே, வில்லோரவத்தை போன்ற பிரதேசங்களை பிரதானமாகக் கொண்ட 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு அதிகமான பிரிவுகளில் கைவினை மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டுடன் தச்சுத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது. பழங்காலத்தில் பொல்கொட ஆற்றுக்குக் குறுக்கே மரங்களைக் கொண்டு வந்ததன் மூலம் உருவான மரத் தளபாடத் தொழில் தற்போது மொறட்டுவை பிரதேசத்தில் பிரதான கைவினைத் தொழிலாக மாறியுள்ளது. பாரம்பரிய தச்சுத் தொழில் ஆற்றலுடன் கூடியவர்கள் தச்சுத் தொழிலில் ஈடுபடுவதால் மரம் சார்ந்த உற்பத்திகளை உருவாக்கும் மற்றும் விநியோகிக்கும் கேந்திரமாக மொறட்டுவை பிரசித்தியடைந்துள்ளது.

குறிப்பாக கொரலவெல்ல, எகொட உயன போன்ற பிரதேசங்களில் சிறு அளவிலான வீட்டுக் கைத்தொழிலாக மரக் குற்றிகளை பிளத்தல் மற்றும் இறுதிக் கிரியைகளுக்கான பொருட்களை உற்பத்தி செய்தல் போன்றவை மேற்கொள்ளப்படுவதுடன், பல்வேறு செதுக்கல் வேலைப்பாடுகள், தளபாடங்கள் மற்றும் ஏனைய பொருட்களின் உற்பத்தி மொறட்டுமுல்ல, மோல்பே மற்றும் இதிபெத்த போன்ற பிரதேசங்களில் பரவியுள்ளமையையும் காணலாம். மொறட்டுவை தச்சுத் தொழிலுடன் தொடர்புடையவை உரு 2.6 இல் காட்டப்பட்டுள்ளன.

83% வரையானோர் கடின மரங்களைப் பயன்படுத்தி, தச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ளதோடு, 17% வரை இலகு மரங்களைப் பயன்படுத்தி மரத்தாலான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2003ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் திரு. ரீ.ஏ.டீ. அமரசேகர மற்றும் திரு. எம்.எஸ். ஜயபால ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட A study on the Status of furniture manufacturing 2003 அறிக்கையின் படி இத் தச்சுத் தொழில் மூலம் மாதாந்தம் அண்ணளவாக 54 மில்லியன் ரூபா மற்றும் வருடாந்தம் 648 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்படுவதோடு, உள்நாட்டு மொத்த தேசிய உற்பத்திக்கு 0.007% சிறு அளவிலான பங்களிப்பை வழங்குகிறது. மேலும், மரக் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தச்சுத் தொழில்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 128 ஆக இருப்பினும் 65,000 வரையானோர் இத் தச்சுத் தொழிலை தமது வாழ்க்கையாகக் கொண்டுள்ளனர்.




தச்சுத் தொழில் பரம்பல்-2017
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்

0 0.25 0.5 1 1.5 2 Kilometers

நகர அபிவிருத்தி அதிகார சபை
டிசம்பர் 2018

மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை | மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) | தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 2.3 :*** *தச்சுத் தொழி லின் பரம்பல் – 2017* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*



***உரு இலக்கம் 2.6 :*** *மொறட்டுவை தச்சுத் தொழில்*
***புகைப்பட அனுசரனை :*** *மேற்புற இடது மற்றும் வலது மூலை : www.exploresrilanka.lk, கீழ்ப்புற*
***இடது மூலை :*** *www.globalpressjournal.com*

## *(ஆ) மீன்பிடிக் கைத்தொழில்*



***உரு 2.7 :*** *மோதர மீன்பிடித் துறைமுகம்*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*



***உரு 2.8 :*** *மோதர மீன்பிடித் துறைமுகத்தை அண்மித்த விற்பனை நிலையங்கள்*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

அங்குலானயிலிருந்து பாணந்துறை துடுவ வரையான 10.5 கி.மீ. தூரத்தில் உள்ள கடற்கரைப் பகுதியில் அங்குலானை, லுனாவை, மொறட்டுவெல்ல, கொரலவெல்ல, கட்டுக்குருந்த, எகொட உயன மற்றும் மோதரை ஆகிய மீன்பிடித் துறைமுகங்களையும், அங்குலானை, லுனாவை, மொறட்டுவெல்ல, கொரலவெல்ல மற்றும் கட்டுக்குருந்த போன்ற மீன்பிடி நிலையங்களையும் கேந்திரமாகக் கொண்ட மீன்பிடிக் கைத்தொழிலைக் காணலாம். (உரு 2.7 மற்றும் 2.8) குறிப்பாக, பொல்கொட ஆற்றை அண்மித்த நன்னீர் மீன்பிடித் தொழிலும், கடற்கரையை கேந்திரமாகக் கொண்ட உவர் நீர் மீன்பிடித் தொழிலும் பொல்கொட களப்பு, கழிமுகம், சதுப்பு நிலங்கள் மற்றும் சேற்று நிலங்களை அடிப்படையாகக் கொண்ட களப்பு மீன்பிடித் தொழிலும் காணக் கிடைப்பதோடு, மாதாந்தம் பிடிக்கப்படும் மீன்களின் எண்ணிக்கை 7,600 – 20,000 கிலோ கிராம் ஆகும்.

## *(இ) வணிகத் துறை*

மொத்த நிலப் பரப்பில் ஏறத்தாழ 3% வணிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், சில்லறை மற்றும் மொத்த வியாபாரம் மற்றும் சேவைத் துறையை அடிப்படையாகக் கொண்ட வணிகப் பாவனைகள் மொறட்டுவை நகர மத்தியிலிருந்து காலி வீதி ஊடாக பரவியுள்ளது. (உரு 2.9)




***உரு 2.9 :*** *மொறட்டுவை வணிக நடவடிக்கைகள்*
***புகைப்பட அனுசரனை :*** *மேற்புற இடது மூலை : https://www.facebook.com/kzonemoratuwa/, மேற்புற வலது மூலை : www.travelfootprint.net கீழ்ப்புற இடது மற்றும் வலது மூலை மொறட்டுவை பல்கலைக்கழகம், புவியியல் துறை, 2018*

## (ஈ) சுற்றுலா தொழில்

தெஹிவளை - கல்கிசை மற்றும் பாணந்துறை – களுத்துறை போன்ற சுற்றுலாப் பிரதேசங்கள் இரண்டுக்கு நடுவே மொறட்டுவை பிரதேசம் அமைந்திருந்தாலும் கண்கவர் கடற்கரை, பொல்கொட ஆறு மற்றும் லுனாவை களப்பு போன்ற இயற்கை வளங்களை சிறந்த முறையில் முகாமைத்துவத்துடன் சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தாமை காரணமாக சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க முடியாதுள்ளது. இருப்பினும் பொல்கொட ஆற்றுக்கு அருகாமையில் மேற்கொள்ளும் நீர் விளையாட்டுக்கள், பாய்மரக் கப்பல் போட்டி என்பவற்றைப் போன்றே பொல்கொட ஆறு, லுனாவை களப்பு மற்றும் கடற்கரைக்கு எதிரே நிர்மாணிக்கப்படும் ஹோட்டல் மற்றும் தொடர்மாடி அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக தற்போது சுற்றுலாத் துறையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றமை தெளிவாகிறது. (உரு 2.10)



**உரு 2.10 :** *மொறட்டுவை சுற்றுலாத் துறை*
**மேற்புற இடது மூலை :** *www.timeout.com,* **மேற்புறம் மத்தியில் :** *www.travelfootprint.net,* **மேற்புற வலது மூலை :** *www.escapade.lk,* **கீழ்ப்புற இடது மூலை :** *www.yohobed.com*

### 2.2.2.3 சமூகத் துறை

இங்கு மொறட்டுவை பிரதேசத்தின் சமூகம் சார் பின்புலம் குறித்து ஆராய்வதற்காக சனத்தொகை, சுகாதாரம், கல்வி, குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்படும்.

#### *(அ) சனத்தொகை*


2001 மற்றும் 2012 தொகைமதிப்பு அறிக்கை படி மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையின் வசிப்பிட சனத்தொகையானது முறையே 177,563 மற்றும் 168,280 ஆவதோடு, இயற்கையான சனத்தொகை அதிகரிப்பு வேகமானது -0.49 ஆகும். மேலும் தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் 2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தொகைமதிப்பு கணிப்பின் படி மொறட்டுவை பிரதேசத்தின் சனத்தொகை அண்ணளவாக ஏறத்தாழ 173,395 ஆக இருக்கலாம் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையின் சனத்தொகை கொழும்பு மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 7% ஆவதோடு, கொழும்பு மாநகர சபை மற்றும் மொறட்டுவை மாநகர சபைக்கு இடையே சனத்தொகை அடர்த்தி விகிதம் 1 : 2 ஆக இனங் காண முடியும். அதாவது, கொழும்பு மாநகர சபையினதும் மொறட்டுவை மாநகர சபையினதும் சனத்தொகை அடர்த்திப் பெறுமதிகள் முறையே ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 3,417 நபர்கள் மற்றும் 7209 ஆகும்.


வரைபட இலக்கம் 2.4 மற்றும் 2.5 ஊடாக குறிக்கப்படும் மொறட்டுவை பிரதேசத்தின் சனத்தொகை அடர்த்தியின் பிரகாரம் 2001ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு ஆகும் போது எகொட உயன தெற்கு, ராவத்தாவத்த கிழக்கு, மொறட்டுமுல்ல வடக்கு, மொறட்டுமுல்ல தெற்கு, மொறட்டுமுல்ல கிழக்கு மற்றும் லக்ஷப்பத்தி வடக்கு போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் சனத்தொகை அடர்த்தி குறைவடைவதைக் காண முடிவதோடு, அங்குலானை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாத்திரம் சனத்தொகை அடர்த்தி உயர்வடைவதைக் காட்டுகிறது.

2012 தொகைமதிப்பு அறிக்கைக்கு அமைய 49% ஆண்களாகவும், 51% பெண்களாகவும் காணப்படுவதோடு, வயது வித்தியாசங்களுக்கு ஏற்ப சனத்தொகையில் 15 வயதுக்குக் குறைவானோர் 22% உம், 15 – 59 வயதுக்கு இடைப்பட்டோர் 65% உம், 60 வயதுக்கு மேற்பட்டோர் 13% உம் காணப்படுகின்றனர். அதற்கமைய மொறட்டுவை பிரதேசத்தின் உழைக்கும் வகுதியினர் அதாவது, 15 – 59 வயதுக்கு இடைப்பட்டோர் சனத்தொகையில் ஒப்பீட்டளவில் 65% எனும் உயர் பெறுமதியைக் கொண்டிருப்பது எதிர்கால அபிவிருத்தியின் பொருட்டான சாத்தியக் கூறாகும்.

இனங்களின் அடிப்படையில் சனத்தொகையை நோக்குகையில், பெரும்பாலானவர்கள் சிங்கள இனத்தவர் ஆவதோடு, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சிறு அளவினராவர். அதே போன்று மத ரீதியில் நோக்குகையில், பெரும்பாலானோர் பௌத்தர்களாக இருப்பினும் கத்தோலிக்கர்களும் குறிப்பிடத்தக்க அளவு காணப்படுகின்றனர்.




***வரைபட இலக்கம் 2.4 :*** *மொறட்டுவை சனத்தொகை அடர்த்தி – 2001* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*




***வரைபட இலக்கம் 2.5 :*** *மொறட்டுவை சனத்தொகை அடர்த்தி – 2011* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## (ஆ) சுகாதார வசதிகள்

மொறட்டுவை மாநகர சபை எல்லையில் தாபிக்கப்பட்டுள்ள டீ சொய்சா மாவட்ட வைத்தியசாலை, லுனாவை ஆயுர்வேத வைத்தியசாலை, மத்திய மருந்தகம், ஆயுர்வேத மருந்தகம் மற்றும் தனியார் வைத்திய நிலையங்கள் ஊடாக மக்களுக்கு உரிய முறையில் மேற்கத்தைய வைத்திய முறையில் அல்லது உள்நாட்டு வைத்திய முறைக்கு அமைய சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகள் காணப்படுகின்றன.

1911ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட மிகப் பழைமையான வைத்தியசாலையான டீ சொய்சா மாவட்ட வைத்தியசாலையானது லுனாவை பிரதேசத்தில் அமைந்துள்ளதோடு, அது “பீ” வகுதியிலான மாவட்ட வைத்தியசாலையாக 3 நோயாளர் விடுதிகளுடன் (வாட்டு) 83 நோயாளர் காவு கட்டில்களைக் கொண்டுள்ளது. தற்போது 10 வைத்திய உத்தியோகத்தர்கள், 10 தாதியர்கள், 06 பரிசாளகர்களைக் கொண்ட இவ் வைத்தியசாலையில் 2015ஆம் ஆண்டில் மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை 7800 ஆகும்.

உள்நாட்டு மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்காக மொறட்டுவை பிரதேச மக்களைப் போன்றே பிலியந்தலை, பாணந்துறை மற்றும் களுத்துறை போன்ற பிரதே-சங்களிலிருந்தும் லுனாவை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக நோயாளிகள் வருவதனை ஆரம்ப ஆய்வு நடவடிக்கைகளின் மூலம் அறிந்து கொள்ளக் கிடைத்தது

இதற்கு மேலதிகமாக மொறட்டுவை நகரில் 16 தனியார் வைத்திய நிலையங்கள், 39 தனியார் மருந்தகங்கள், 2 மத்திய மருந்தகங்கள் (அங்குலானை மற்றும் கொரவெல்ல) மற்றும் 16 ஆயர்வேத மருந்தகங்கள் பரவிக் காணப்படுகின்றமையை நேர்மறையான காரணியாகக் குறிப்பிடலாம். மொறட்டுவை நகர சபை அதிகார எல்லையில் சுகாதார வசதிகளின் பரம்பல் குறித்து இணைப்பு இலக்கம் 3 இல் காட்டப்பட்டுள்ளது.

தொழுநோய், டெங்கு மற்றும் காசநோய் அதிகளவு அறிக்கையிடப்படும் ஒரு நகரமாக மொறட்டுவை நகரத்தைக் குறிப்பிடலாம் என்பதுடன், மொறட்டுவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் 2018 வருடாந்த அறிக்கையின் பிரகாரம் மொறட்டுமுல்ல மற்றும் லுனாவை பிரதேசங்களை அண்டியதாக தொழு நோயாளிகள் வாழ்வதாகக் குறி-ப்பிடப்பட்டுள்ளது. மேலும், மொறட்டுமுல்ல, ராவத்தாவத்தை மற்றும் கட்டுபெத்த பிரதேச-ங்களில் அதிக அளவிலான டெங்கு நோயாளிகளும், ராவத்தாவத்தை மற்றும் எகொட உயன பிரதேசங்களில் அதிக அளவிலான காச நோயாளிகளும் வாழ்வதாக சுகாதார ஆய்-வறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2015 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை மேற்குறித்த நோய்களின் பரம்பல் குறித்த தரவுகள் பின்வரும் அட்டவணை இலக்கம் 2.3 இல் காட்டப்பட்டுள்ளன.

| நோய் வகைப்படுத்தல் | 2015 | 2016 | 2017 | ஆபத்தான பிரதேசங்கள் |
|---|---|---|---|---|
| டெங்கு | 812 | 1,177 | 2,597 | மொறட்டுமுல்ல<br>ராவத்தாவத்தை<br>கட்டுபெத்த |
| காச நோய் | 54 | 76 | 61 | ராவத்தாவத்தை<br>எகொட உயன |
| தொழு நோய் | 78 | 91 | 89 | மொறட்டுமுல்ல<br>லுனாவை |

***அட்டவணை இலக்கம் 2.3:*** *மொரட்டுவாவில் நோய் பரவும் தரவு*
***மூலம் :*** *மொறட்டுவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், 2018*

### *(இ) கல்வி வசதிகள்*

2012 தொகைமதிப்பு அறிக்கை பிரகாரம் மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 26% பாடசாலை செல்லும் வயதிலான பிள்ளைகளாவதோடு, மேல் மாகாண கல்வி அலுவலகத்தின் வருடாந்த அறிக்கை 2013 பிரகாரம் குறித்த அதிகார எல்லையில் அமைந்துள்ள 31 பாடசாலைகளில் 21,000 பிள்ளைகள் கல்வி பயின்றுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் பாடசாலை அமைப்பு பின்வரும் அட்டவணை இலக்கம் 2.4 இல் காட்டப்பட்டுள்ளது.

| *பாடசாலை வகை* | *பாடசாலைகளின் எண்ணிக்கை* |
|---|---|
| *தேசிய பாடசாலை* | *2* |
| *1 ஏபீ பாடசாலை* | *2* |
| *1 சீ பாடசாலை* | *3* |
| *2 ஆம் தர பாடசாலை* | *15* |
| *3 ஆம் தர பாடசாலை* | *9* |
| ***மொத்தம்*** | ***31*** |

***அட்டவணை இலக்கம் 2.4 :*** *மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் பாடசாலைகளின் அமைப்பு*
***மூலம் :*** *மொறட்டுவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், 2018*

## முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையம்

2016 விபரக் குறிப்பு அறிக்கையின் பிரகாரம் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் 124 பாடசாலைகள் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அண்மைக் காலத்தில் சர்வதேச பாடசாலைகள் தாபிக்கப்படும் போக்கினைக் காணலாம்.

## உயர் கல்வி நிறுவனங்கள்

1978ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நான்கு கல்விப் பீடங்களைக் கொண்டுள்ள மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை 2014 பிரகாரம் 2013/2014 கல்வி ஆண்டிற்கு 8000 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக ஊழியர்களின் எண்ணிக்கை 1200 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழகத்தின் கடந்த பத்து வருட காலப்பகுதியில் புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் வீதம் 75% ஆல் அதிகரித்துள்ளதோடு, எதிர்வரும் காலங்களிலும் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் வீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொறட்டுவை பிரதேசத்தில் அமைந்துள்ள அரச சார்பற்ற வேறு உயர் கல்வி நிறுவனங்களாக இலங்கை தொழிநுட்ப அபிவிருத்தி சபை, நவீன தொழிநுட்பம் குறித்த ஆத்தர் சீ கிளார்க் நிலையம், கைவினைத் தொழில் உயர் கல்வி நிறுவனம், பிரெண்டெக்ஸ் ஆடைத் தொழிநுட்ப கல்வி நிறுவனம், தேசிய வடிவமைப்பு நிலையம், ஜேர்மன் தொழிநுட்ப பியிற்சி நிறுவனம், தொழிநுட்ப பொறியியலாளர் பயிற்சி நிறுவனம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மொறட்டுவை நகர சபை அதிகார எல்லையில் கல்வி வசதிகளின் பரம்பல் குறித்து இணைப்பு இலக்கம் 4 இல் காட்டப்பட்டுள்ளது.

## (ஈ) குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் பாவனை

2018 மொறட்டுவை பொலிஸ் அறிக்கையின் படி லுனாவை, கொரலவெல்ல, மோதர, கட்டுபெத்த, இடம, லக்ஷப்பத்திய மற்றும் செஞ்சிலுவைத் தோட்டம் போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை அண்மித்ததாக போதைப்பொருள் முறைப்பாடுகள் மற்றும் குற்றங்கள் அதிகளவு அறிக்கையிடப்படுவதோடு, குறித்த சமூக ரீதியிலான சிக்கல்களின் பரம்பல் அட்டவணை இலக்கம் 2.5 இல் காட்டப்பட்டுள்ளது.

| வருடம் | அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை | ஆபத்தான பிரதேசங்கள் | அறிக்கையிடப்பட்ட போதைப்பொருள் முறைப்பாடுகள் | அறிக்கையிடப்பட்ட போதைப்பொருள் முறைப்பாடுகள் |
|---|---|---|---|---|
| 2013 | 552 | கொரலவெல்ல லுனாவை இடம மோதர கட்டுபெத்த லக்ஷப்பத்திய | 2,030 | லுனாவை செஞ்சிலுவைத்-தோட்டம் கட்டுபெத்த கொரலவெல்ல |
| 2014 | 362 | | 1,933 | |
| 2015 | 338 | | 1,241 | |
| 2016 | 333 | | 1,191 | |
| 2017 நவம்பர் | 232 | | 1,110 | |


***அட்டவணை இலக்கம் 2.5 :*** *மொறட்டுவை பிரதேசத்தில் அறிக்கையிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் முறைப்பாடுகள் 2013 – 2017*
***மூலம் :*** *மொறட்டுவை பொலிஸ் அறிக்கை, 2018*

## (உ) பொது திறந்தவெளி பொழுதுபோக்கு வசதிகள்

நேரடியான மற்றும் மறைமுகமான பொழுதுபோக்கு வசதிகளாக பிரதானமான இரு பிரிவுகளின் கீழ் பொழுதுபோக்கு வசதிகள் குறித்து நோக்குகையில் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் நேரடி பொழுதுபோக்கு வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பானது பின்வரும் அட்டவணை இலக்கம் 2.6 மூலம் வரைபட இலக்கம் 2.6 மூலம் காட்டப்படுள்ளது.

| பூங்கா வகை | பூங்காக் குறியீடு | கிராம உத்தியோகத்தர் பிரிவு | அளவு (ஹெக்டயார்) |
|---|---|---|---|
| மிகச் சிறிய பூங்கா (EPP) | EPP 01 | கொரலவெல்ல தெற்கு | 0.11 |
| | EPP 02 | பொருப்பன | 0.06 |
| | EPP 03 | உயன தெற்கு | 0.08 |
| | EPP 04 | கட்டுபெத்த | 0.09 |
| | EPP 05 | லக்ஷப்பத்திய மத்திய | 0.05 |
| **தற்போதுள்ள மிகச் சிறிய பூங்கா - Existing pocket Parks** | | | **0.39** |
| சிறிய பூங்கா (EMP) | EMP 01 | எகொட உயன தெற்கு | 0.6 |
| | EMP 02 | இதிபெத்த கிழக்கு | 0.8 |
| | EMP 03 | கடுலான | 0.6 |
| | EMP 04 | வில்லொரவத்தை மேற்கு | 0.6 |
| | EMP 05 | மொறட்டுவத்தை வடக்கு | 0.3 |
| | EMP 06 | கல்தெமுல்ல | 0.2 |
| | EMP 07 | லக்ஷப்பத்திய மத்திய | 0.3 |
| **தற்போதுள்ள சிறிய பூங்கா - Existing Mini Parks** | | | **3.4** |
| பிரதேச பூங்கா (ELP) | ELP 01 | ராவத்தாவத்தை கிழக்கு | 1.6 |
| | ELP 02 | சொய்சாபுர தெற்கு | 2.4 |
| **தற்போது அருகாமையிலுள்ள பூங்கா - Existing Local Parks** | | | **4.0** |
| வரிசைப் பூங்கா (ELP) | ELiP 01 | லுனாவை களப்பை சுற்றியுள்ள நடைபாதை | 0.74 |
| | ELiP 02 | கட்டுபெத்த நடை பாதை ஒழுங்கை | 0.35 |
| **தற்போதுள்ள வரிசைப் பூங்கா - Existing Linear Parks** | | | **1.09** |
| **மொத்தம்** | | | **8.88** |

**அட்டவணை இலக்கம் 2.6 :** மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் பூங்கா வகைக்கு அமைவான கட்டமைப்பு
**மூலம் :** நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018




பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் -2019
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்

0 0.25 0.5 1 1.5 2 Kilometers

நகர அபிவிருத்தி அதிகார சபை
ஜனவரி 2019

மூலம்: கள ஆய்வு | மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) | தயாரிப்பு : சுற்றாடல் மற்றும் நிலத்தோற்றப் பிரிவு

*வரைபட இலக்கம் 2.6 : ___* *மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## 2.2.2.4. சுற்றாடல் துறை

இங்கு மொறட்டுவைப் பிரதேசத்திற்கே உரித்தான சுற்றாடல் வளங்கள் மற்றும் முகங் கொடுக்க நேரிடும் இயற்கை அனர்த்தங்கள் விரிவாகக் கலந்துரையாடப்படும்.

### *(அ) சுற்றாடல் வளங்கள்*

கீழைத்தேய ஈர வலயத்திற்குரிய மொறட்டுவை நகரமானது பிரதானமான இரண்டு மழை வீழ்ச்சிப் பருவங்களினாலும் மழையைப் பெறுவதோடு, சாதாரண வருடாந்த மழை வீழ்ச்சி 2000 மில்லி லீற்றருக்கு அதிகமாகும்.

பிரதான நீர் மூலத்தைப் போன்றே மொறட்டுவை கிழக்கு எல்லையாகவும் பொல்கொட ஆற்றைக் குறிப்பிட முடியும் என்பதோடு, பொல்கொட ஆற்றின் வடக்கு நீர் பிரதேசம் வேரஸ் ஆறு எனவும், மொறட்டுமுல்லயை அண்மித்த பிரதேசத்தில் அது பொல்கொட வாவி எனவும், தெற்கு ஆற்றுப் பிரதேசம் பாணந்துறை ஆறு எனவும் குறிப்பிடப்படும். அதற்கமைய பொல்கொட நீர்வள முக்கியத்துவமுடைய பிரதேசம் 20 கி.மீ நீளத்தில் பரவியுள்ளதோடு, பொல்கொட ஆறு 21 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஊடாகப் பாய்வதோடு, பிரதேசத்தில் உயர் உயிரியில் பல்வகைமையைப் பேணுவதற்கும் சுற்றாடல் சமநிலையைப் பாதுகாக்கவும் பெரிதும் துணையாகிறது.


0.3 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட மற்றும் 6 கி.மீ. நீளம் கொண்ட நீர்வள முக்கியத்துவமுடைய பிரதேசத்துடனான லுனாவை களப்பை மொறட்டுவை நகரின் முதலாவது பரந்த உள்ளக ஈர நிலமாகக் குறிப்பிடலாம். பொல்கொட ஆற்றுடன் தொடர்புடைய 0.2 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட மற்றும் 4 கி.மீ. நீளமுடைய கொண்ட நீர்வள முக்கியத்துவமுடைய பிரதேசத்துடனான கட்டுபெத்த சதுப்பு நிலத்தை மொறட்டுவை பிரதேசத்தின் இரண்டாவது பரந்த உள்ளக ஈர நிலமாகக் குறிப்பிடலாம். மொறட்டுவை மாநகர சபை எல்லையின் மேற்கு எலையாகக் கருதப்படும் கடற்கரையானது 10.5 கி.மீ. நீளமுடையது.

உரு 2.11 மூலம் மொறட்டுவை பிரதேசத்தை அண்மித்து பரம்பலடைந்துள்ள ஈர வலயத் திட்டம் மற்றும் உரு 2.12 மூலம் மொறட்டுவை பிரதேசத்தில் நீர் வள நிலையத்தின் அமைவு காட்டப்பட்டுள்ளன.


**அத்தியாயம் 02**
ஆரம்ப ஆய்வு

திட்டமிடல் மற்றும் நிலைமை

தற்போதைய மொறட்டுவை



***உரு 2.11 :*** *கொழும்பு மாவட்டத்தின் மற்றும் மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் ஈர நிலங்கள் - 2015*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*




*__உரு 2.12 :__ மொறட்டுவை நீரியல் வள முறைமை*
*__மூலம் :__ நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## (ஆ) இயற்கை அனர்த்தங்கள்

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையைத் தாக்கும் அனர்த்தங்களாக சூறாவளி, வெள்ளம், கடல் அரிப்பு மற்றும் சுனாமி போன்ற பாதிப்புக்களை இனங் காணலாம்.

i. சூறாவளி

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையைத் தாக்கும் பிரதான அனர்த்தமாக சூறாவளியைக் குறிப்பிடலாம். 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் மொரட்டுவெல்ல மேற்கு, கொரளவெல்ல மேற்கு, எகொட உயன மத்திய மற்றும் தெற்கு இந்திபெத்த மேற்கு மற்றும் கிழக்கு போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் சூறாவளி தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதுடன், (அட்டவணை இலக்கம் 2.7) சூறாவளி காரணமாக பெரும்பாலான வீடுகளின் கூரைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

| வருடம் | பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2014 | 427 |
| 2015 | 71 |
| 2016 | 84 |
| 2017 | 2794 |
| 2018 | 161 |
| **மொத்தம்** | **31** |

**அட்டவணை இலக்கம் 2.7 :** சூறாவளி காரணமாக வீடுகள் பாதிப்புக்குள்ளானமைநிலங்கள் - 2015
**மூலம் :** மொறட்டுவை பிரதேச செயலகம், 2018

ii. கடலரிப்பு


2018 ஆம் ஆண்டில் உஸ்வத்தை, அங்குலானை வடக்கு மற்றும் அங்குலானை தெற்கு போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கடலரிப்பு காரணமாக 25 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

iii. சுனாமி

2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி பேரழிவின் பாதிப்பிற்கு உள்ளான மொறட்டுவை பிரதேசத்தின் 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஏறத்தாழ 5,050 வீடுகள் முற்றாகவும் பகுதியளவிலும் சேதமடைந்தன. கொரலவல்லேவில் இருந்து எகொட உயன வரையான பொல்கொட ஆற்றையும் கடற்கரையையும் எல்லைகளாகக் கொண்ட குறுகிய நிலப் பரப்பு, தொடர்ச்சியாக ஏற்படும் சூறாவளி மற்றும் அதிகரிக்கும் உலக வெப்ப மயமாகல் காரணமாக உயர்வடையும் கடல் நீர் மட்டம் போன்றவை காரணமாக நிலப் பரப்பு படிப்படியாகக் குறைவடையும் ஆபத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. மேலும், மழைக் காலங்களில் மழை நீர் முறையாக வடிந்தோடாமை காரணமாக நீர் நிலைகளைப் போன்றே குறிப்பிட்ட சில உள்ளகப் பிரதேசங்களும் துரித வெள்ள நிலைமைக்கு முகங் கொடுக்க நேரிட்டுள்ளது.

## 2.2.3. ஆரம்ப திட்டமிடல் முயற்சிகள்

1998ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேல் மாகாணம் உள்ளடங்கும் வகையில் வகுக்கப்பட்ட கொழும்பு பெருநகர வலய ரீதியிலான கட்டமைப்புத் திட்டத்தின் (உரு 2.13) மூலம் நகர படிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொழும்பு மாநகர சபை பிரதேசமானது தேசிய மத்திய நிலையமாகவும், மொறட்டுவை உட்பட தெஹிவளை, களுத்துறை, நீர்கொழும்பு மற்றும் கம்பஹா போன்றன நகர வலய ரீதியிலான மத்திய நிலையங்களாகவும், ஹொரனை, மத்துகமை, பேருவளை, பியகம மற்றும் ஜா எல போன்ற நகரங்கள் பிரதான நகர மத்திய நிலையங்களாகவும் இனங் காணப்பட்டுள்ளன.





*உரு 2.13 : கொழும்பு பெருநகர வலய ரீதியிலான கட்டமைப்புத் திட்டம் – 1998*
*மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

**அத்தியாயம் 02**
ஆரம்ப ஆய்வு

திட்டமிடல் மற்றும் நிலைமை

ஆரம்ப திட்டமிடல் முயற்சிகள்


2030ஆம் ஆண்டிற்காக வகுக்கப்பட்ட மேல் மாகாண மாநகர திட்டத்தின் (உரு 2.14) மூலம் மேல் மாகாணமானது ஆறு வலயங்களாக வகுக்கப்பட்டுள்ளதுடன், அதிக அடர்த்தியுடைய வலயத்தில் அமைந்துள்ள மொறட்டுவை, நீர்கொழும்பிலிருந்து அளுத்கம வரையான சுற்றுலா வலயத்தில் அமைந்துள்ள கொழும்பு மையப் பகுதிக்கு மிக அருகாமையிலான உப நகரமாகவும் இனங் காணப்பட்டுள்ளது.





*உரு 2.14 : மேல் மாகாண மாநகரத் திட்டம் – 2030*
*மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை, 2016*

அதே போன்று தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் வகுக்கப்பட்ட தேசிய பௌதீக கட்டமைப்பு திட்டம் 2030 பிரகாரம் (உரு 2.15) கொழும்பு அதி நகர மயமாக்கல் வலயத்தில் மொறட்டுவை நகரம் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அத் திணைக்களத்தினால் வகுக்கப்பட்ட உத்தேச இடம்சார் கட்டமைப்பு திட்டம் 2050 பிரகாரம் (உரு 2.16) மொறட்டுவை நகரம் பொருளாதார வலயத்தில் அமைந்துள்ள ஒரு நகரமாகவும் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு இனங் காணப்பட்டுள்ளது.

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தை வகுப்பதன் பொருட்டு திட்டமிடல் எல்லையை நிர்ணயிக்கையில் பிரதேசத்தில் காணப்படும் புதிய அபிவிருத்திப் போக்கு குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், 2.2.2 அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருளாதார, சமூக, சுற்றாடல் மற்றும் பௌதீகப் பண்புகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.




***உரு 2.15 :*** *தேசிய பௌதீக கட்டமைப்பு திட்டம் – 2030*
***மூலம் :*** *தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம், 2016*




***உரு 2.16 :** உத்தேச இடம்சார் கட்டமைப்புத் திட்டம் – 2050*
***மூலம் :** தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம், 2016*

# 2.3 திட்டமிடல் பிரதேசத்தை நிர்ணயித்தல்

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தை வகுப்பதன் பொருட்டு திட்டமிடல் எல்லையை நிர்ணயிக்கையில் பிரதேசத்தில் காணப்படும் புதிய அபிவிருத்திப் போக்கு குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், 2.2.2 அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருளாதார, சமூக, சுற்றாடல் மற்றும் பௌதீகப் பண்புகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

## 2.3.1. திட்டமிடல் எல்லைகளை இனங் காணல்

23.4 சதுர கிலோ மீற்றர் அளவுடைய சிறிய நிலப்பரப்பில் பரம்பலடைந்துள்ள மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லை, மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மொறட்டுவை தேர்தல் பிரிவு என்பன ஒரே பௌதீக எல்லையில் அமைந்துள்ள காரணத்தால் திட்டமிடல் பிரதேசத்தின் செயற்பாட்டு எல்லை, நிர்வாகப் பிரிவு மற்றும் திட்டமிடல் பிரதேசமும் ஒரே எல்லையாயிருப்பதை அடிப்படையாகக் கொண்டு, இவ் அபிவிருத்தித் திட்டத்தை வகுக்கையில் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையானது திட்டமிடல் பிரதேசமாகக் கொள்ளப்பட்டது.

## 2.3.2. திட்டமிடல் எல்லை

வடக்கில் இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவு, கிழக்கில் பொல்கொட ஆறு, தெற்கில் களுத்துறை மாவட்டத்திற்குரிய பாணந்துறை பிரதேசம் மற்றும் பொல்கொட ஆறு, மேற்கில் கடற்கரை போன்ற எல்லைகளையும், 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் கொண்டமைந்த மொறட்டுவை மாநகர சபை திட்டமிடல் பிரதேசமானது பின்வரும் வரைபட இலக்கம் 2.6 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.




*வரைபட இலக்கம் 2.7 : மொறட்டுவை மாநகர சபை பிரதேச திட்டமிடல் எல்லைகள்*

*மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

# 03

## அத்தியாயம்



# அபிவிருத்தித் திட்ட தேவைப்பாடு

**அத்தியாயம் 03**
அபிவிருத்தித் திட்ட தேவைப்பாடு

அறிமுகம்

சிக்கல்களை இனங் காணல்

## 3.1. அறிமுகம்

மொறட்டுவை மாநகர சபைக்கான புதிய திட்டத்தை வகுக்க வேண்டியதன் தேவைப்பாட்டை இனங் காண்பது இவ் அத்தியாயத்தின் நோக்கமாகும். 2005 – 2020 ற்காக வகுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் செல்லுபடிக் காலம் முடிவுறும் தருவாயில் காணப்படுகின்றமையானது புதிய திட்டமொன்றை வகுக்கும் தேவைப்பாடு எழுவதற்கான ஒரு காரணியாகும்.

மேலும் 2005 – 2020 அபிவிருத்தித் திட்டத்தில் காணப்பட்ட வெற்றிகரமான மூலோபாயங்களை முன் கொண்டு செல்வதோடு, அதில் காணப்பட்ட குறைப்பாடுகளை தவிர்த்து, புதிய திட்ட செயற்பாட்டில் ஈடுபட எண்ணியுள்ளதோடு, பிரகடனப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படாத அபிவிருத்திப் போக்குகளை இனங் கண்டு, அதன் ஊடாக மூலோபாய நடவடிக்கைகளில் ஈடுபடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மொறட்டுவை நகரில் காணப்படும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், குறித்த வளங்களை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவும், பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு சொகுசான மற்றும் பாதுகாப்பான சுற்றுச் சூழலை உருவாக்குவதன் பொருட்டும் புதிய அபிவிருத்தித் திட்டமொன்றை வகுக்க வேண்டிய தேவை நிலவுகின்றமை இனங் காணப்பட்டது.

## 3.2. சிக்கல்களை இனங் காணல்

1.2 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திறத்தவர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் போன்றே ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை தரவு மூலங்களின் ஊடாக இனங் காணப்பட்ட சிக்கல்களின் தீவிரப்பாட்டிற்கு அமைய முன்னுரிமை ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டதுன், அதன் பொழிப்பு பின்வரும் அட்டவணை இலக்கம் 3.1 இல் காட்டப்பட்டுள்ளது.

| *முன்னுரிமை* | *இனங் காணப்பட்ட சிக்கல்கள்* | *விபரம்* |
|---|---|---|
| *01* | *பிரதேசத்தில் காணப்படும் சாத்தியக் கூறுகளை அபிவிருத்திக்குப் பயன்படுத்தாமை* | *i. அலங்கார கடற்கரை, பொல்கொட ஆறு மற்றும் லுனாவை களப்பு போன்ற வளங்களை நிலையாக முகாமைத்துவம் செய்யாமை மற்றும் குறித்த நீர் மூலங்களை மக்களால் அணுக முடியாமை*<br>*ii. நகர மத்தியில் காணப்படும் காணிகளை உகந்த முறையில் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தாமை* |
| *02* | *குறைந்த வருமானம் உடைய மக்கள் பாதுகாக்கப்பட்ட வலயங்களை ஆக்கிரமித்தல் மற்றும் மேற்கொள்ளப்படும் முறையற்ற நிர்மாணிப்புக்கள்* | *i. குடியிருப்புக்களுக்கு அருகாமையில் ஏற்படும் மாசடைவு*<br>*ii. சமூக ரீதியிலான சிக்கல்கள்*<br>*iii. சுகாதார சிக்கல்கள்* |

***அட்டவணை இலக்கம் 3.1 :*** *: இனங் காணப்பட்ட சிக்கல்களின் முன்னுரிமை ஒழுங்கு வரிசை*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## 3.2.1. பிரதேசத்தில் காணப்படும் சாத்தியக் கூறுகளை அபிவிருத்திக்குப் பயன்படுத்தாமை

### (அ) அலங்கார கடற்கரை, பொல்கொட ஆறு மற்றும் லுனாவை களப்பு போன்ற வளங்களை நிலையாக முகாமைத்துவம் செய்யாமை மற்றும் குறித்த நீர் மூலங்களை மக்களால் அணுக முடியாமை.

கிழக்கிலும் தெற்கிலும் பொல்கொட ஆற்றையும், மேற்கு திசையில் அலங்கார கடற்கரையால் சூழப்பட்ட மற்றும் கொரலவெல்லவிலிருந்து எகொட உயன வரை பொல்கொட ஆற்றையும் கடற்கரையையும் எல்லைகளாகக் கொண்ட 500 – 800 மீற்றர் அளவிலான குறுகிய நிலப்பரப்பைக் கொண்ட மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையானது கொழும்பு தலைநகரை அண்மித்து அமைந்துள்ள, இவ்வாறான மிக விசேடமான அமைவிடத்தைக் கொண்ட ஒரே நகரமாகக் குறிப்பிடலாம். லுனாவை களப்பு மற்றும் ஏனைய ஈர நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் பிரதேசத்தில் நீரைத் தடுத்து வைக்கும் பிரதான நீர் மூலங்களாவதோடு, மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தை நீர் வளம் மிக்க ஒரு பிரதேசமாகக் குறிப்பிடலாம்.



*உரு 3.1 : பொல்கொட ஆறு*
***புகைப்பட அனுசரனை :** மேற்புற இடது பக்கம் : www.flickr.com ; புகைப்படக் கலைஞர் : நத்தாலி சொய்சா,*
*புகைப்பட அனுசரனை மேற்புற வலது பக்கம் : www.flickr.com ; புகைப்படக் கலைஞர் : சமன் பெரேரா,*
*புகைப்பட அனுசரனை கீழ்ப்புறம் : www.flickr.com ; புகைப்படக் கலைஞர் : சன்ன சேனாரத்ன*



***உரு 3.2 :*** *கடற்கரை*
***புகைப்பட அனுசரனை :*** *www.flickr.com ; புகைப்படக் கலைஞர் : திசல் களுஆரச்சி*



***உரு 3.3 :*** *லுனாவை களப்பு*
***புகைப்பட அனுசரனை :*** *மேற்புற இடது பக்க மூலை : www.flickr.com ; புகைப்படக் கலைஞர் : மெல்ஷிரான், புகைப்பட அனுசரனை மேற்புற வலது பக்க மூலை : நகர அபிவிருத்தி அதிகார சபை, புகைப்பட அனுசரனை கீழ்ப்புற இடது மூலை, நடு, வலது மூலை : www.flickr.com ; புகைப்படக் கலைஞர் : நிஷான்*

மொறட்டுவை நகரமானது 19% இயற்கையான நீர் மூலங்களைக் கொடிருந்தாலும், அவ் வளங்கள் நகரின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் வெறுமனே கிடப்பதன் காரணமாக தொடர்ந்தும் மக்களால் இவ் வளங்களை அணுக முடியாமையும், அதன் அழகைக் கண்டு களிக்கும் வாய்ப்பும் இல்லாமற் போயுள்ளமையும், இவ் வளங்கள் படிப்படியாகப் பாதிப்படைந்து வருகின்றமையும் இனங் காணப்பட்டுள்ளன.

## (ஆ) நகர மத்தியில் காணப்படும் காணிகளை உகந்த முறையில் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தாமை

மொறட்டுவை திட்டமிடல் பிரதேசமானது மூன்று பக்கங்களிலும் வனக் காப்புக்களினால் சூழப்பட்ட 23.4 சதுர கிலோ மீற்றர் கொண்ட சிறிய நிலப்பரப்பிற்கு வரையறுக்கப்பட்டுள்ள காரணத்தால் பாவனைக்கு உகந்த காணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், நிதி ரீதியிலும் அழகியல் ரீதியிலும் பெறுமதி மிக்க நகர மத்தியில் அமைந்துள்ள அரசாங்க காணிகள் சிறந்த முகாமைத்துவத்துடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாமை பிரதான சிக்கலாக மாறியுள்ளது. பின்வருமாறு உதாரணங்கள் காட்டலாம்.

- *காலி வீதிக்கு எதிரே அமைந்துள்ள இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான 8 ஏக்கர் காணி (உரு 3.4)*
- *மொறட்டுவை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள தொல்பொருளியல் பெறுமதி மிக்க கட்டிடம் மற்றும் அதற்குரித்தான 3.5 ஏக்கர் அளவிலான பரப்பளவைக் கொண்ட காணி (உரு 3.5)*
- *பொருப்பன வீதி, மாளிகாவ வீதி மற்றும் இரத்மலானை பிரதேசத்திற்கு அருகாமையிலுள்ள மொறட்டுவை வடக்கு எல்லைப் பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில்கள், கிடங்குகள் மற்றும் களஞ்சிய சாலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள காணி. (உரு 3.6)*










***உரு 3.4 :*** *இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணி*
***புகைப்பட அனுசரனை :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2017*

**அத்தியாயம் 03**
அபிவிருத்தித் திட்ட தேவைப்பாடு

சிக்கல்களை இனங் காணல்

பிரதேசத்தில் காணப்படும் சாத்தியக் கூறுகளை அபிவிருத்திக்குப் பயன்படுத்தாமை



***உரு 3.5 :*** *மொறட்டுவை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள தொல்பொருளியல் பெறுமதி மிக்க கட்டிடம் அமைந்துள்ள காணி*
***புகைப்பட அனுசரனை :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2017*



***உரு 3.6 :*** *மொறட்டுவை வடக்கு எல்லைப் பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில்கள், கிடங்குகள் மற்றும் களஞ்சிய சாலைகள்* | ***புகைப்பட அனுசரனை :*** *கூகுள் வரைபடம்*

## 3.2.2. குறைந்த வருமானமுடைய மக்கள் அரசாங்க காணிகள் மற்றும் வனக் காப்புக்களைக் கையகப்படுத்தல் மற்றும் அனுமதியற்ற நிர்மாணிப்புக்கள்

மொறட்டுவை நகரமானது சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களைக் கொண்டுள்ள காரணத்தால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தக் கூடிய காணி அளவு மிக மட்டுப்படுத்தப்பட்டதாகும். குறித்த காணிகளில் அதிக நிதி சார் பெறுமதி காணப்படுவதால் தச்சுத் தொழில் மற்றும் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள குறைந்த வருமானமுடைய மக்கள் வனக் காப்புக்களையும் அரசாங்க காணிகளையும் தாம் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்காகப் பயன்படுத்துவதன் காரணமாக குறித்த வனக் காப்புகளிலும் அரசாங்க காணிகளிலும் அனுமதியற்ற நிர்மாணிப்புக்கள் துரிதமாக அதிகரித்துள்ளதுடன், இந் நிலைமையானது மொறட்டுவை பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பிரதான சிக்கலாக மாறியுள்ளது.

2017.12.11ஆம் திகதி நடைபெற்ற திறத்தவர்களுக்கிடையிலான கூட்டத்தின் போது பொல்கொட ஆறு, புகையிரதம் மற்றும் கடற்கரைக் காப்புக்களில் அனுமதியற்ற 1500 குடும்பங்கள் வாழ்வதாகத் தெரிவிக்கப்பட்டதோடு, மேலும் அனுமதியற்ற 1000 குடும்பங்கள் வாழும் அரசாங்க காணிகளாக தன்தெனிய வத்தை, சமரக்கோன் வத்தை, பிட்டனிய வத்தை மற்றும் பெட்டரி வத்தை போன்றவற்றைக் குறிப்பிடலாம். உரு 3.7 ஊடாக கடற்கரை மற்றும் புகையிரதக் காப்புக்களில் காணப்படும் அனுமதியற்ற நிர்மாணிப்புக்களின் பரம்பல் குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.



***உரு 3.7 :*** *கடற்கரைக் காப்பு மற்றும் புகையிரதக் காப்புக்களில் காணப்படும் அனுமதியற்ற நிர்மாணிப்புக்கள்*
***புகைப்பட அனுசரனை :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## (அ) குடியிருப்புக்களுக்கு அருகாமையில் ஏற்படும் மாசடைவுand

மேற்குறித்த குடியிருப்புக்களுக்கு அருகாமையில் போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் முறையாகக் குப்பைகளை அகற்றல் மற்றும் கழிவு நீரை அகற்றுவதற்கான முறையொன்று இல்லாததோடு, அதிகளவான குடிசை வீடுகளுக்கு அருகில் உற்பத்தியாகும் கழிவுகளை அருகாமையிலுள்ள நீர் மூலங்களுக்கு வெளியேற்றுவதால் குறித்த நீர் மூலங்கள் மாசடைந்துள்ளன. மேலும், நிர்மாண நடவடிக்கைகளுக்கு சதுப்பு நிலப் படர் தாவர வகை-களை அழிப்பதன் காரணமாக உயிரியல் பல்வகைமை அழிவடைதல் மற்றும் சதுப்பு நிலப் படர் தாவர வகைகளினால் ஏற்படும் நீர் சுத்திகரிப்புக்கு தடை ஏற்படலானது சிக்கல் மிகுந்த நிலைமையாக இனங் காணப்பட்டுள்ளது.

மேலும், தச்சுத் தொழிலின் விளைவான மரத் தூளை நீரை அண்டிய பகுதிகளை நிரப்புவதற்காகப் பயன்படுத்தல் மற்றும் மரத் தூளை எரிப்பதால் ஏற்படும் அதிக வெப்ப சக்தியினால் மண் மாசடைவு மற்றும் வளி மாசடைவு ஏற்படுகிறது.

**அத்தியாயம் 03**
அபிவிருத்தித் திட்ட தேவைப்பாடு

சிக்கல்களை இனங் காணல்

பிரதேசத்தில் காணப்படும் சாத்தியக் கூறுகளை அபிவிருத்திக்குப் பயன்படுத்தாமை

## (ஆ) சமூக ரீதியிலான சிக்கல்கள்

மேற்குறித்த அத்தியாயம் 2.2.2.3 (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைந்த வருமானமுடையோரின் குடியிருப்புக்கள் அமைந்துள்ள பிரதேசங்களுக்கு அருகாமையில் குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் குறித்த முறைப்பாடுகள் அதிகளவு அறிக்கையிடப்படுவதோடு, இக் குடியிருப்புக்களை அருகிலுள்ள பௌதீக மாதிரி அதாவது, மிகக் குறுகிய சனத்தொகை குறைந்த வீதி வலையமைப்பு ஒன்று காணப்படல் மற்றும் குறித்த வீதிகளை மேலும் தடைப்படுத்தி, கட்டிடங்களைக் கட்டுவதன் காரணமாக உருவாகியுள்ள திறந்த வெளி, குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் விற்பனைக்குப் பொருத்தமான சூழலை அமைத்துக் கொடுப்பதற்குக் காரணமாக உள்ளது.

## (இ) சுகாதார சிக்கல்கள்

குடிசைகள் மற்றும் சேரிகளை அண்டி வாழும் மக்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாக உள்ளமை காரணமாக அக் குடியிருப்புக்களில் தொற்று நோய்கள் துரிதமாகப் பரவும் போக்கினைக் காண முடிவதோடு, மேற்குறித்த அத்தியாயம் 2.2.2.3 (ஆ) பிரகாரம் காச நோய் மற்றும் தொழு நோய்கள் காணப்படுவதாக இனங் காணப்பட்டுள்ள ஆபத்து நிறைந்த பிரதேசங்கள் பெரும்பாலும் குறைந்த வருமானமுடையோரின் குடியிருப்புக்கள் அமைந்துள்ள பிரதேசங்களென உறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும், நோய்கள் தொற்றிய சந்தர்ப்பங்களில் முறையான சிகிச்சைகளைப் பெறாமை மற்றும் அக் குடியிருப்புக்களிலேயே மறைந்து வாழ்தல் போன்றன இந் நோய்கள் பரவுவதற்கான காரணங்களாகும்.

மேற்குறித்த அத்தியாயம் 3.2.1 இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு மொறட்டுவை திட்டமிடல் பிரதேசத்திற்குரிய சாத்தியக் கூறுகளை மிகச் சிறந்த முகாமைத்துவத்துடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தாமை மற்றும் அத்தியாயம் 3.2.2 இல் விபரிக்கப்பட்டுள்ள வனக் காப்புக்கள் மற்றும் அரசாங்க காணிகளை குறைந்த வருமானமுடையோர் கையகப்படுத்தல் மற்றும் அனுமதியின்றி நிர்மாணிப்புக்களை மேற்கொள்ளல் போன்றவற்றைத் தடுப்பதற்குரிய தீர்வுகளை வழங்க வேண்டிய பிரயோக நிலைமை தோன்றியுள்ளது.

அதற்கமைய, பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் துறைகளை மேம்படுத்துவதற்குக் கூட்டிணைந்த மூலோபாய திட்டமிடல் செயன்முறையொன்றை பின்பற்றி, மொறட்டுவை பிரதேசத்திற்கே உரித்தான புதிய அபிவிருத்திப் போக்குகளை உள்ளீர்த்து, தற்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்தை 2019 – 2030 ற்காக இற்றைப்படுத்தும் தேவைப்பாடு இனங் காணப்பட்டது.

இதன் போது பிரதானமான சிக்கலாக மாறியுள்ள வனக் காப்புக்கள் மற்றும் அரசாங்க காணிகளில் இடம்பெறும் அனுமதியற்ற நிர்மாணிப்புக்கள் மற்றம் அபகரிப்புக்களை நீக்கி, பிரதான சாத்தியக் கூறான நீரை மக்களுக்காகத் திறந்து, நீரை முன்னோடியாகக் கொண்ட அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 வகுக்கப்படுகிறது.



# இரண்டாம் பகுதி

## மொறட்டுவை மாநகர சபை அபிவிருத்தி திட்டத்திற்கான அனுமதி

2019.06.28 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினால் பரிந்துரைக்கப்பட்டதற்கு அமைய, 1982 ஆம் ஆண்டின் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (திருத்தப்பட்ட) சட்ட இல:4, கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மொறட்டுவை மாநகர சபை அபிவிருத்தி திட்டத்திற்கு மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான் இத்தால் அங்கீகாரம் வழங்குகின்றேன்.

------------------------------------------------
**பாட்டலி சம்பிக்க ரணவக்க**
**மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர்**

**மாநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு**
**17 மற்றும்18 ஆம் மாடிகள்,**
**"சுஹுருபாய"**
**ஸ்ரீ சுபத்திபுர வீதி, பத்தரமுல்லை**

**திகதி : 2019.06.28**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2129/94 - 2019 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2019.06.28

*2129/94 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை, கடுவலை மாநகர சபை, மஹரகமை நகர சபை மற்றும் கொட்டிக்காவத்தை - முல்லேரியா பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய தலைநகர அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதிக்கான அறிவித்தல்**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டம் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின் உப பிரிவு 8F இன் பிரகாரம், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இந்தச் சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார் செய்யப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை, கடுவலை மாநகர சபை, மஹரகமை நகர சபை மற்றும் கொட்டிக்காவத்தை - முல்லேரியா பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய தலைநகர அபிவிருத்தித் திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதி வழங்குகிறேன் என்பதை, சட்டத்தின் உப பிரிவு 8G இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
இல. 17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
“சுஹுறுபாய”,
ஸ்ரீ சுபத்திபுர வீதி,
பத்தரமுல்லை,
2019, யூன் 28.

1A - PG 4553 — 177 (2019/06)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2A I කොටස : (I) ඡෙදය - ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ අති විශෙෂ ගැසට් පත්‍රය - 2019.06.28
பகுதி I : தொகுதி (I) - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - அதி விசேஷமானது - 2019.06.28

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை, கடுவலை மாநகர சபை, மஹரகமை நகர சபை மற்றும் கொட்டிக்காவத்தை - முல்லேரியா பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய தலைநகர அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்**

*ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை, கடுவலை மாநகர சபை, மஹரகமை நகர சபை மற்றும் கொட்டிக்காவத்தை - முல்லேரியா பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய அபிவிருத்திப் பகுதிக்காக, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் (திருத்தப்பட்ட) சட்டத்தின் "8A" ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட தலைநகர அபிவிருத்தித் திட்டமானது பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட திருத்தப்பட்ட சட்டப் பிரிவு "8F" இன் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

*ஜகத் முனசிங்க,*
*தலைவர்,*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*2019, யூன் 28.*

*07-4553/1*

---

**கொழும்பு மாநகர சபை, தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகர சபை, கொலன்னாவை நகர சபை, பொரலஸ்கமுவை நகர சபை, பேலியகொடை நகர சபை, வத்தளை-மாபோலை நகர சபை, வத்தளை பிரதேச சபை மற்றும் களனி பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய கொழும்பு வர்த்தக நகர அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதிக்கான அறிவித்தல்**

*நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டம் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின் உப பிரிவு 8F இன் பிரகாரம், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இந்தச் சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார் செய்யப்பட்ட கொழும்பு மாநகர சபை, தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகர சபை, கொலன்னாவை நகர சபை, பொரலஸ்கமுவை நகர சபை, பேலியகொடை நகர சபை, வத்தளை-மாபோலை நகர சபை, வத்தளை பிரதேச சபை மற்றும் களனி பிரதேச வளாகங்களை உள்ளடக்கிய கொழும்பு வர்த்தக நகர அபிவிருத்தித் திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதி வழங்குகிறேன் என்பதை, சட்டத்தின் உப பிரிவு 8G இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

*பாட்டலி சம்பிக்க ரணவக்க,*
*பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.*

*பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,*
*இல. 17 மற்றும் 18 ஆம் மாடிகள்,*
*"சுஹூறுபாய",*
*ஸ்ரீ சுபத்திபுர வீதி,*
*பத்தரமுல்லை,*
*2019, யூன் 28.*

**கொழும்பு மாநகர சபை, தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகர சபை, கொலன்னாவை நகர சபை, பொரலஸ்கமுவை நகர சபை, பேலியகொடை நகர சபை, வத்தளை-மாபோலை நகர சபை, வத்தளை பிரதேச சபை மற்றும் களனி பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய கொழும்பு வர்த்தக நகர அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்**

*கொழும்பு மாநகர சபை, தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகர சபை, கொலன்னாவை நகர சபை, பொரலஸ்கமுவை நகர சபை, பேலியகொடை நகர சபை, வத்தளை-மாபோலை நகர சபை, வத்தளை பிரதேச சபை மற்றும் களனி பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய அபிவிருத்திப் பகுதிக்காக, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபையின் (திருத்தப்பட்ட)*

*சட்டத்தின் "8A" ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட கொழும்பு வர்த்தக நகர அபிவிருத்தித் திட்டமானது பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட திருத்தப்பட்ட சட்டப் பிரிவு "8F" இன் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

ஜகத் முனசிங்க,
தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகார சபை.

*2019, யூன் 28.*

*07-4553/2*

---

## மொறட்டுவை மாநகர சபை அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதிக்கான அறிவித்தல்

*நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டம் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின் உப பிரிவு 8F இன் பிரகாரம், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இந்தச் சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார் செய்யப்பட்ட மொறட்டுவை மாநகர சபை அபிவிருத்தித் திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதி வழங்குகிறேன் என்பதை, சட்டத்தின் உப பிரிவு 8G இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
இல. 17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹுருபாய",
ஸ்ரீ சுபத்திபுர வீதி,
பத்தரமுல்லை,
*2019, யூன் 28.*

## மொரட்டுவை மாநகர சபை வளாகங்களை உள்ளடக்கிய மொரட்டுவை மாநகர அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்

*மொரட்டுவை மாநகர சபை மற்றும் பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய அபிவிருத்திப் பகுதிக்காக, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபையின் (திருத்தப்பட்ட) சட்டத்தின் "8A" ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட மொரட்டுவை அபிவிருத்தித் திட்டமானது பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட திருத்தப்பட்ட சட்டப் பிரிவு "8F" இன் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

ஜகத் முனசிங்க,
தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகார சபை.

*2019, யூன் 28.*

*07-4553/3*

**களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய களுத்துறை நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதிக்கான அறிவித்தல்**

*நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டம் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின் உப பிரிவு 8F இன் பிரகாரம், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இந்தச் சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார் செய்யப்பட்ட களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய களுத்துறை நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதி வழங்குகிறேன் என்பதை, சட்டத்தின் உப பிரிவு 8G இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
இல. 17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹுறுபாய",
ஸ்ரீ சுபத்திபுர வீதி,
பத்தரமுல்லை,
2019, யூன் 28.

**களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய களுத்துறை அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்**

*களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய அபிவிருத்திப் பகுதிக்காக, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபையின் (திருத்தப்பட்ட) சட்டத்தின் "8A" ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட களுத்துறை அபிவிருத்தித் திட்டமானது பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட திருத்தப்பட்ட சட்டப் பிரிவு "8F" இன் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

ஜகத் முனசிங்க,
தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகார சபை.

2019, யூன் 28.

07-4553/4

---

**பேருவளை நகர சபை மற்றும் பேருவளை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய பேருவளை நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதிக்கான அறிவித்தல்**

*நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டம் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின் உப பிரிவு 8F இன் பிரகாரம், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இந்தச் சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார்*

செய்யப்பட்ட பேருவளை நகர சபை மற்றும் பேருவளை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய பேருவளை நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதி வழங்குகிறேன் என்பதை, சட்டத்தின் உப பிரிவு 8G இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
இல. 17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹூறுபாய",
ஸ்ரீ சுபத்திபுர வீதி,
பத்தரமுல்லை,
2019, யூன் 28.

## பேருவளை நகர சபை மற்றும் பேருவளை பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய பேருவளை அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்

பேருவளை நகர சபை மற்றும் பிரதேச சபை வளாகங்களை உள்ளடக்கிய அபிவிருத்திப் பகுதிக்காக, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபையின் (திருத்தப்பட்ட) சட்டத்தின் "8A" ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட பேருவளை அபிவிருத்தித் திட்டமானது பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட திருத்தப்பட்ட சட்டப் பிரிவு "8F" இன் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.


ஜகத் முனசிங்க,
தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகார சபை.

2019, யூன் 28.

07-4553/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

# 04
அத்தியாயம்



# அபிவிருத்தித் திட்டச் சட்டகம்

**அத்தியாயம் 04**
அபிவிருத்தித் திட்டச் சட்டகம்

அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கு

# 4.1. அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கு



*“மேற்குக் கரையிலே நீர் வளம் மிக்கதொரு பூங்கா”*

## 4.2. நோக்கின் வெளிப்பாடு

மொறட்டுவை நகரத்தை 2030 இல் திட்டமிடலுடன் கூடிய ஒரு நகரமாக அபிவிருத்தி செய்யும் நோக்கத்தினை அடைவதற்குத் தேவையான நோக்கினை வகுக்கையில், நகரத்தின் அமைவிடம், அபிவிருத்திப் போக்குகள், காணப்படும் வளங்கள் போன்ற அனைத்துத் துறைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது. இதன் போது பிரதானமாக மொறட்டுவை நகரத்தின் நோக்கினை வகுப்பதற்காக பின்வரும் உரு 4.1 மூலம் காட்டப்பட்டுள்ள சாத்தியக் கூறுகளின் ஊடாக விடயங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

*நீர் வளங்கள்*

*அமைவிடம்*

*சுற்றுலாத் தளங்கள்*



**உரு இலக்கம் 4.1 :** *குறிக்கோள்களை அடைய சாத்தியமான துறைகள்*

### *“மேற்குக் கரை”*

தெற்கிலிருந்து கொழும்பு நோக்கிய தெற்கு வாயில் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையாவதோடு, கொழும்பு மாவட்டத்தின் வலதுபுறம் மேற்கு எல்லையாகவும் மொறட்டுவை நகரம் காணப்படுவதால் “மேற்குக் கரை” எனும் பெயரிடப்பட்டது.

### *“நீர்வளம்”*

மொறட்டுவை நகரானது கிழக்கிலும் தெற்கிலும் பொல்கொட ஆறு, மேற்கில் கடல் என்றவாறு மூன்று பக்கங்களிலும் நீரால் சூழப்பட்ட 30 ஹெக்டெயர் பரப்பளவைக் கொண்ட லுனாவை களப்பு மற்றும் அதனை அண்டியதாகப் பரந்த பல கால்வாய்களையும் உடைய உள்ளக நீர் மூலங்களைக் கொண்டமைந்திருப்பது மொறட்டுவை நகரத்தின் விசேட அம்சமாகும். மேலும், நீரை சேமித்து வைக்கக் கூடிய 20 ஹெக்டயர் ஈர நிலத்தையும் சதுப்பு நிலத்தையும் காண முடிவதோடு, ஒட்டு மொத்தமாக நோக்குகையில், மொறட்டுவை நகர சபை பிரதேசத்தின் மொத்த நிலப் பரப்பில் 19% நீரை அண்டிய இயற்கை வளங்களையும் நீர் மேற் பரப்பையும் கொண்டிருப்பதால் நீரால் தன்னிறைவு பெற்றது என்ற பொருளில் “நீர் வளம்” எனும் பெயரைப் பயன்படுத்துவது பொருத்தமாகும்.

### *“பூங்கா”*

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக தாவர இனங்களும் உயிரினங்களும் வாழும் சதுப்பு நிலம் மற்றும் ஈர நிலம் உட்பட பசுமைக் கவசத்தைப் பாதுகாத்து, நீர்க் காப்பினை மொது மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தக் கூடியவாறு ஈர நிலப் பூங்காவாக அபிவிருத்தி செய்வதற்கு எண்ணியுள்ளதால் அதன் பொருள் கோடலாக “பூங்கா” என்ற பெயர் பயன்படுத்தப்பட்டது.

**அத்தியாயம் 04**
அபிவிருத்தித் திட்டச் சட்டகம்

அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்கள்

## 4.3. அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்கள்

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கினை அடைவதற்குப் பிரதானமாக 03 நோக்கங்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

நோக்கம் 01 — நீரால் வளம் மிக்க நகரம்

நோக்கம் 02 — சுற்றுலா ஈர்ப்பு மிக்க நகரம்

நோக்கம் 03 — நகரின் தேவைகளுக்குப் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்

## 4.4. அபிவிருத்தித் திட்டத்தின் குறிக்கோள்கள்

நோக்கம் 01 — நீரால் வளம் மிக்க நகரம்

குறிக்கோள்கள்

1. 2025ஆம் ஆண்டளவில் பிரதேசத்தில் காணப்படும் நீர் மூலங்கள் (பொல்கொட ஆறு, லுனாவை களப்பு மற்றும் கரையோரம்) மற்றும் ஈர நிலம் மற்றும் சதுப்பு நிலம் என்பவற்றை 100% பாதுகாத்தல்.
2. லுனாவை களப்பை சுற்றாடல் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தல்.

நோக்கம் 02

## சுற்றுலா ஈர்ப்பு மிக்க நகரம்

குறிக்கோள்கள்

1. 2025ஆம் ஆண்டளவில் சுற்றுலாத் தளமாக பொல்கொட ஆறு, லுனாவை களப்பு மற்றும் கடலோரத்தை அண்டிய 160 ஹெக்டயர் அளவிலான செயற்திறனான மற்றும் செயற்திறனற்ற திறந்த பூமியொன்றை உருவாக்கல்.
2. 2030ஆம் ஆண்டளவில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதன் பொருட்டு நீர் வளம் மிக்க அனைத்துப் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்தல்.tourism industry.

நோக்கம் 03

## நகரின் தேவைகளுக்குப் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்

குறிக்கோள்கள்

1. 2030ஆம் ஆண்டளவில் இணைந்த வீதி முறைமையொன்றை உருவாக்குவதற்கு 37 கீலோ மீற்றர் நீளம் கொண்ட வீதி அபிவிருத்தி.
2. 2030ஆம் ஆண்டளவில் காப்புக்கள் மற்றும் அரசாங்க காணிப் பகுதிகளில் வசிக்கும் 2500 குடும்பங்களுக்கு மாற்று வீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்.
3. பாரம்பரிய தச்சுத் தொழிலை மேம்படுத்துவதற்கு ஒழுங்குவிதிகளை இலகுப்படுத்தல் மற்றும் மரத்துடன் தொடர்புடைய உற்பத்தி மேம்பாட்டு வலயமொன்றைத் தாபித்தல்.

# 05

## அத்தியாயம்



# SWOT பகுப்பாய்வு

## 5.1. சராம்சப்படுத்தப்பட்ட SWOT பகுப்பாய்வு

2030ஆம் ஆண்டில் மொறட்டுவை நகரத்தை திட்டமிடலுடன் கூடிய நகரமாக்கும் நோக்கினை அடையக் கூடிய வகையில் பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ரீதியில் காணப்படும் பலங்கள், பலவீனங்கள், சந்தர்ப்பங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை இனங் காண்பதற்கு SWOT பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் மூலம் அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒவ்வொரு நோக்கத்திற்கும் அமைவாக மேற்கொள்ளப்பட்ட சராம்சப்படுத்தப்பட்ட SWOT பகுப்பாய்வு மற்றும் விரிவான SWOT பகுப்பாய்வு முறையே அத்தியாயம் 5.1 மற்றும் 5.2 மூலம் காட்டப்பட்டுள்ளன.

### 5.1.1. “நீரால் வளம் மிக்க நகரம்” எனும் நோக்கத்திற்கான சராம்சப்படுத்தப்பட்ட SWOT பகுப்பாய்வு

**S**

- *23.4 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிலான மொறட்டுவை மாநகர சபையின் மொத்த நிலப் பரப்பில் 19% நீரை அண்டிய இயற்கை வளமாதல்*
- *இலங்கையின் விசாலமான நன்னீர் ஈரநிலமாகக் கருதப்படும் பொல்கொட நீரோடையைக் கொண்டிருத்தல்.*
- *உயர் உயிரியல் பன்மைத்துவத்தினால் வளம் பொருந்திய நீரியல் சுற்றாடல் முறைமையுடன் கூடிய ஈரநிலங்கள் காணப்படல்*

**W**

- *நீரை அண்டிய முக்கியப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் காணி மீட்டல் மற்றும் அனுமதியற்ற நிர்மாணிப்புக்கள்*
- *தொழிற்சாலைகளில் உருவாகும் கழிவுகளை அருகிலுள்ள நீர் நிலைகளுக்கு வெளியேற்றல்*
- *லுனாவை களப்பை சுற்றாடல் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தாமை*
- *பொல்கொட, லுனாவை களப்பு மற்றும் கடலோர சதுப்புநிலத் தாவரங்கள் அழிந்து போகும் நிலை காணப்படல்*

**O**

- *1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் பொல்கொட பிரதேசம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.*

**T**

- *உலக வெப்பநிலை*
- *உயர்வடைவதன் காரணமாக*
- *ஏற்படும் கடல் நீர் மட்டம்*
- *உயர்வடைதல்.*

## 5.1.2. "சுற்றுலா ஈர்ப்பு மிக்க நகரம்" எனும் நோக்கத்திற்கான சராம்சப்படுத்தப்பட்ட SWOT பகுப்பாய்வு

**S**

- *மொறட்டுவை மாநகர சபை பிரதேசமானது இலங்கையின் நான்காவது பாரிய சுற்றுலா ஈர்ப்பு மிக்க கொழும்பு சுற்றுலா நகரத்திற்குரித்தான மற்றும் சுற்றுலா ஈர்ப்புடன் கூடிய இரண்டு பிரதேசங்களுக்கு அதாவது, வடக்கில் தெஹிவளை – கல்கிசை மாநகர சபை பிரதேசத்திற்கும் தெற்கில் பாணந்துறை நகரத்திற்கும் இடையே அமைந்துள்ளது.*

**W**

- *மொறட்டுவை நகரமானது இயற்கை நீர் மூலங்களைக் கொண்டிருந்தாலும், குறித்த நீர் மூலங்களை மக்கள் அணுகுவதற்கு பௌதீக ரீதியில் காணப்படும் தடைகள் மற்றும் நீர் மூலங்கள் மாசடைவதால் அவற்றின் ஈர்ப்புத் தன்மை தரமிழப்பதன் காரணமாக நகரத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதன் பொருட்டு அவ் வளங்களைப் பயன்படுத்த முடியாதுள்ளமை.*

**O**

- *2016 ஆம் வருடத்தில் வகுக்கப்பட்ட மேல் மாகாண வலம் சார் மாநகர திட்டத்தின் கீழ் மொறட்டுவை நகரமானது சுற்றுலா வலயத்தில் அமைந்துள்ள ஒரு நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு இனங் காணப்பட்டுள்மை.*

**T**

## 5.1.3. நகரின் தேவைகளுக்குப் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்

**S**

- *மொறட்டுவை நகரத்திற்கு மத்தியில் செல்லும் காலி வீதியானது கொழும்பு நகரத்திற்குப் பிரவேசிக்கும் ஏழு கொரிடோக்களுள் ஒன்றாதல் மற்றும் மொறட்டுவை நகரில் காலி வீதியை மையமாகக் கொண்ட நன்கு பரம்பலடைந்த வீதி முறைமை ஒன்று காணப்படல்.*
- *மொறட்டுவை பிரதான புகையிரத நிலையத்தை மையமாகக் கொண்ட நான்கு உள்ளகப் புகையிரத நிலையங்களைக் கொண்டிருத்தல்.*

**W**

- *மொறட்டுவை நகரத்தில் வசிக்கும் சனத்தொகையினருக்குப் போதியளவு திறந்த வெளி.கள் காணப்படாமை.*
- *மொறட்டுவை நகரத்திற்குப் பொது போக்குவரத்து தரிப்பிடங்கள் இன்மை.*
- *குறைந்த வசதிகளுடன் கூடிய வீடுகள் மற்றும் வீடுகள் பற்றாக்குறை காணப்படல்.*

**O**

- *உத்தேச பன்முக போக்குவரத்து நிலையங்கள் கருத்திட்டம் மற்றும் கடலோர வீதியை மொறட்டுவை வரை நீடித்தல்.*
- *மாநகர போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் உத்தேச இலகு புகையிரத வீதிக் கருத்திட்டம்.*

**T**

- *சிவில் விமானச் சேவை அதிகார சபையின் அதிகாரத்திற்குட்பட்ட உயர எல்லை*

# 5.2. விரிவான SWOT பகுப்பாய்வு

## 5.2.1. நோக்கம் 01

*“நீரால் வளம் மிக்க நகரம்” எனும் நோக்கத்திற்கான சராம்சப்படுத்தப்பட்ட தர பகுப்பாய்வு*

### 5.2.1.1. பலங்கள் | நோக்கம் 01

*(அ) 23.4 சதுர கிலோ மீற்றர் கொண்ட மொறட்டுவை மாநகர சபையின் மொத்த நிலப் பரப்பின் 19% நீரை அண்டிய இயற்கை வளமாதல்.*

மொத்த நுகர்வின் 19% இயற்கை நீர் மற்றும் நீர் மூலங்களைக் கொண்ட மொறட்டுவை நகரமானது பின்வரும் அட்டவணை இலக்கம் 5.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு 1.6% களப்பையும், 1.4% ஈர நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்களையும் மற்றும் 15.5% ஆறுகளையும் கொண்டமைந்துள்ளது.


| இயற்கை வள வகை | மொத்த நிலப்பரப்பின் சதவீதம் |
|---|---|
| களப்பு | 1.60% |
| ஈர நிலம் மற்றும் சதுப்பு நிலம் | 1.90% |
| ஆறுகள் | 15.50% |
| மொத்தம் | 19% |

**அட்டவணை இலக்கம் 5.1 :** மொறட்டுவை இயற்கை வளப் பரம்பல்
**மூலம் :** நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018

*(ஆ) இலங்கையின் விசாலமான நன்னீர் ஈரநிலமாகக் கருதப்படும் பொல்கொட நீரோடையைக் கொண்டிருத்தல்.*

இலங்கையின் விசாலமான உள்ளக நன்னீர் ஈரநிலமாகக் கருதப்படும் பொல்கொட ஈரநிலம், வேரஸ் ஆறு, பொல்கொட ஆறு, பாணந்துறை ஆறு மற்றும் பொல்கொட வாவி என்பவற்றைக் கொண்டமைந்துள்ளதோடு, பொல்கொட வாவி, வடக்கு பொல்கொட வாவி மற்றும் தெற்கு பொல்கொட வாவியாக 400 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட விசாலமான நீர்த் தேக்கங்கள் இரண்டைக் கொண்டுள்ளது. மேலும், பொல்கொட நீரோடை, தியவன்னாவ மற்றும் தலங்கம நகர ஈர நிலம் என்பவற்றுடன் தொடர்புபடுவதுடன், பொல்கொட நீர் வளப் பிரதேசம் உரு இலக்கம் 5.1 மூலம் காட்டப்பட்டுள்ளது.

பொல்கொட இயற்கை ஈர நிலைமை மூலம் சுற்றாடற் சமநிலையை ஏற்படுத்துவதற்குத் துணையாகும் உயிரியல் சேவைகளுள் ; நீர்த் தேவையைப் பூர்த்தி செய்தல், சுற்றாடலை குளிரச் செய்தல், வெள்ளம் மற்றும் வறட்சியைக் கட்டுப்படுத்தல், உயிரியல் பன்மைத் தன்மையைக் காத்தல், நன்னீர் கடற்றொழிலை மேம்படுத்தல், மாசு மற்றும் வண்டல் பொருட்களின் வடிகட்டியாகச் செயற்படல், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தல் மற்றும் இயற்கை நீர் சுத்திகரிப்பு போன்றவை முக்கியமானவையாகும். (Sri Lanka Water Partnership (SLWP), 2016)




***உரு இலக்கம் 5.1 :*** *பொல்கொட நீர் வளப் பிரதேசம்*
***மூலம் :*** *Japan International Cooperation Agency, 2003*

உரு இலக்கம் 5.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு 394 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட பொல்கொட நீர் வளப் பிரதேசத்தின் வடக்கு நீர் வளப் பிரதேசம் வேரஸ் ஆற்று நீர் வளப் பிரதேசமாகக் குறிப்பிடப்படுவதுடன், இவ் வேரஸ் ஆற்று நீர் வளப் பிரதேசமானது 55.5 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட மற்றும் நுகேகொடை – ரத்தனப்பிட்டிய, பொல்கொட கால்வாய், பொரலஸ்கமுவ வடக்கு, பொரலஸ்கமுவ தெற்கு, மஹ கால்வாய், தம்போவில மற்றும் இரத்மலானை – மொறட்டுவை போன்ற ஏழு உப நீர் வளப் பிரதேசங்களைக் கொண்டமைந்தது. அதற்கமைய, 8.1 ச.கி.மீ. பரப்பளவைக் கொண்ட இரத்மலானை – மொறட்டுவை உப நீர் வளப் பிரதேசமானது மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் அமைந்துள்ளது.

### *(இ) உயர் உயிரியல் பன்மைத்துவத்தினால் வளம் பொருந்திய நீரியல் சுற்றாடல் முறைமையுடன் கூடிய ஈரநிலங்கள் காணப்படல்*

லுனாவை களப்பு மற்றும் பொல்கொட ஆற்றை அண்டி உயர் உயிரியல் பன்மைத்துவத்துடன் கூடிய விலங்கு மற்றும் தாவர அடர்த்தியைக் காண முடிவதோடு, குறிப்பாக லுனாவை களப்பை அண்டியதாக இடம்பெயரும் மற்றும் இடம்பெயராத 75 பறவை இனங்கள் வாழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. (துஷாரா, 2009) பின்வரும் 5.2 இல் குறிப்பிடப்பட்டவாறு பொல்கொட மற்றும் லுனாவை ஈர நிலச் சூழல் முறைமைகளை அண்டி வாழும் உயர் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் காரணமாக இயற்கை வளம் மிக்க மற்றும் உயிரியல் பன்மைத்துவங்களினால் வளம் பெற்ற சூழலொன்று மொறட்டுவை நகரில் உருவாகியுள்ளமை புலனாகிறது.

| *பொல்கொட ஆற்றின் அருகாமையில் காணக்கூடிய விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள்* | |
|---|---|
| *தாவர இனங்கள்* | தாமரை, கொட்டி, ஜப்பன்ஜபர, லில்லி, நீர் பெர்ரி, துல்ஹிரிய, அத்த, பொக்குட்டு, பிம்தம்பரு மூங்கில் வகை, பாக்கு, லுனுவில, வாகை, செல்வீனியா, ஹபரல, கண்டல் வகை, மருதம், கிரல மற்றும் வேறு வகை; |
| *பறவை இனங்கள்* | மீன் கொத்தி, மைனா, கொக்கு, அன்னம், பருந்து, வாத்து, காகம், வௌவால்<br><br>விஞ்ஞானப் பெயர் : *Anserini, Tyrannidae, Gruidae, Hirundinidae, Numenius, Phalacrocoracidae, Gallinula chloropus, Lonchura atricapilla* |
| *வேறு நீரியல் உயிரினங்கள்* | • மீனினங்கள் *Esomus thermoicos, Channa orientalis, Clarias brachysoma, Aplocheilus dayi*<br>• ஊர்வன *Otocryptis weigmanni, Cylindrophis maculatus, Lycodon osmanhilli, Oligodon sublineatus, Xenocrophis asperrimus*<br>• பாலூட்டிகள் *Trachypithecus vetulus*<br>• நீரிலும் நிலத்திலும் வாழ்வன *Bufo atukoralei, Rana gracilis, Polypedatus cruciger*<br>• அரிய இனங்கள் *Loris tardigradus, Pelecanus philippensis, Prionailurus viverrinus, Lutra lutra and Crocodylus palustris* |

***அட்டவணை இலக்கம் 5.2 :*** *பொல்கொட ஆற்றின் அருகாமையில் காணக்கூடிய விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் | **மூலம் :** மத்திய சுற்றாடல் அதிகார சபை, 2016*

### *(ஈ) பொல்கொட, லுனாவை களப்பு மற்றும் கடலோர சதுப்புநிலத் தாவரங்கள் வளர்வதற்கு உகந்த சுற்றாடல் நிலைமை காணப்படல்*

“Mangrove” என்பது ஸ்பானிய மற்றும் போர்த்துக்கேய மொழிகளின் செல்வாக்கினைக் கொண்ட ஆங்கிலச் சொல்லாவதோடு, சிங்கள மொழியில் அது” கடொலான” அல்லது” கடொல் வகுரு” எனப் பயன்படுத்தப்படும் தாவரவியல் சார் புவியியல் வடிவமாகும். சதுப்பு நிலத் தாவரக் குடும்பமானது கடலோர ஆறுகள், கழிமுகங்களில் அல்லது கடற்கரை ஓரமாகப் பரம்பலடையும் மரம் அல்லது புதர்களாவதோடு, அமில வேறுபாடு, வெப்பநிலை வரம்புகள் மற்றும் ஈரப்பத வரம்புகளுக்கு அமைய தழுவிச் செல்லும் திறனுடைய தாவரங்களாகக் கருதப்படுகின்றன.

இலங்கையில் சதுப்புநிலத் தாவரங்கள் பரவிக் காணப்படும் மேற்குக் கடலோரப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது பொல்கொட வாவி, லுனாவை களப்பு மற்றும் மீகமுவை களப்பு என்பவற்றை மாத்திரம் இனங் காண முடிவதோடு, பின்வரும் அட்டவணை இலக்கம் 5.3 இல் காட்டப்பட்டுள்ள 20 சதுப்பு நிலத் தாவரங்கள் வளர்ச்சி அடைவதற்குப் பொருத்தமான சுற்றாடல் நிலைமைகள் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள பொல்கொட வாவி மற்றும் லுனாவை களப்பை அண்டி காணப்படுகின்றமை இனங் காணப்பட்டுள்ளது. (வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், 2017)

| *இனம்* | *விஞ்ஞானப் பெயர்* | *சிங்கள வழக்குச் சொல்* |
|---|---|---|
| *Pteridaceae* | *Acrostichum speciosum* | *Weralla* |
| *Myrsinaceae Primulaceae* | *Aegiceras corniculatum* | *Heen gas* |
| *Acanthaceae* | *Avicennia alba* | *Madagas* |
| *Acanthaceae* | *Avicennia marina* | *Mandamadagas* |
| *Acanthaceae* | *Avicennia* | *Manda* |
| *Rhizophoraceae* | *Bruguiera gymnorrhiza* | *Sirikanda* |
| *Rhizophoraceae* | *Bruguiera sexangula* | *Malkadol* |
| *Malpighiales* | *Ceriops tagal* | *Rathugas, Punkada* |
| *Euphorbiaceae* | *Excoecaria agallocha* | *ThelaKiriya, Thela* |
| *Sterculaceae* | *Heritiera littoralis* | *Atuna* |
| *Combretaceae* | *Lumnitzera littorea* | *Beriya* |
| *Combretaceae* | *Lumnitzera racemosa* | *Beriya* |
| *Rubiaceae* | *Morinda citrifolia* | *Ahu* |
| *Arecaceae* | *Nypa fruticans* | *Ginpol* |
| *Pandanaceae* | *Pandanus tectorius* | *Mudukeyya* |
| *Rhizophoraceae* | *Rhizophora apiculata* | *Kadol* |
| *Rhizophoraceae* | *Rhizophora mucronat* | *MahaKadol* |
| *Lythraceae* | *Sonneratia alba* | *Kirala* |
| *Lythraceae* | *Sonneratia caseolaris* | *Kirilla, Honda Kirilla* |
| *Meliaceae* | *Xylocarpus granatum* | *MuttiKadol* |

**அட்டவணை இலக்கம் 5.3 :** *பொல்கொட வாவி மற்றும் லுனாவை களப்பை அண்டி வளரக் கூடிய 20 சதுப்பு நிலத் தாவரங்கள்*

## 5.2.1.2. பலவீனங்கள் | நோக்கம் 01

### *(அ) நீரை அண்டிய முக்கியப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் காணி மீட்டல் மற்றும் அனுமதியற்ற நிர்மாணிப்புக்கள்*

நீர் முறைமை, தாவர மேலடுக்கு மற்றும் விளிம்புக் கோட்டுப் பரம்பல் குறித்து ஆய்வு செய்து, மொறட்டுவை திட்டமிடல் பிரதேசத்திற்கு அமைவாக சுற்றாடல் முக்கியத்துவங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதோடு, குறித்த முக்கிய இடப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட முறை இணைப்பு 5 மூலமாகவும் சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்த பகுப்பாய்வு வரைபட இலக்கம் 5.1 மூலமாகவும் காட்டப்பட்டுள்ளன.

சுற்றாடல் முக்கியத்துவம் வாய்ந்த பகுப்பாய்வானது வரைபடத்திற்கு அமைய இளம் பச்சை நிறத்தில் தென்படும் அதி முக்கியமான சுற்றாடல் நிலைமைகளுடனான நீரை அண்டிய மற்றும் நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசங்களாக இனங் காணப்பட்டுள்ள பொல்கொட காப்பு, லுனாவை களப்புப் பிரதேசம் மற்றும் கடற்கரைக் காப்பு போன்றன அனுமதி அற்ற நிர்மாணிப்புக்கள் மற்றும் காணி மீட்புக்கள் அதிகம் காணப்படும் பிரதேசங்களாக உறுதி செய்யப்பட்டுள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் திறந்த பல்கலைக்கழகம், சிவில் பொறியியல் பீடம் போன்றவற்றால் மேற்கொள்ளப்பட்ட Investigation of illegal encroachment and land filling in Bolgoda Environment Protection area, Colombo ஆராய்ச்சி அறிக்கைக்கு அமைய பொல்கொட காப்புப் பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டில் அனுமதி அற்ற காணி மீட்பு மற்றும் அனுமதி அற்ற கையகப்படுத்தல்கள் முறையே 0.0756 சதுர கி.மீ. மற்றும் 0.0077 சதுர கி.மீ. எனக் குறிப்பிடப்படுகின்றன. மேலும், பண்டாரகம மற்றும் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் ஒப்பீட்டு ரீதியில் மொறட்டுவை, இரத்மலானை, பாணந்துறை மற்றும் கெஸ்பேவ போன்ற பிரதேசங்களில் வனக்காப்பு ஆக்கிரமிப்புக்களின் தாக்கம் அதிகம் என அறிக்கையிடப்பட்டுள்ளது. (குமுதினி என்.எம்.யூ. அத்தபத்து பீ.சீஎல், 2013)

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பல பிரதேசங்களுக்கு ஏற்ப கூகுள் வரைபடத்தின் துணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் கடந்த 10 வருட காலப்பகுதியில் அனுமதியற்ற மீட்புக்கள் மற்றும் நிர்மாணிப்புக்களில் அதிகரிப்பு காணப்படுகின்றமை பின்வரும் உரு 5.2, 5.3 மற்றும் 5.4 மூலம் தெளிவாகிறது.




*Year 2004*



*Year 2015*

***உரு இலக்கம் 5.2 :*** *மதுரு தூவ தீவை அண்டிய அனுமதியற்ற காணி மீட்டல்கள்*
***மூலம் :*** *கூகுள் வரைபடத்தின் துணையுடன் நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*




மொறட்டுவை சுற்றாடல் முக்கியத்துவப் பகுப்பாய்வு – 2018
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்

0 0.25 0.5 1 1.5 2 Kilometers

நகர அபிவிருத்தி அதிகார சபை
டிசம்பர் 2018

மூலம்: கொம் டிரான்ஸ் ஆய்வு | மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) | தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 5.1 :*** *மொறட்டுவை சுற்றாடல் முக்கியத்துவப் பகுப்பாய்வு – 2018* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*



Year 2004 Year 2015

**உரு இலக்கம் 5.3 :** *கட்டுபெத்த ஈர நிலங்களை அண்டிய அனுமதியற்ற காணி மீட்டல்கள்*
**மூலம் :** *கூகுள் வரைபடத்தின் துணையுடன் நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*




Year 2004 Year 2015

**உரு இலக்கம் 5.4 :** *புகையிரத காப்பு மற்றும் கடற்கரையை அண்டிய கொரலவெல்ல பிரதேசத்தின் அனுமதி அற்ற நிர்மாணிப்புக்கள்*
**மூலம் :** *கூகுள் வரைபடத்தின் துணையுடன் நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## *(ஆ) தொழிற்சாலைகளில் உருவாகும் கழிவுகளை அருகிலுள்ள நீர் மூலங்களுக்கு வெளியேற்றல்.*

2016 ஆம் ஆண்டில் மொறட்டுவை மாநகர சபை எல்லையில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் பரிந்துரைக்கப்பட்ட தொழில்களுள் அதிக மாசுடைய ஏ தொகுதியைச் சேர்ந்த 122 தொழில்கள், நடுத்தர அளவிலான மாசுடைய பீ தொகுதியைச் சேர்ந்த 70 தொழில்கள், மாசற்ற தொகுதியைச் சேர்ந்த 305 தொழில்கள் மற்றும் முதலீடு மற்றும் மேம்பாட்டு சபைக்குரித்தான 14 தொழில்கள் என்றவாறு 511 தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், பின்வரும் உரு 5.5 மூலம் அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள தொழில்களின் இடம்சார்ந்த பரம்பல் காட்டப்பட்டுள்ளது.

தொழில்கள் மூலம் மேற்கொள்ளப்படும் உற்பத்திச் செயற்பாட்டின் போது உருவாகும் அசுத்தமான நீரை சுத்திகரிப்பு செய்ததன் பின்னர் அருகிலுள்ள இயற்கை நீர் மூலங்களுக்கு நேரடியாக அல்லது பொது அசுத்த நீர் வடிகாலமைப்பு முறைமைகள் வாயிலாக நீர் மூலங்களுக்கு வெளியேற்றப்படுவதுடன், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் அசுத்த நீர், 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (பாதுகாப்பு மற்றும் தரம்) கட்டளையாகக் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் 1534/18 ஆம் இலக்க மற்றும் 2018.02.01 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள "அசுத்தமான நீரை வெளிப்புறச் சூழலுக்கு வெளியேற்றுகையில் ஏற்புடைய தரம் மற்றும் அளவு" களுக்கு அமைய குறித்த அசுத்த நீரின் செறிவானது உரிய நீர் மூலத்தின் கொள்திறனைப் போன்று எட்டு மடங்கான பெறுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.




**உரு இலக்கம் 5.5 :** *ஏ,பீ மற்றும் சீ தொகுதிகளைச் சேர்ந்த தொழில்களின் இடம்சார்ந்த பரம்பல்*
**மூலம் :** *மத்திய சுற்றாடல் அதிகார சபை, 2016*

கலாநிதி சேபால சமரசேகர அவர்களினால் பிரகடனப்படுத்தப்பட்ட Socio Ecological Review of Bolgoda Lake in Sri Lanka, 2017 ற்கு அமைய பொல்கொட ஆற்றின் நீர் மாதிரியைப் பரிசீலிப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் பின்வரும் அட்டவணை இலக்கம் 5.4 இலும் அதற்குரிய முடிவுகள் இணைப்பு இலக்கம் 6 இலும் காட்டப்பட்டுள்ளன.

| | வெப்பநிலை | pH பெறுமதி | இரசாயன ஒட்சிசன் கேள்வி | உயிரியல் ஒட்சிசன் கேள்வி | மொத்த அடைக்கப்பட்ட பொருட்கள் | மொத்த திரவத் திடப் பொருட்கள் | மொத்த நைதரசன் பெறுமதி | திரவ ஒட்சிசன் | ஊடு கடத்தும் ஆற்றல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலகு | செல்சியஸ் | | ஒரு லீற்றருக்கு மில்லி கிராம் | | | | | | மிலிவோல்ட் |
| அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி | | 6.0-8.5 | 250 | 3-5 | 50 | 25-250 | | 3 | |
| கொஸ்பலன இவுர | 29.9 | 7.5 | 200 | 7 | 10 | 228 | இ.மு. | 7.9 | 20 |
| கொரலவெல்ல இவுர | 29.8 | 8 | 600 | 22 | 555 | 9028 | 5.6 | 5.3 | 20 |
| கொரலவெல்ல மத்திய | 29.7 | 8 | 600 | 21 | 553 | 12484 | 5.6 | 6.6 | 30 |
| பஹல இந்திபெத்த இவுர | 31.4 | 7.9 | 200 | 8 | 47 | 4404 | இ.மு. | 6.7 | 20 |
| கடொலான மத்திய | 29.9 | 8.3 | 400 | 12 | 217 | 4848 | 2.8 | 9.2 | 30 |
| கடொலான இவுர | 31.3 | 7.8 | 100 | 14 | 310 | 5024 | இ.மு. | 4.3 | 20 |
| வில்லோர வத்தை மத்திய | 30 | 8.3 | 200 | 4 | 47 | 980 | இ.மு. | 9.5 | 10 |

- *அவதானிக்கப்பட்ட பெறுமதி அதன் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியிலிருந்து விலகிய சந்தர்ப்பங்களில் குறித்த பெறுமதி மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டுள்ளது.*
- *இ.மு. – இனங்காண முடியவில்லை.*

**அட்டவணை இலக்கம் 5.4 :** *பொல்கொட ஆற்றின் நீர் மாதிரி அவதானிப்பு அறிக்கை*
**மூலம் :** *கலாநிதி சமரசேகர எஸ், 2017*

### *(இ) லுனாவை களப்புப் பிரதேசத்தை சுற்றாடல் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தாமை*

விரிவான SWOT பகுப்பாய்வின் அத்தியாயம் 5.2.1.1 ; பலங்களின் கீழ் லுனாவை களப்புப் பிரதேசத்தில் உயர் விலங்கினங்கள் மற்றும் தாவர இனங்களின் அடர்த்தி மற்றும் பன்முகத்தன்மை காணப்படுவதாக இனங் காணப்பட்டுள்ளதுடன், மேலும் நீரியல் அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த நீர் மற்றும் நிலத்துடன் தொடர்புடைய சுற்றாடல் முறைமை ஒன்று காணப்படுகின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய லுனாவை களப்புப் பிரதேசமானது உயிரியல் பன்மைத்துவத்திற்கு அமைய முக்கியத்துவம் மிக்க ஒரு இடமாகக் கருதப்பட்டாலும் குறித்த பிரதேசத்தை சுற்றாடல் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்படாமை ஒரு பலவீனமாக இனங் காணப்பட்டுள்ளது.

### *(ஈ) பொல்கொட, லுனாவை களப்பு மற்றும் கடலோர சதுப்பு நிலத் தாவரங்கள் அழிவடையும் நிலை காணப்படல்*

அத்தியாயம் 5.2.1.1 ஈ இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சதுப்பு நிலத் தாவரங்களின் வளர்ச்சிக்கு மிக உகந்த சுற்றாடல் நிலைமை பொல்கொட வாவி, லுனாவை களப்பு மற்றும் கடலோரம் காணப்படுகின்றமை இனங் காணப்பட்டாலும் தற்போது பல்வேறு மனிதச் செயற்பாடுகள் மற்றும் முறையற்ற முகாமைத்துவம் காரணமாக அப் பிரதேசங்களில் காணப்படும் மிகப் பெறுமதி வாய்ந்த மற்றும் உயர் உயிரியல் பன்மைத்துவம் கொண்ட சதுப்பு நிலத் தாவரங்கள் படிப்படியாக அழிவடைந்து வருகின்றமை இனங் காணப்பட்டுள்ளது.

**மொறட்டுவை ஈர நிலங்களை அண்டிய சதுப்பு நிலத் தாவரங்கள் அழிவடைவதற்கான காரணங்கள் மற்றும் அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் ;**

i. பொல்கொட ஆற்றின் இறால் பண்ணை நிர்வாகம் – இறால் தொட்டிகளிலிருந்து வெளியேற்றப்படும் பூஞ்சை நீர், உணவுக் கழிவுகள், இறால்களின் கழிவுகள், சேதன மற்றும் அசேதன கிருமி நாசினிகள் போன்றவை அதிகளவில் வெளியேற்றப்படுவதன் காரணமாக பருவ மழைவீழ்ச்சிக் காலங்களில் அவை நீர்த்தேக்கம் முழுதும் பரவுவதால் உள்நாட்டுத் தாவர இனங்கள் மற்றும் விலங்கினங்கள் அழிவடைதல்.

ii. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் நச்சுக் கழிவுகள், திண்மக் கழிவுகள் மற்றும் மரத் தொழிற்சாலைகளிலிருந்து அகற்றப்படும் மரத் தூள் என்பவற்றை நீர்த்தேக்கங்களில் கலத்தல் – இவ்வாறு வெளியேற்றப்படும் கழிவுகள் சதுப்பு நிலத் தாவரங்களுடன் கலப்பதால் வேர்கள் தடைப்படுவதால் சதுப்பு நிலத் தாவரங்களின் நல்ல வளர்ச்சிக்குத் தடை ஏற்படுகிறது. மேலும், இதன் மூலம் நுண் தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கும் வாழ்வதற்குப் பொருத்தமற்ற சூழல் உருவாவதோடு, மறைமுகமாக மனிதர்களின் ஆரோக்கியத்திற்கும் தீங்கான விளைவுகளை ஏற்படுத்தும். (உதாரணமாக நோய்க் கிருமிகள் பரவுவதால் காய்ச்சல் ஏற்படல்) மேலும் உயிரினங்களின் இனப் பெருக்கச் செயற்பாடு பாதிப்படைவதால் பிரதேசத்தில் உயிரினப் பல்வகைமை மற்றும் உயிரினங்களின் இருப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.


iii. நீர் நிலைகளை அண்டிய பிரதேசங்கள் மீட்பு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக சதுப்பு நிலத் தாவரங்களை வெட்டுதல் – இதன் போது குறுகிய காலப் பகுதியில் பாரிய அளவில் தாவரங்கள் அழிக்கப்படுவதால் மற்றும் காணி மீட்புப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் முறையற்ற நிர்மாணிப்புக்கள் காரணமாக சதுப்பு நிலத் தாவரங்கள் இயற்கை முறையில் புதுப்பிக்க முடியாமற் போதல்.

## 5.2.1.3. சந்தர்ப்பங்கள் | நோக்கம் 01

(அ)

1980 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் இலக்கம் 24 இ மற்றும் ஈ பிரிவுகள் பிரகாரம் பொல்கொட சுற்றாடல் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையானது நீரினால் வளம் மிக்க நகரம் எனும் நோக்கத்தை அடைகையில் முக்கியமான சந்தர்ப்பமாக அமையும். அதற்கமைய மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மொறட்டுவை கிழக்கு மற்றும் தெற்கு எல்லைகளான பொல்கொட ஆற்றிற்காக 60 மீற்றர் அளவிலான காப்பு எல்லை ஒன்று பேணப்பட்டு வருகிறது.

உரு 5.6 இல் காட்டப்பட்டுள்ளவாறு பொல்கொட ஆறானது கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் 84 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளடங்கும் வகையில் பாய்வதோடு, அவற்றுள் 21 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மொறட்டுவை மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவையாகும். மேலும், குறித்த உருவில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நிர்வகிக்கப்படும் 60 மீற்றரான பொல்கொட ஆற்றுக் காப்பும் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.




**உரு 5.6 :** பொல்கொட சுற்றாடல் பாதுகாப்பு வலயம்
**மூலம் :** மத்திய சுற்றாடல் அதிகார சபை, 2012

## 5.2.1.4. அச்சுறுத்தல்கள் | Goal 01



### *(அ) உலக வெப்பநிலை உயர்வடைவதன் காரணமாக ஏற்படும் கடல்நீர் மட்டம் உயர்வடைதல்*

ஐக்கிய நாடுகளின் சுற்றாடற் கருத்திட்டம், உலக வானிலை அமைப்பு மற்றும் விஞ்ஞான ரீதியிலான சங்கங்கள் குறித்த சர்வதேச சபை போன்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து 2007 ஆம் ஆண்டில், உலக வானிலை மாற்றங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள "Intergovernmental Panel on Climate Change (IPCC)" அறிக்கையை வெளியிட்டுள்ளது. உலக வெப்பநிலை அதிகரிப்பின் காரணமாக இலங்கையில் கடல் நீர் மட்டம் உயர்வடைதலை கணிப்பதற்காக மேற்குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின் துணையுடன் 2012 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கண்காணிப்பின் கீழ், கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வளப் பாதுகாப்பு முகாமைத்துவ திணைக்களத்தினால் கடலோரத்தை அண்டிய பிரதேசங்கள் நீரில் மூழ்கக் கூடிய போக்கு கணிக்கப்பட்டதோடு, அதன் போது 25, 50, 75, 100 என நான்கு கால இடைவெளிகளின் கீழ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் துணையுடன் மொறட்டுவை பிரதேசத்திற்கு "கடல் நீர் மட்டம் உயர்வடைதல் – 66 பதிவு மற்றும் 77 பதிவு" எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இரண்டு வரைபடங்கள் இணைப்பு 7 இல் காட்டப்பட்டுள்ளன.

**குறித்த வரைபடங்களின் ஆய்வின் மூலம் பின்வரும் முடிவுகளுக்கு வரலாம்.**

i. 25 வருட கால இடைவெளியில் கடல் நீர் மட்டம் உயர்வடைவதன் காரணமாக மொறட்டுவை கடற்கரைப் பாதுகாப்புப் பகுதி நீரில் மூழ்கக் கூடிய சாத்தியக்கூறு காணப்படுகிறது.

ii. படிப்படியாக 100 ஆண்டுகள் கழிகையில் லுனாவை களப்பு மற்றும் பொல்கொட ஆற்றை அண்டிய பிரதேசமும் நாட்டின் உள்ளகப் பிரதேசங்களும் நீரில் மூழ்கக் கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதாக இனங் காணப்பட்டுள்ளது.

iii. கொரலவெல்லேவிலிருந்து எகொட உயன வரையான குறுகலான நிலப் பகுதியானது கடல் நீர் மட்டம் உயர்வடையக் கூடிய அதிக ஆபத்தான வலயமாக இனங் காணப்பட்டுள்ளது.

## 5.2.2. நோக்கம் 02


*சுற்றுலா ஈர்ப்பு மிக்க நகரம்” எனும் நோக்கத்திற்கான விரிவான தரப் பகுப்பாய்வு.*

### 5.2.2.1. பலங்கள் | நோக்கம் 02

*(அ) மொறட்டுவை மாநகர சபை பிரதேசமானது இலங்கையின் நான்காவது பாரிய சுற்றுலா ஈர்ப்பு மிக்க கொழும்பு சுற்றுலா நகரத்திற்குரித்தான மற்றும் சுற்றுலா ஈர்ப்புடன் கூடிய இரண்டு பிரதேசங்களுக்கு அதாவது, வடக்கில் தெஹிவளை – கல்கிசை மாநகர சபை பிரதேசத்திற்கும் தெற்கில் பாணந்துறை நகரத்திற்கும் இடையே அமைந்துள்ளமை.*

திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட அதே வேளை இலங்கை பாரம்பரியமற்ற பொருளாதார சாத்தியக்கூறுகளை குறித்து அவதானம் செலுத்தியதுடன், அதன் போது ஏற்றுமதித் துறை மீது கவனம் செலுத்தி, சுற்றுலாத்துறை, ஆடைக் கைத்தொழில் மற்றும் தயாரிக்கப்பட்ட விவசாய உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளில் ஈடுபட்டது. அதற்கமைய மொறட்டுவை அபிவிருத்தி திட்டத்தை வகுக்கையில் பிரதேசத்திலுள்ள சாத்தியக்கூறுகளைப் பயன்படுத்தி, இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கக் கூடிய துறைகள் மீது கவனம் செலுத்தப்பட்டதுடன், அதன் போது சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்கான பலங்கள் இனங் காணப்பட்டன.

மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் சுற்றுலாத்துறையின் மேம்பாட்டுக்கான பிரதானமான பலமாக அதன் அமைவிடத்தைக் குறிப்பிடலாம். அதாவது, மொறட்டுவை நகரம் இலங்கையின் நான்காவது பாரிய சுற்றுலா ஈர்ப்பு மிக்க கொழும்பு சுற்றுலா நகரத்திற்குரித்தான மற்றும் சுற்றுலா ஈர்ப்புடன் கூடிய இரண்டு பிரதேசங்களுக்கு அதாவது, வடக்கில் தெஹிவளை – கல்கிசை மாநகர சபை பிரதேசத்திற்கும் தெற்கில் பாணந்துறை நகரத்திற்கும் இடையே அமைந்துள்ளமையைக் குறிப்பிடலாம். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை 2017 ற்கு அமைய இலங்கை ஏழு சுற்றுலா வலயங்களுக்கு அதாவது, கொழும்பு நகரம் (கொழும்பு 1 – 14), கொழும்பு வலயம், தெற்கு கடலோரப் பிரதேசம், கிழக்கு கடலோரப் பிரதேசம், மத்திய மலைத் தொடர், பண்டைய நகரம் மற்றும் வடக்குப் பிரதேசம் என பிரித்துக் காட்டப்பட்டுள்ளதுடன், மொறட்டுவை நகரமானது கொழும்பு (மொறட்டுவையிலிருந்து கொழும்பு வரை மற்றும் நீர் கொழும்பு முதல் கொழும்பு வரையான பிரதேசம்) சுற்றுலா வலயத்திற்கு உரித்தானது. (உரு 5.7)




***உரு 5.7 :** இலங்கை சுற்றுலா வலயங்கள்*
***மூலம் :** இலங்கை தேசிய வரைபடம், 2007*

மேற்குறித்த சுற்றுலாத்துறை வலயங்களில் காணப்படும் வதிவிட வசதிகளைக் கவனத்திற் கொள்கையில், கொழும்பு பிரதேசம் 13.74% கொள்திறனைக் கொண்டுள்ளதுடன், கொழும்பு நகரப் பிரதேசத்தின் அதாவது, கொழும்பு நகரம் (1–14) 22.62% கொள்திறனைக் கொண்டுள்ளது. அதற்கமைய, கொழும்பு உட்பட ஏனைய அண்மித்த நகரங்களின் மொத்தக் கொள்திறன் 36.36% ஆகும். மேலும் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் பெற்றுக் கொள்ளும் தங்குமிடங்களின் விகிதத்தை ஒப்பிடுகையில் கொழும்பு வலயத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்குமிடங்களைப் பெற்றுக் கொள்ளும் எண்ணிக்கை 73.14% ஆவதுடன், சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்கல் மற்றும் தங்குமிடங்களைப் பெற்றுக் கொள்ளும் எண்ணிக்கையின் படி கொழும்பு சுற்றுலா வலயம் நான்காவது இடத்தைப் பெற்றுக் கொள்வது அட்டவணை இலக்கம் 5.5 பிரகாரம் உறுதியாகிறது. (இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, 2017)

| சுற்றுலாப் பெருநகரம் | சுற்றுலா தங்குமிட வசதிகளின் கொள்திறன் | தங்குமிடங்களைப் பெற்றுக் கொள்ளும் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு நகரம் (கொழும்பு 1 -14) | 22.62% | 75.31% |
| கொழும்பு வலயம் | 13.74% | 73.14% |
| தெற்கு கடலோர பிரதேசம் | 35.23% | 72.38% |
| கிழக்கு கடலோர பிரதேசம் | 4.82% | 72.95% |
| மத்திய மலைத் தொடர் | 5.78% | 73.55% |
| பண்டைய நகரம் | 17.11% | 73.85% |
| வடக்குப் பிரதேசம் | 0.70% | 70.98% |

**அட்டவணை இலக்கம் 5.5 :** சுற்றுலாப் பெருநகரங்களின் சுற்றுலா தங்குமிட வசதிகளின் கொள்திறன் மற்றும் தங்குமிடங்களைப் பெற்றுக் கொள்ளும் அளவு
**மூலம்** : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, 2017

மொறட்டுவை மாநகர சபை வடக்கு எல்லையான தெஹிவளை – கல்கிஸ்சை மாநகர சபை பிரதேசங்கள் மற்றும் தெற்கு எல்லையான பாணந்துறை நகரம் தற்போதும் சுற்றுலா ஈர்ப்பு குறையாத பிரதேசங்களாகும். அவ்வாறு அப் பிரதேசங்களுக்கு சுற்றலா ஈர்ப்பு ஏற்படுவதற்கான காரணங்களாக துரிதமாக பரவும் நவீன கடைகள், ஆடையகங்கள், நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் பல்வேறு தொடர்மாடிக் கட்டிடங்கள் போன்றவற்றைக் குறிப்பிட முடியும் என்பதோடு, தெஹிவளை மிருகக் காட்சிசாலை காரணமாகவும் வருடாந்தம் ஏறத்தாழ 1,400,000 சுற்றுலாப் பயணிகள் தெஹிவளை – கல்கிஸ்சைப் பிரதேசங்களை நாடிச் செல்கின்றனர். (இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, 2017). மேலும், கண்கவர் கடற்கரைகள், அதனை அண்டிப் பரவும் ஹோட்டல்கள் காரணமாக இப் பிரதேசங்கள் மிகப் பிரபலமான சுற்றுலாப் பயண முடிவிடங்களாக மாறியுள்ளன.

தற்போது மொறட்டுவை நகரத்தில் காணப்படும் சுற்றுலா ஈர்ப்பு மிகக் குறைந்த அளவாக இருப்பினும், மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு தெஹிவளை – கல்கிஸ்சை மற்றும் பாணந்துறை நகரங்களுக்கான சுற்றுலா ஈர்ப்பைப் பயன்படுத்தி, மொறட்டுவை நகரத்தையும் சுற்றுலாவிற்கான இருப்பிடமாக்கும் சாத்தியக்கூறு காணப்படுகின்றமை புலனாகிறது.

## (ஆ) மொறட்டுவை நகரமானது மூன்று பக்கங்களிலும் இயற்கை நீர் மூலங்களை எல்லைகளாகக் கொண்டு உப நகரப் பண்புகளைக் கொண்டமைந்த வர்த்தக அணுசக்தியாக விருத்தி அடைதல்

### மொறட்டுவை நகரமானது மூன்று பக்கங்களிலும் இயற்கை நீர் மூலங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளமை.

மொறட்டுவை நகரத்தின் நிர்வாக எல்லையான மாநகர சபை எல்லையானது இயற்கையாகவே மூன்று பக்கங்களிலும் நீரை எல்லையாகக் கொண்டுள்ளது. அதாவது, மொறட்டுவை நகரம் மேற்கு பக்கம் கடலோர வெளியில் இந்து சமுத்திரத்தை நோக்கிச் செல்லும் அழகிய நிலப் பரப்பைக் கொண்டுள்ளதோடு, கிழக்கிலும் தெற்கிலும் பொல்கொட ஆற்றை எல்லையாகக் கொண்டுள்ளது.

மொறட்டுவை மாநகர சபை நிர்வாக எல்லையில் காணப்படும் ஒரே ஒரு நில எல்லையாக வடக்கில் தெஹிவளை – கல்கிஸ்சை மாநகர சபை அதிகார எல்லையை இனங் காணலாம். இதற்கமைய மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் மொத்த எல்லை நீளத்தின் சுமார் 40 கி.மீ. நீரைமுக்கியத்துவமாகக்கொண்டபிரதேசமாகும். இதன்காரணமாகசுற்றுலாத்துறையை மேம்படுத்துகையில் நீரை முக்கியத்துவமாகக் கொண்ட அபிவிருத்தியை ஊக்குவிக்கக் கூடியவாறு அதற்கு மிகப் பொருத்தமான சுற்றாடல் நிலைமை இயற்கையாகவே மொறட்டுவை நகரிற்கு உரித்தாகியுள்ளது.

**புற நகரப் பண்புகளைக் கொண்ட வர்த்தக அனுசக்தியாக விருத்தி செய்தல்**

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இலங்கை போன்ற தெற்காசிய மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளின் கேந்திர நிலையமாக முதல் நகரங்கள் உருவாகியுள்ளமையை இனங் காணலாம். இவ்வாறு முதல் நகரங்கள் உருவாகுவதற்கு பிரதேசத்தின் வீதி முறையுடன் தொடர்புடைய பௌதீக கட்டமைப்பு நேரடியாகத் தாக்கம் செலுத்தியுள்ளதுடன், சமூக மற்றும் சுற்றாடற் பண்புகளும் அதற்குக் காரணமாகியுள்ளன. அவ்வாறு இலங்கையில் உருவாகிய முதல் நகரமாக கொழும்பு நகரைக் குறிப்பிடலாம். (ரிமர், 1998). இத்தகையதொரு பின்னணியில் படிப்படியாக கொழும்பின் முக்கிய பிரதேசங்கள் துரிதமாக சனத்தொகை அடர்த்தியுடன் கூடியதாக மாறுவதோடு ஏற்பட்ட சுற்றாடல் மற்றும் சமூக சிக்கல்கள் வசிப்பதற்குப் பொருத்தமற்ற சூழலை உருவாக்கியதன் காரணமாக மக்கள் இடப்பெயர்வு ஆரம்பமானது. அதன் விளைவாக கொழும்பின் முக்கிய பிரதேசத்தை அண்மித்த தெஹிவளை – கல்கிஸ்சை, மொறட்டுவை, பாணந்துறை, மஹரகம போன்ற புற நகர கேந்திரத் தரமொன்று உருவாகத் தொடங்கியது.கேந்திரத் தரமொன்று உருவாகத் தொடங்கியது.

மேலும், மத்திய வர்த்தகப் பிரதேசம் சனத்தொகை கூடிய பிரதேசமாக மாறியதுடன், அதன் இடவசதிகள் பற்றாக்குறை மற்றும் சேவைக்கான தேவைப்பாடு அதிகரித்தமை காரணமாக புற நகரக் கேந்திரங்கள் உருவாகியுள்ளதுடன், குறித்த புற நகரப் பிரதேசங்களை நோக்கியதாகப் பரம்பலடையும் நடவடிக்கைகளாக விற்பனை நிலையங்கள், கடைத் தொகுதிகள், திரையரங்குகள், தளபாட விற்பனை நிலையங்கள், விடுமுறை விடுதிகள் மற்றும் சுற்றுலாச் சேவைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். (கோட்டேகொட எஸ்.பீ.பீ., 2015)

ஏதேனும் ஒரு நகரில் சுற்றுலாப் பணிகளை மேம்படுத்துவதற்குத் தாக்கம் செலுத்தும் ஒரு காரணியாக நகரமயமாக்கலின் தீவிரத்தைக் குறிப்பிடலாம். மொறட்டுவை நகரமானது கொழும்பு நகரை அண்மித்ததாக அமைந்த வியாபார நடவடிக்கைகள் தாபிக்கப்பட்ட துணை நகரமாக இருப்பதால் சுற்றுலா ஈர்ப்பை அடைவதற்குத் தேவையான வசதிகளை விருத்தி செய்வதற்கு மிகப் பொருத்தமான பிரதேசமாகக் குறிப்பிடலாம்.

மேற்குறித்த விடயங்களை நோக்குகையில், சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான சுற்றாடல், பொருளாதார மற்றும் வர்த்தகப் பின்னணியைக் கொண்ட ஒரு பிரதேசமாக மொறட்டுவை நகரத்தைக் குறிப்பிடலாம்.

## *(இ) மொறட்டுவை நகரில் பாரம்பரியமாகக் காணப்படும் தச்சுக் கைத்தொழில்*

மொறட்டுவை நகரின் அடையாளமாக பாரம்பரிய மரத் தளபாடத் தொழிலைக் குறிப்பிட முடியும் என்பதுடன், தற்போது நகர மக்களின் பிரதான சீவனோபாயத் தொழிலாக இருப்பது தச்சுத் தொழிலாகும். பிரதானமாக மொறட்டுமுல்ல, இந்திபெத்த, கடலான, வில்லோரவத்தை மற்றும் கொரளவெல்ல போன்ற பிரதேசங்களை கேந்திரமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்கால மரத் தளபாட உற்பத்தியானது பாரிய அளவில் இயந்திரங்களின் துணையுடன் நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி, அதிகூடிய உற்பத்தித் திறனுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மொறட்டுவை மாநகர சபை, 2017)

83% கடின மரங்கள் மற்றும் 17% வரை இலகு மரங்களைப் பயன்படுத்தி மரத்தாலான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதோடு, மாதாந்தம் 64,000 மரத் தளபாட அலகுகள் உற்பத்தி செய்யப்படுவதோடு, மாதாந்தம் 54 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அமரசேகர ரீ.ஏ.டீ.எஸ். மற்றும் ஜயபால எம்.எஸ்.) அதற்கமைய இலங்கையில் பிரதானமாக மரத் தளபாடங்களை உற்பத்தி செய்யும் நகரம் மொறட்டுவை நகரம் என்பதால் நகரின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தக் கூடிய கருவியாக தச்சுத் தொழிலைக் குறிப்பிடலாம்.

## 5.2.2.2. பலவீனங்கள் | நோக்கம் 02

*(அ) மொறட்டுவை நகரமானது இயற்கை நீர் மூலங்களைக் கொண்டிருந்தாலும், அந் நீர் மூலங்களை மக்கள் அணுகுகையில் காணப்படும் பௌதீகத் தடைகள் மற்றும் நீர் மூலங்கள் மாசடைவதால் அவற்றின் ஈர்ப்பு குறைவடைவதன் காரணமாக நகரில் சுற்றுலாத் துறை மேம்பாட்டிற்கு குறித்த வளங்களைப் பயன்படுத்த முடியாதுள்ளமை.*

மொறட்டுவை நகரமானது உயர் உயிரியல் பன்மைத்துவத்துடன் கூடிய நீர் மூலங்களைக் கொண்டிருந்தாலும், அந் நீர் மூலங்கள் மிகத் துரிதமாக மாசடைந்து வருவதால் அவற்றின் உயிரினப் பல்வகைமை மற்றும் எழில் படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றன. மொறட்டுவை நகரத்தின் மிக நீளமான பொல்கொட நீர் முக்கியத்துவப் பிரதேசத்திற்கு பல்வேறு காரணங்களினால் மக்கள் பிரவேசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், அதற்கான காரணங்களாக மொறட்டுமுல்ல, இந்திபெத்த பிரதேசங்களில் தச்சுத் தொழில் ஆற்றங் கரை வரை பரவுகின்றமை, நீர் முக்கியத்துவப் பிரதேசத்தில் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள குடிசை வீடுகள் மற்றும் பொல்கொட ஆற்றை அடைவதற்குப் போதிய அகன்ற பாதைகள் இன்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும், மொறட்டுவை நகரம் கண்கவர் கடற்கரையைக் கொண்டிருந்தாலும், புகையிரதப் பாதை மற்றும் கரையோரப் பாதுகாப்பு எல்லையில் அனுமதியற்ற குடிசைகள் மற்றும் சேரி வீடுகள் காணப்படுவன் காரணமாக மக்களுக்கு பாதுகாப்பாகவும் வசதியாகவும் கடற்கரையை அடைந்து அதன் அழகை இரசிப்பதற்கு முடியாதுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமீட்டில் நிர்மாணிக்கப்பட்ட மொறட்டுவை – லுனாவை உடற்பயிற்சி பாதை கருத்திட்டத்தின் கீழ் நடைபாதையை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக மேலதிகமாக களப்பு நீர் சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் களப்புடன் தொடர்புபடும் கால்வாய் வழியில் கழிவுகள் மற்றும் அசுத்தமான நீர் வெளி-யேற்றப்படுவதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தால் தற்போது லுனாவை களப்பு நீர் மீளவும் படிப்படியாக மாசடைந்து வருவது அவதானிக்கப்பட்டது.

### **5.2.2.3. சந்தர்ப்பங்கள்.** | நோக்கம் 02

*(அ) 2016 ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட மேல்மாகாண வலய மாநகர சபை திட்டத்தின் கீழ் மொறட்டுவை நகரத்தை வலயத்தில் அமைந்துள்ள நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு இனங் காணப்பட்டுள்ளது.*

2016 ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட மேல்மாகாண வலய மாநகர சபை திட்டம் (உரு 2.14) மூலம் மேல்மாகாணம் ஆறு வலயங்களாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளதுடன், அதிக அடர்த்தியுடைய வலயத்திற்கு உரித்தான நீர்கொழும்பிலிருந்து அளுத்கம வரையான சுற்றுலா வலயத்தில் அமைந்துள்ள கொழும்புப் பிரதேசத்திற்கு மிக அண்மித்த துணை நகரமாக மொறட்டுவை நகரம் இனங் காணப்பட்டுள்ளது.


## **5.2.3.** நோக்கம் 03

*நகரின் தேவைகளுக்குப் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்" என்பது குறித்த விரிவான தரப் பகுப்பாய்வு*

### **5.2.3.1. பலங்கள்** | நோக்கம் 03

*(அ) மொறட்டுவை நகரின் மத்தியில் செல்லும் காலி வீதி கொழும்பு நகருக்குப் பிரவேசிக்கும் ஏழு கொரிடோக்களுள் ஒன்றாதல் மற்றும் மொறட்டுவை நகரில் காலி வீதியை கேந்திரமாகக் கொண்ட நன்கு பரம்பலடைந்த வீதி முறைமை ஒன்று காணப்படல்.*


9 கி.மீ. நீளமான காலி வீதி மொறட்டுவை நகரின் மத்தியில் செல்வதோடு, உரு 5.8 இல் காட்டப் பட்டுள்ளவாறு கொம்டிரான்ஸ் ஆய்வறிக்கை தரவுகளுக்கு அமைய அது கொழும்பு நகருக்குப் பிரவேசிக்கும் பிரதான ஏழு கொரிடோக்களுள் மூன்றாவது செயற்திறனான கொரிடோ எனக் குறிப்பிடலாம். அதில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு 2013 ஆம் ஆண்டில் நாளாந்தம் 298,000 பயணிகள் காலி வீதி ஊடாக பயணித்துள்ளதோடு, அது 2023 ஆம் ஆண்டளவில் நாளாந்தம் 447,500 வரை அதிகரிக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.




Source: CoMTrans Study Team

*உரு 5.8. : கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் பிரதான கொரிடோ*
***மூலம் :*** *கொம்டிரான்ஸ் ஆய்வறிக்கை, 2014*

மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்துக்காக மேற்கொள்ளப்பட்ட இடம்சார் கூட்டுப் பகுப்பாய்வுக்கு (வரைபட இலக்கம் 5.2) அமைய, திட்டமிடல் பிரதேசத்தின் பல பிரதேசங்களில் உயர் மற்றும் நடுத்தரப் பெறுமதிகளிலான இடம்சார் கலப்பு ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிவதால் திட்டமிடல் பிரதேசத்தில் நன்கு பரம்பலடைந்த வீதி முறைமை ஒன்று காணப்படுகிறது என்ற முடிவுக்கு வரலாம். அதன் விளைவாக பல்வேறு நிலப் பயன்பாடுகள் மற்றும் பல்வேறு செயற்பாடுகள் மொறட்டுவை நகரம் முழுதும் இலகுவாகப் பரம்பலடையும் சாத்தியம் உள்ளது என்பது உறுதியாகிறது.




***வரைபட இலக்கம் 5.2 :*** *இடம்சார் கூட்டுப் பகுப்பாய்வு – 2018* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*


**அத்தியாயம் 05**
SWOT பகுப்பாய்வு

விரிவான SWOT பகுப்பாய்வு

நோக்கம் 03

## (அ) மொறட்டுவை பிரதான புகையிரத நிலையத்தை கேந்திரமாகக் கொண்ட நான்கு உள்ளக புகையிரத நிலையங்களைக் கொண்டிருத்தல்

மொறட்டுவை நகரின் புகையிரத நிலைய முறைமையானது மொறட்டுவை பிரதான புகையிரத நிலையத்தைக் கேந்திரமாகக் கொண்டு பின்வரும் உரு 5.9 படி அங்குலானை, கொரலவெல்ல, லுனாவை, எகொட உயன எனும் நான்கு உள்ளக புகையிரத நிலையங்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.




அங்குலானை புகையிரத நிலையம்

லுனாவை புகையிரத நிலையம்

கொரலவெல்ல புகையிரத நிலையம்

மொறட்டுவை புகையிரத நிலையம்

எகொட உயன புகையிரத நிலையம்

**உரு 5.9 :** *மொறட்டுவை புகையிரத நிலையங்கள்*
***மூலம் :*** *கூகுள் வரைபடம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள கொரலவெல்ல, எகொட உயன மற்றும் மொறட்டுவை உள்ளக புகையிரத நிலையப் பிரதேசத்தின் மக்களின் குறுகிய தூர போக்குவரத்து மற்றும் பொருட்களை ஏற்றிச் செல்லல் போன்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய போக்கினைக் காண முடிவதோடு, பேருந்துகளை விட புகையிரதத்தை போக்குவரத்து ஊடகமாகப் பயன்படுத்துவது மொறட்டுவை பிரதேசத்தில் காணக் கூடிய ஒரு விசேட அம்சமாகும்.

## 5.2.3.2. பலவீனங்கள் | நோக்கம் 03

### *(அ) மொறட்டுவை நகரில் வசிக்கும் சனத்தொகையினருக்குப் போதிய திறந்த வெளிகள் இன்மை.*

தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட 2012 தொகைமதிப்பு தரவுகளின் படி மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் ஏறத்தாழ 167,000 மக்கள் வாழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் பொது திறந்த வெளிக்கான அங்கீகரிப்புக்கு அமைய 1000 நபர்களுக்கு குறைந்தபட்சம் 1.4 ஹெக்டயர் பொது திறந்த வெளிப் பகுதியொன்றை ஒதுக்குதல் வேண்டும். அதற்கமைய மொறட்டுவை திட்டமிடல் பிரதேசத்துக்கு குறைந்தபட்சம் 230 ஹெக்டயர் பொது திறந்த வெளிப் பகுதியொன்றை ஒதுக்க வேண்டும் எனினும் தற்போது மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் 6 ஹெக்டயர் பொது திறந்த வெளிப் பகுதியொன்று காணப்படுவதால் அது தற்போது வசிக்கும் மக்களுக்கு எந்த வகையிலும் போதுமானதல்ல என இனங் காணப்பட்டுள்ளது.

### *(ஆ) மொறட்டுவை நகரத்துக்கு பொது வாகனத் தரிப்பிடம் இன்மை*

மொறட்டுவை நகரம் அதிக சனத்தொகையைக் கொண்ட நகரம் என்பதால் விற்பனை நிலையங்கள், கல்வி நிறுவனங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வேறு சேவைகளை வழங்கும் இடங்கள் நகரில் திரட்சியாகக் காணப்படுவதால் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தரும் மக்களின் வாகனங்களைத் தரித்து வைப்பதற்கு நிறுவனத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இட வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தால் வீதியின் இரு மருங்கிலும் மக்கள் வாகனங்களை நிறுத்தி வைக்கின்றனர். அதே போன்று மொறட்டுவை நகரில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு பொது வாகனத் தரிப்பிடம் இன்மை பிரதான சிக்கலாக மாறியுள்ளது.

### *(இ) குறைந்த வசதிகளுடன் கூடிய வீடுகள் மற்றும் வீடுகள் பற்றாக்குறை காணப்படல்*

2012 தொகைமதிப்பு அறிக்கையின் தரவுப் பகுப்பாய்வு மூலம் அண்ணளவாக 375 வீடுகளுக்கான பற்றாக்குறை காணப்படுவதாக இனங் காணப்பட்டுள்ளதுடன், தன்தெனியவத்தை, பெட்டரிவத்தை, பிட்டனியவத்தை மற்றும் சமரகோன்வத்தை போன்ற அரச காணிகள் மற்றும் கடற்கரை, புகையிரத மற்றும் நீர்க் காப்பு பிரதேசங்களில் வசிக்கும் குறைந்த வசதிகளுடன் கூடிய 2500 குடும்பங்களுக்கு வசதிகளுடன் கூடிய வீடுகள் இன்மையானது பலவீனமாக இனங் காணப்பட்டது.


## 5.2.3.3. சந்தர்ப்பங்கள் | நோக்கம் 03

### *(அ) உத்தேச பன்முக போக்குவரத்து நிலையக் கருத்திட்டம் மற்றும் கடலோர வீதியை மொறட்டுவை வரை நீடித்தல்*

#### உத்தேச பன்முக போக்குவரத்து நிலையம்

கொழும்பு நகரத்திற்குப் பிரவேசிக்கும் தெற்கு வாயிலாகக் கருதப்படும் மொறட்டுவை நகரத்தை மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள பிரதான நகரமாகக் குறிப்பிட முடியும்

என்பதோடு, கொழும்புக்கு சமாந்தரமாக பாணந்துறை, பிலியந்தலை மற்றும் மஹரகம நகரங்களுடனும் உள்ளகத் தொடர்பைப் பேணும் பிரதேசமாகவும் மொறட்டுவை நகரத்தைக் குறிப்பிடலாம். மொறட்டுவை பல்கலைக்கழகம், ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனம், வேறு கல்விசார் மற்றும் தொழிநுட்ப நிறுவனங்கள், தொழிற் பகுதி மற்றும் தனியார் நிறுவனங்கள் பல இப் பிரதேசத்தில் ஒன்றிணைந்து காணப்படுவதால் நாளாந்தம் அதிகளவான பயணிகள் நடமாடுவதோடு முறையான மற்றும் வினைத்திறனான பொது போக்குவரத்து சேவை-யொன்றிற்கான தேவை எழுந்துள்ளது.




*உரு 5.10 : உத்தேச மொறட்டுவை பன்முக போக்குவரத்து நிலையக் கருத்திட்டத் திட்டம்*
*மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை, 2017*

மொறட்டுவை பிரதான புகையிரத நிலையம் மற்றும் பிரதான பஸ் நிலையம் என்பவற்றை அண்மித்த 8 ஏக்கர் அளவிலான பரப்பளவைக் கொண்ட புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பில் (உரு 5.10) ஒன்றிணைந்த பஸ் மற்றும் புகையிரத முனையம், கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் இலகு புகையிரத முறைமையுடன் வாகனங்களை நிறுத்தக் கூடிய வசதிகளுடன் மொறட்டுவை பன்முக போக்குவரத்து நிலையத்தை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### உத்தேச கடலோர வீதியை மொறட்டுவை வரை நீடித்தல்

உத்தேச கடலோர வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூலம் மொறட்டுவை நகரம் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை விசேட சந்தர்ப்பமாகும், கொழும்பிலிருந்து செல்லும் உத்தேச கடலோர வீதியை வீரப்புரன் அப்பு ரஜ மாவத்தை ஊடாக மொறட்டுவை நகர மத்தியப் பகுதியுடன் இணைத்து நிர்மாணிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

### *(ஆ) மாநகர போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் உத்தேச இலகு புகையிரத வீதிக் கருத்திட்டம்*

மாநகர போக்குவரத்துத் திட்டத்தின் மூலம் உத்தேச இலகு புகையிரத வீதிக் கருத்திட்டம், பச்சை, சிவப்பு, நீல வீதிகளாக மூன்று பகுதிகளின் கீழ் மேற்கொள்வதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூன்றாவது பகுதியாக பசுமை (பச்சை) வீதி களனி, தெமட்டகொடை, பொரளை, நாராஹேன்பிட்ட, நுகேகொடை, பிலியந்தலை ஊடாக மொறட்டுவை நோக்கி 28.3 கி.மீ. நீளத்தில் இலகு புகையிரத வீதியை நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது. அவ் இலகு புகையிரத வீதியின் முடிவிடம் மொறட்டுவை பன்முக போக்குவரத்து நிலையமாவதோடு, இடைநிலை தரிப்பிடங்களாக மொறட்டுவை பல்கலைக்கழகம், கட்டுபெத்த மற்றும் ராவத்தாவத்தை பிரேரிக்கப்பட்டுள்ளது.

### *(இ) தன்தெனியவத்தை, சமரகோன்வத்தை, பிட்டனியவத்தை மற்றும் பெட்டரிவத்தைக்கு உத்தேச வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்*

தன்தெனியவத்தை, சமரகோன்வத்தை, பிட்டனியவத்தை மற்றும் பெட்டரிவத்தை மற்றும் குறைந்த வசதிகளுடனான வீடுகளில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தொடர்மாடி வீட்டுத் தொகுதியினை நிர்மாணிப்பதற்குப் பிரேரிக்கப்பட்டுள்ளது. நகர மறுமலர்ச்சி கருத்திட்டமாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இவ் வீடமைப்புத் திட்டத்தின் போது காணியின் ஒரு பகுதி குறைந்த வசதிகளுடனான குடும்பங்களுக்கு தொடர்மாடி மனைகளை நிர்மாணிப்பதற்காகவும் எஞ்சிய நிலப்பரப்பை கலப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக விடுவிப்பதற்கும் திட்டமிடப்பட்டு வருகிறது.

## 5.3.3.4. அச்சுறுத்தல்கள் | நோக்கம் 03

### *(அ) சிவில் விமான சேவைகள் அதிகார சபையினால் நிர்வகிக்கப்படும் உயர எல்லை*

மொறட்டுவை மாநகர சபை பிரதேசமானது இரத்மலானை விமான ஓடுபாதை எல்லைக்கு அருகாமையில் அமைந்திருப்பதன் காரணமாக கட்டிட நிர்மாணிப்பின் போது சிவில் விமான சேவைகள் அதிகார சபையினால் விதிக்கப்படும் உயர எல்லைகளுக்கு அமைவாக அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

# 06

அத்தியாயம்



# அபிவிருத்தித் திட்டம்

# 6.1 கருத்துருத் திட்டம்

அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இனங் காணப்பட்ட நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிதர்சனமாக்குவதன் ஊடாக அபிவிருத்தி நோக்கை அடைந்து கொள்வதற்காக 2030 ஆம் ஆண்டாகையில் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையின் உத்தேச அபிவிருத்தி நிகழ வேண்டிய முறையானது கருத்துருத் திட்டத்தின் ஊடாக எளிமையாக பகுத்தாய்வு செய்யப்படும். இங்கு பிரதானமாக பிரதேசத்தில் காணப்படும் அபிவிருத்திப் போக்குகள், இயற்கை வளங்கள், சுற்றுலா ஈர்ப்பு மற்றும் அமைவிடம் போன்ற விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அபிவிருத்திப் போக்கின் தாக்கம் குறித்து ஆராய்கையில், எதிர்கால அபிவிருத்திகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், அதாவது உத்தேச பன்முக போக்குவரத்துத் திட்டத்தை முன்னோடியாகக் கொண்டு நகர மத்திய பகுதியை முதல் நிலை சந்தியாகவும், கட்டுபெத்த, பொருப்பன மற்றும் ராவத்தாவத்தையை இரண்டாம் நிலை சந்தியாகவும் அபிவிருத்தி செய்வதற்காக இனங் காணப்பட்டுள்ளன. மேலும், மூன்றாம் நிலை சந்தியாக அங்குலானை மற்றும் மொறட்டுவை புதிய பாலச் சந்தி இனங் காணப்பட்டதோடு, சில குடியிருப்புச் சந்திகளும் அபிவிருத்திப் போக்குகளுக்கு அமைய அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

கருத்துருத் திட்டத்தின் மூலம் மொறட்டுவை நகரிற்கே விசேடமான சுற்றாடல் முறைமைகளாக இனங் காணப்பட்ட மூன்று பக்கங்களும் நீரால் சூழப்பட்டுள்ளமை, அதாவது கிழக்கிலும் தெற்கிலும் பொல்கொடை ஆற்றையும், மேற்கில் கடற்கரையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளமை, உள்ளக நீர் மூலங்களாக 30 ஹெக்டயர் பரப்பளவைக் கொண்ட லுனாவைக் களப்பு, வேரஸ் ஆறு மற்றும் லுனாவையை அண்டி பரந்துள்ள கால்வாய் வழிகள், நீரை சேமித்து வைக்கும் இடங்களாக 20 ஹெக்டயர் கொண்ட ஈர நிலம் மற்றும் சதுப்பு நிலம் போன்ற பிரதேசம் முழுதும் பரந்துபட்டுள்ள நீர் வளத்தை முதன்மையாகக் கொண்ட சுற்றாடல் வளங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் நீர் வளம் மிக்க பூங்காவாக பொது மக்களின் நலனுக்காக திறந்து வைத்து, அவ் அனுபவத்தை ஏனையோரும் பெறக் கூடியவாறு சுற்றுலாத் துறையை விருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நீர் மூலங்களை பொது மக்களுக்காக திறந்து, பொழுது போக்கு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தல், பாதசாரிகளுக்கான பாதைகள், கடலோர இயற்கை மற்றும் அழகு, சதுப்பு நிலங்களை அண்டிய ஈர நிலங்கள் போன்றவற்றை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதன் ஊடாக அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் நோக்கினை அடைதலாகும். அதே போன்று காலி வீதியை பிரதானமாகக் கொண்ட வீதிகளை விருத்தி செய்தல், அதாவது நகரை அடைவதற்கான இயலுமையை அதிகரிப்பதற்காக நன்கு பரந்துபட்ட வீதி அமைப்பொன்றை நிர்மாணிப்பதற்கும் இதன் மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ் அனைத்து விடயங்களையும் கவனத்திற் கொண்டு, மொறட்டுவை நகரில் காணப்படும் சுற்றாடல் வளங்களை உச்ச அளவில் பாதுகாத்து, சுற்றுலாத் துறை ஊடாக புத்துருவாக்கத்தை வழங்கி, மொறட்டுவை நகரை அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவுப் பெற்ற நகரமாக்குவதற்குப் பின்வரும் உரு 6.1 மூலம் காட்டப்பட்டுள்ள இக் கருத்துருத் திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

## கருத்துருத் திட்டம்




***உரு 6.1 :*** *கருத்துருத் திட்டம்*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை*

# 6.2 உத்தேச நிலப் பயன்பாட்டுத் திட்டம்

மொறட்டுவை நகரை பொருளாதார ரீதியில் பலம் மிக்க நகர கேந்திரமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் நகரின் இயற்கை நீர் மூலங்களை அபிவிருத்திக் கருவிகளாகப் பயன்படுத்தி, மக்கள் வாழக் கூடியவாறான மிக வசதியான சுற்றுச் சூழலை உருவாக்கல் எனும் நோக்கங்களை முன்னோடியாகக் கொண்டு மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்திற்கு மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 முன்வைக்கப்படுகிறது.

மொறட்டுவை நகரத்தின் பொருளாதார ஒழுங்குமுறைகளை இனங்கண்டு, அவற்றை முறையாகவும் நீடித்த வகையிலும் அபிவிருத்திக்குப் பயன்படுத்தக் கூடியவாறு சந்தி படிநிலைகள் உருவாக்கப்பட்டன. அதற்கமைய மொறட்டுவை நகரின் முதல் நிலை சந்தியாக மொறட்டுவை நகர மத்திய சந்தியைக் குறிப்பிடலாம் என்பதோடு, இரண்டாம் நிலை சந்தியாக பொருப்பன சந்தி, கட்டுபெத்த மற்றும் ராவத்தாவத்தை சந்திகளைக் குறிப்பிடலாம். மூன்றாம் நிலை சந்தியாக மொறட்டுவை புதிய பால சந்தி மற்றும் அங்குலானை சந்தியைக் குறிப்பிடலாம் என்பதோடு, மொறட்டுவை நகரில் பரந்துபட்டுள்ள குடியிருப்பு சந்திகள் சிலவற்றை இனங்காணலாம்.

## உத்தேச நகர மாதிரி


மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்திற்காக வகுக்கப்படும் அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 மூலம் இயற்கை நீர் மூலங்களை அண்டிய நீரை முக்கியமாகக் கொண்ட அபிவிருத்தியுடன் தொடர்புடைய நகர மாதிரி ஒன்றை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்படுகிறது. அதன் போது நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசங்களை அண்டிய பல்வேறு கட்டிட அடர்த்தியைப் பேணுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கு இணையாக நீரை முக்கியமாகக் கொண்ட அனைத்துப் பிரதேசங்களிலும் உயர் பசுமை அடர்த்தி பாதுகாக்கப்படும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படும்.

மொறட்டுவை மேற்கு கடற்கரை எல்லையில் இருந்து கிழக்கு பொல்கொடை ஆற்று எல்லை வரை நீரை முக்கியமாகக் கொண்ட அனைத்துப் பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் உருவாக்கப்பட்ட நகர குறுக்கு வெட்டு உரு 6.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசங்களில் கட்டிட அடர்த்தி மாற்றம் அடையும். அதற்கமைய கடற்கரை நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசமானது மொறட்டுவை நகருக்குள் காற்றலைகள் உள்நுழையும் மேற்கு எல்லையாக இருப்பதால் அப் பிரதேசத்தின் கட்டிட அடர்த்தியை குறைந்த அளவிலும் பசுமை அடர்த்தியை உயர்ந்த அளவிலும் பேணுவதற்கு உத்தேசிக்கப்படுகிறது.


கடற்கரையிலிருந்து கிழக்குப் பக்கமாக இருக்கும் லுனாவை களப்புப் பிரதேசமானது குடியிருப்புப் பாவனைக்கு மிகப் பொருத்தமான இயற்கை அனர்த்தங்கள் அற்ற மற்றும் போதிய உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளதோடு, ரம்மியமான சூழலுடன் கூடிய பிரதேசமாக்கவும் முடியும் என்பதால் உயர் அடர்த்தி கொண்ட குடியிருப்புப் பிரதேசமாக அபிவிருத்தி செய்யப்படும். லுனாவை களப்பு பிரதேசத்தில் இருந்து படிப்படியாக நகரின் மத்தியப் பிரதேசத்தில் காலி வீதியை மையமாகக் கொண்டு வணிக மற்றும் நிதித் துறை அதிக அடர்த்தி கொண்டதாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்படுவதோடு, மொறட்டுவை மாநகரசபை பிரதேசத்தின் போக்குவரத்து வசதிகளுடன் தொடர்புடைய நகர அபிவிருத்தியை ஏற்படுத்தும் பிரதானமான பிரதேசமாகவும் குறிப்பிடலாம். மேலும், கட்டுபெத்த ஈரநிலத்தை அண்டிய பிரதேசத்தை நடுத்தர அடர்த்தியுடனான கலப்பு அபிவிருத்தி பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொல்கொடை ஆற்றுப் பிரதேசமானது தொடர்ச்சியாக இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகும் ஒரு பிரதேசம் என்பதால் கட்டிட அடர்த்தியானது ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அளவில் பேணப்பட்டு வருகிறது. (உரு 6.2)

இருப்பினும் நீரை முக்கியமாகக் கொண்ட அனைத்து பிரதேசங்களிலும் நீரை மிக அண்டிய பிரதேசமானது நிர்ணயிக்கப்பட்ட உயர எல்லைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட தொடர்மனை நிர்மாணிப்பிற்காக மேம்படுத்தப்படுவதுடன், அனைத்து நிர்மாணிப்புக்களும் நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசத்திற்கு முன்பாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசங்களில் சுற்றுலாத்துறை நடவடிக்கைகளின் மேம்பாட்டிற்கு அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக திறந்த பூங்கா, சுற்றுலா விடுதிகள் மற்றும் நீருடன் தொடர்புடைய தொழிற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்.

மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்திற்கு உத்தேச நகர மாதிரியை அடையக் கூடியவாறு மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 ற்கு பயன்படுத்தப்பட்ட 6 வலயங்கள் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டதோடு, அது வரைபட இலக்கம் 6.1 உத்தேச நிலப் பயன்பாட்டுத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ளது.




***உரு 6.2 :*** *உத்தேச நகர மாதிரியின் குறுக்குவெட்டு*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*






***வரைபட இலக்கம் 6.1 :*** *உத்தேச நிலப் பயன்பாட்டுத் திட்டம் – 2030* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

# 6.3. உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் மூலோபாயத் திட்டம்

## 6.3.1. சேவை முகாமைத்துவத் திட்டம்


மொறட்டுவைத் திட்டமிடல் பிரதேசத்தில் தற்போது கணப்படும் சுகாதார, கல்வி மற்றும் ஏனைய பொது வசதிகள் அதாவது, விளையாட்டு மைதானம், வணிகத் தொகுதிகள், பொலிஸ், தபால் நிலையம் மற்றும் வங்கி வசதிகள் குறித்து கவனம் செலுத்தி, குறித்த வசதிகளின் அளவு சார் மதிப்பீடு மூலம் 2030 ஆம் ஆண்டில் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லைக்குக் கணிப்பிடப்பட்ட சனத்தொகைக்குத் தேவையான சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல் சேவை முகாமைத்துவத் திட்டத்தின் நோக்கமாகும். வரைபட இலக்கம் 6.2 மூலம் மொறட்டுவை அதிகார எல்லையின் ஒட்டுமொத்த சேவை முகாமைத்துவம் தொடர்பில் தெளிவாக்கப்படும்.

### 6.3.1.1. சுகாதார வசதிகள்

டீ சொய்சா வைத்தியசாலையானது ஒரு மாவட்ட வைத்தியசாலை என்பதால் அதன் சேவைப் பகுதியானது 5 கிலோ மீற்றர் அளவிலான ஒரு பிரதேசத்தை உள்ளடக்கும் என அனுமானிக்கப்பட்டது. அதற்கமைய மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் தெற்கு எல்லையில் அமைந்துள்ள கட்டுக்குருந்தை தெற்கு, எகொட உயன வடக்கு, எகொட உயன தெற்கு மற்றும் எகொட உயன மத்திய ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைத் தவிர ஏனைய பிரதேசங்கள் டீ சொய்சா மாவட்ட வைத்தியசாலை சேவைப் பகுதி மூலம் உள்ளடக்கப்படுவதோடு, அச் சேவைப் பகுதி ஊடாக உள்ளடக்கப்படாத மேற்குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குத் தேவையான சுகாதார வசதிகளானது அண்மையிலுள்ள பாணந்துறை ஆதார வைத்தியசாலை சேவைப் பகுதியின் மூலம் உள்ளடக்கப்படுகின்றன. (வரைபட இலக்கம் 6.3)

அத்தியாயம் 2.2.2.3. (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு லுனாவை ஆயுர்வேத வைத்தியசாலையானது மேலதிக சேவை வசதிகளைக் கொண்டிருப்பதால் அதன் சேவைப் பகுதியானது 7 கிலோ மீற்றர் என அனுமானிக்கப்பட்டதுடன், அதற்கமைய மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லை உள்ளடங்கும் வகையில் சேவை வழங்கக் கூடிய இயலுமை லுனாவை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு உண்டு.

**டீ சொய்சா மாவட்ட வைத்தியசாலையை விருத்தி செய்தல் :** "பீ" வகுதி மாவட்ட வைத்தியசாலையாக சேவை வழங்கும் டீ சொய்சா வைத்தியசாலையை "ஏ" வகுதி வைத்தியசாலையாக 200 கட்டில்கள் மற்றும் போதியளவு பணிக்குழுவினரைக் கொண்ட நவீன தொழிநுட்ப கருவிகளுடனான வினைத்திறனான சேவையை வழங்கக் கூடிய ஒரு வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது.




சேவை திட்டம் -2030
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்


0 0.25 0.5 1 1.5 2 Kilometers

**நகர அபிவிருத்தி அதிகார சபை**
டிசம்பர் 2018

மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை — மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) — தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 6.2 :*** *உட்கட்டமைப்பு வசதிகளின் பரம்பல் – 2018*

***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*




***வரைபட இலக்கம் 6.3 :*** *உத்தேச வசதிகள் உள்ளடக்கப் பரம்பல் – 2018* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

### 6.3.1.2. கல்வி வசதிகள்

மொறட்டுவை நகரில் அமைந்துள்ள கல்வி நிறுவன வகைப்பாட்டிற்கு அமைய ஆரம்பப் பாடசாலைகள், மத்திய மகா வித்தியாலயங்கள், மகா வித்தியாலயம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் சேவைப் பகுதி முறையே 1, 5, 3 மற்றும் 5 கிலோ மீற்றர் அளவுகளிலான பிரதேசத்தை உள்ளடக்கும் என அனுமானிக்கப்பட்டது. அதற்கமைய மொறட்டுவை மாநகர சபை திட்டமிடல் பிரதேசத்தில அமைந்துள்ள பாடசாலைகள் மற்றம் கல்வி நிறுவனங்கள் மூலம் உள்ளடங்கும் சேவைப் பகுதிகள் வரைபட இலக்கம் 6.4 மூலம் காட்டப்பட்டுள்ளதுடன், குறித்த பகுப்பாய்வின் படி மொறட்டுவை திட்டமிடல் அதிகார எல்லைக்கு 2030 ஆம் ஆண்டில் கணிப்பிடப்பட்ட சனத்தொகைக்கு மொறட்டுவை நகரில் போதிய கல்வி வசதிகளை வழங்கக் கூடிய இயலுமை காணப்படும் எனக் கூறலாம்.

### 6.3.1.3. நகர குடியேற்ற அபிவிருத்தித் திட்டம்

#### *திட்டமிடல் குறிக்கோள்கள்*

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் ஊடாக 2030 ஆம் ஆண்டிற்காக கணிப்பிடப்பட்ட குடியிருப்பு சனத்தொகைக்குப் போதிய உட்கட்மைப்பு வசதிகளைக் கொண்ட மற்றும் வாழ்வதற்கு உகந்த சூழல் மற்றும் திறந்த வெளியுடனான வீட்டு அலகுகளை வழங்குவதை நகர குடியேற்ற அபிவிருத்தித் திட்டத்தின் குறிக்கோளாகக் குறிப்பிடலாம்.

#### *திட்டமிடல் விடயப் பரப்பு*

பயன்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2019 – 2040 வரையான காலப் பகுதி தேவைப்படுகிறது. நகர குடியேற்ற அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக மொறட்டுவை திட்டமிடல் பிரதேசத்தில் வீட்டு அலகு அடர்த்தி ஒழுங்குமுறை திட்டமிடப்படுவதோடு, பிரதேசத்தின் நீரைத் தேக்கி வைக்கும் பிரதேசங்களை அண்டிய கீழ்மட்ட நிலங்கள், சூழல் இசைவாக்கப் பிரதேசங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனங்களை அண்டியும் கட்டிட அடர்த்தி கட்டுப்படுத்தப்படும்.

தொடர்ந்தும் மொறட்டுவை நகர சபை பிரதேசத்தில் இனங் காணப்பட்ட குறைந்த வசதிகளுடனான 2500 வீடுகளுக்குப் போதிய வசதிகள் மற்றும் திறந்த வெளிகளுடனான வீட்டுத் திட்டப் பிரேரணை இங்கு முன்வைக்கப்பட்டது. (ஒட்டுமொத்த நகர குடியேற்ற அபிவிருத்தித் திட்டமானது வரைபட இலக்கம் 6.5 மூலம் காட்டப்பட்டுள்ளது)

(மொறட்டுவை நகர குடியேற்ற அபிவிருத்தித் திட்டக் குறியீடு – SP)

#### *(அ) மொறட்டுவை நகரிற்கு அருகாமையிலுள்ள நகர கேந்திரங்களுக்கி-டையிலான உறவை மேம்படுத்துவதற்கு பிரதேசத்தின் வீதி முறைமை மற்றும் பொது போக்குவரத்து வலையமைப்பை விருத்தி செய்தல்.*

மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்திற்கான உத்தேச வலயமாக்கல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 06 அபிவிருத்தி வலயங்களுள் குடியிருப்புப் பாவனை மேம்பாட்டிற்காக 04 வலயங்கள் இனங் காணப்பட்டுள்ளன. அதன் போது மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் பிரதானமான குடியிருப்பு வலயமாக லுனாவைக் களப்பை அண்டிய பிரதேசதம் இனங் காணப்பட்டதுடன், அப் பிரதேசத்தில் உயர் கட்டிட அடர்த்தியுடன் மற்றும் உயர் பசுமை அடர்த்தியுடன் கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. பொல்கொடை ஆற்றை எல்லையாகக் கொண்ட பிரதேசத்தில் தொடர் குடியிருப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்படுவதுடன், இவ் அபிவிருத்தித் திட்டம் மூலம் பொருப்பன, தெலவல, மாளிகாவை வீதி போன்ற பிரதேசத்தில் அமைந்துள்ள உச்ச மற்றும் நடுத்தர மாசடைவுக் கைத்தொழில்களின் பரம்பல் கட்டுப்படுத்தப்படுவதால் அப் பிரதேசத்தையும் எதிர்காலத்தில் குடியிருப்புப் பாவனைகளுக்காகப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், கொரளவெல்லேயிலிருந்து எகொட உயன வரையான பிரதேசத்தின் குறைந்த அடர்த்தியுடனான குடியிருப்புப் பாவனை ஊக்குவிக்கப்படும்.

காலி வீதியை மையமாகக் கொண்ட மொறட்டுவை நகர மத்திய பிரதேசம் குடியிருப்புப் பாவனைக்காக ஊக்குவிக்கப்படாததோடு, அப் பிரதேசத்தை வணிக வலயமாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், தச்சுத் தொழில் மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் மரத் தூள் காரணமாக ஏற்படும் சுவாசக் கோளாறு மற்றும் இயந்திர உபகரணங்களால் எழுப்பப்படும் அதிக ஒலி, வெப்பம், மற்றும் அதிர்வு காரணமாக அப் பிரதேசம் குடியிருப்புப் பாவனைக்கு உகந்ததல்ல என இனங் காணப்பட்டுள்ளதால் அப் பிரதேசங்களிலும் குடியிருப்புப் பாவனை ஊக்குவிக்கப்பட மாட்டாது.

## *ஆ) வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளைப் பயன்படுத்தல்*

SP01 – தேக்க வத்தை, மோல வத்தை மற்றும் மஹவத்தை வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (வரைபட இலக்கம் 6.5.

பிரதேச செயலாளர் பொறுப்பில் உள்ள தேக்க வத்தை, மோல வத்தை மற்றும் மஹவத்தை எனும் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளை வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காகப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது கடற்கரைப் பகுதியில் வசிக்கும் மக்களை அவ் வீட்டுத் தொகுதியில் குடியேற்றுவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது.


## *இ) குறைந்த வசதிகளுடனான வீடுகளிலுள்ள மக்களின் பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அம் மக்களைக் குடியேற்றல்*

தன்தெனிய வத்தை காணியில் 900 வீட்டு அலகுகளும் மற்றும் பற்றரி வத்தை காணியில் 700 வீட்டு அலகுகளும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நகர மறுமலர்ச்சிக் கருத்திட்டமாக தொடர் மாடி மனைகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்படுவதோடு, குறித்த வீடுகள் அவ் அரசாங்க காணித் துண்டின் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன. மேலும், எஞ்சும் காணித்துண்டை கலப்பு அபிவிருத்திக்காகப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## *ஈ) குறைப் பயன்பாட்டுடனான வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை மறுமலர்ச்சி வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தல் தன்தெனிய வத்*


SP03 – சொய்சாபுர மற்றும் சுனாமி வீட்டுத் தொகுதிக் கருத்திட்டம் (வரைபட இலக்கம் 6.5)

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் குறைந்த வசதிகளுடனான மக்களுக்கு பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலையீட்டில் வீட்டுத் தொகுதிகளில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது அவ் வீட்டுத் தொகுதிகள் குறைப் பயன்பாட்டுடனான வீடுகளாக இனங் காணப்பட்டுள்ளமையால் அக் காணியை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த முடியும். அதற்கமைய அவ்வாறு மீள் அபிவிருத்திக்குப் பொருத்தம் என இனங் காணப்பட்டுள்ள சொய்சாபுர தொடர் மாடி மனைத் தொகுதி மற்றும் சுனாமி வீட்டுத் தொகுதி அமைந்துள்ள காணித் துண்டுகளை மறுமலர்ச்சி வீடமைப்புக் கருத்திட்டத்திற்குப் பயன்படுத்துவதன் மூலம் பல புதிய வீடுகளை நிர்மாணிக்க முடியும்.




**வரைபட இலக்கம் 6.4 :** *கல்வி வசதிகளின் பரம்பல் – 2018*

***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*




***வரைபட இலக்கம் 6.5 :*** *நகர குடியேற்ற அபிவிருத்தித் திட்டம் – 2030* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

### 6.3.1.4. பொது வசதிகள்

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள பொது மற்றும் தனியார் வணிகத் தொகுதிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தபால் நிலையங்கள் போன்றவற்றின் பரம்பல் மற்றும் அவ் வசதிகளின் அளவு என்பவற்றைக் கருத்திற் கொள்வதன் பொருட்டு அவற்றின் சேவைப் பகுதி தொடர்பில் பின்வருமாறு அனுமானிக்கப்பட்டன. அதற்கமைய நிதி நடவடிக்கைகளுக்கு 1.5 கிலோ மீற்றரும், பொது வணிகத் தொகுதிக்கு 3 கிலோ மீற்றரும், தனியார் வணிகத் தொகுதிக்கு 1 கிலோ மீற்றரும், உப பிரதான தபால் நிலையத்திற்கு 5 கிலோ மீற்றரும் மற்றும் உப தபால் நிலையத்திற்கு 1 கிலோ மீற்றரும் காணப்படுகின்றன. பொது வசதிகள் உள்ளடங்கும் சேவைப் பகுதி பின்வரும் வரைபட இலக்கம் 6.6 மூலம் காட்டப்பட்டுள்ளதோடு, அனுமான சேவைகள் அவற்றின் பயன்பாட்டிற்கு அமைய மொறட்டுவை அதிகார எல்லை உள்ளடங்கும் வகையில் தேவையான பொது வசதிகள் போதியளவில் பரம்பலடைந்துள்ளன என்ற முடிவிற்கு வரலாம்.

## 6.3.2. வீதி மற்றும் போக்குவரத்துத் திட்டம்

கடந்த தசாப்த காலப் பகுதியில் மொறட்டுவை நகரம் உட்பட ஏனைய உப – நகர கேந்திரங்களுக்கு சனத்தொகை இடப்பெயர்வு மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வரும் பயணிகள் காரணமாக போக்குவரத்துக்கான கேள்வியில் அதிகரிப்பைக் காட்டுவதோடு, நகரில் சுழற்சியடையும் ஒட்டுமொத்த சனத்தொகையினர் பொது மற்றும் தனியார் ஊடகங்களைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இதன் போது பொதுப் போக்குவரத்து ஊடகங்களை விட தனியார் போக்குவரத்து ஊடகங்களைப் பயன்படுத்த ஆரம்பித்தமையால் நகரில் சுழற்சியடையும் வாகனங்ளின் எண்ணிக்கை உயர்வடைதல் மற்றும் வேலைப் பளுமிக்க வேளைகளில் நகரில் இடம்பெறும் போக்குவரத்து உயர்வடைவதன் காரணமாக காணப்படும் வீதிகளின் சேவை மட்டத்திற்கு அப்பால் வாகன நெருக்கடி நிலைமை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.


### 6.3.2.1. திட்டமிடல் குறிக்கோள்கள்

மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் பொதுப் போக்குவரத்து சேவையை முறைப்படுத்தி, மக்களை அச் சேவை நோக்கி ஈடுபடுத்தல் மூலம் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்தல் மற்றும் நீரை முக்கியமாகக் கொண்ட அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடியவாறு பிரவேச வசதிகளை வழங்கலை இவ் வீதி மற்றும் போக்குவரத்துத் திட்டத்தின் குறிக்கோளாகக் குறிப்பிடலாம்.

### 6.3.2.2. திட்டமிடல் விடயப் பரப்பு

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையின் வீதி மற்றும் போக்குவரத்துத் திட்டத்தை வகுக்கையில் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கணிப்பிடப்பட்ட சனத்தொகைக்கு இணையாக போக்குவரத்து ஓட்டத் தடவைகளின் அடர்த்தியானது போக்குவரத்து நோக்கம் மற்றும் போக்குவரத்து ஊடகங்களுக்கு அமைய மாற்றமடைதல் ஆய்வின் மூலம் 2019 – 2030 திட்டமிடல் காலப் பகுதி வரை பிரதேசத்தின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் திட்டமிடப்பட்டது. அதன் போது பிரதேசத்தின் போக்குவரத்து முறைமையின் அமைப்பிற்கு அமைய அதாவது, மாகாணத் தொடர்புகளுக்குத் துணையாகும் வீதிகள், உள்ளகப் போக்குவரத்துக்குத் துணையாகும் வீதிகள் மற்றும் வீதியின் தற்போதைய பௌதீக அகலம் போன்ற காரணிகளின் அடிப்படையில் வீதிகளின் முன்னுரிமைத் தொகுதி பிறிதாக இனங் காணப்பட்டது.

நகரங்களுக்கிடையிலான போக்குவரத்துக்கு போக்குவரத்து ஊடகங்களின் பாவனையைப் போன்றே மாற்று போக்குவரத்து ஊடக மேம்பாட்டிற்கு சாத்தியக்கூற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், திட்டமிடல் பிரதேசத்தில் குறுந்தூர போக்குவரத்திற்கு கால்-நடையாக செல்லல் மற்றும் சைக்கிள் பாவனைக்குத் தேவையான வசதிகளை வழங்கல் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது. மேலும் வீதி மற்றும் போக்குவரத்துத் திட்டத்தின் மூலம் அபிவிருத்தி சாத்தியம் நிலவும் நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசங்களுக்கு பிரவேசிக்கும் அளவை உயர்த்துவதற்குரிய மூலோபாயங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.




பொது வசதிகளின் பரம்பல் மற்றும் உள்ளடங்கும் பிரதேசங்கள்-2030
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்

0 0.25 0.5 1 1.5 2 Kilometers

**நகர அபிவிருத்தி அதிகார சபை**
டிசம்பர் 2018

மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை | மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) | தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 6.6 :*** *பொதுத் தேவைகளின் பரம்பல் – 2018* ***மூலம்*** *: நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

### 6.3.2.3. போக்குவரத்துப் பின்புல ஆய்வு

மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரத வீதி வலையமைப்பு குறித்து அத்தியாயம் 2.2.2.1. (இ) இல் விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 இன் நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்துத் திட்டத்தை வகுப்பதற்கு 2030 ஆம் ஆண்டில் சனத்தொகை கணிப்பிடப்பட்டதோடு, உத்தேச சனத்தொகைக்கு இணையாக போக்குவரத்து ஓட்டத் தடவைகளின் அடர்த்தி கணக்கிடப்பட்டது.

**சனத்தொகைக் கணிப்பீடு** – 2001 மற்றும் 2002 சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கை படி 2030 ஆம் ஆண்டளவில் மொறட்டுவை மாநகர சபை திட்டமிடல் பிரதேசத்திற்குக் கணிப்பிடப்பட்ட 150000 குடியேற்ற சனத்தொகை மற்றும் 87000 பயணிகளுக்கு அமைய மொறட்டுவை மாநகர சபை திட்டமிடல் பிரதேசத்தில் குடியேற்ற சனத்தொகை மற்றும் வெளியிலிருந்து வருகை தரும் சனத்தொகைக்கு இடையே 2 : 1 எனும் விகிதாசாரம் காணப்பட்டது. மேலும் -0.49% வருடாந்த இயற்கை சனத்தொகை வளர்ச்சி வேகத்தை 1% ஆல் உயர்த்துவதற்கு உத்தேசிக்கப்படுவதோடு, அதற்கமைய சனத்தொகை வளர்ச்சி வேகம் 0.5% எனும் பெறுமதியைப் பெறுகிறது.

**போக்குவரத்துத் தடவைகளின் அடர்த்தி கணிப்பீடு** – எவரேனும் ஒரு நபர் ஏதேனும் ஒரு உறுதியான பணியை நோக்கமாகக் கொண்டு பயண ஆரம்ப இடத்திலிருந்து பயண முடிவிடம் வரை மேற்கொள்ளும் பெயர்வானது ஒரு பயணத் தடவையாகக் கருதப்படுவதோடு, ஒட்டுமொத்த பயணத்தடவைகளின் கூட்டுத்தொகை மற்றும் குறித்த பிரதேசத்தின் அளவிற்கு இடையிலான விகிதாசாரம் பயணத் தடவைகளின் அடர்த்தியாகக் கொள்ளப்படும். கொம்டிரான்ஸ் ஆய்வுக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட Urban Transport Systems Development Project for Colombo Metropolitan Region and Suburbs அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தரவுகள் மற்றும் முடிவுகள் படி மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் போக்குவரத்து நோக்கம் மற்றும் போக்குவரத்து ஊடகத்திற்கு அமைய பயணத் தடவைகளின் அடர்த்தி மற்றும் அதன் பரம்பல் ஆய்வு செய்யப்பட்டது.


போக்குவரத்து நோக்கத்திற்கு அமைய பயணத் தடவைகளின் கூட்டமைவை பின்வரும் உரு 6.3 படி வகைப்படுத்த முடியும் என்பதோடு, பயணத் தடவைகளின் முன்னுரிமை ஒழுங்கில் வீட்டை நோக்கி, தொழில், தனிப்பட் காரணங்கள் மற்றும் கல்வி என்றவாறு அமையும்.

2030 ஆம் ஆண்டளவில் கணிப்பிடப்பட்ட சனத்தொகை படி புகையிரதம், பேருந்து மற்றும் தனியார் போக்குவரத்து ஊடகம் மூலம் உருவாகும் பயணத் தடவைகளின் அடர்த்தி குறித்து ஆய்வு செய்யப்பட்டதுடன், ஒட்டுமொத்த பயணத் தடவைகளின் அடர்த்தியானது பின்வரும் வரைபட இலக்கம் 6.7 மூலம் விளக்கப்படுகிறது.

புகையிரத பயணத் தடவைகளின் அடர்த்தி குறித்து அவதானம் செலுத்துகையில், மொறட்டுவை, அங்குலானை, லுனாவை புகையிரத தரிப்பிடங்களை அண்டி மிகப் பரந்த பயண அடர்த்தியை இனங் காண முடியும் எனினும் கொரலவெல்லேயிலிருந்து எகொட வரையான குறுந்தூர பயணத்திற்கு புகையிரதப் பாவனை அதிகமாக உள்ளமையை இனங் காணலாம். (இணைப்பு இலக்கம் 8) பேருந்து மூலம் உருவாகும் பயணத் தடவைகளின் அடர்த்தி ஆய்வின் போது ஒரு ஹெக்டயருக்கு குறைந்த பட்சம் 20 பயணத் தடவைகளுக்கும் அதிகமான பெறுமதி காணப்படுகின்றமை தெளிவாகிறது.

தனியார் மோட்டார் வாகனங்களை அதிகம் விரும்பும் பிரதேசங்களாக அங்குலானை வடக்கு, பொருப்பன, மொறட்டுவை நகர மத்திய மற்றும் எகொட உயன போன்ற பிரதேசங்களைக் குறிப்பிட முடியும் என்பதோடு, அப் பிரதேசங்களில் உயர் பயண அடர்த்தியையும் காண முடியும். (இணைப்பு 9)

போக்குவரத்து நோக்கங்களுக்கு அமைய கட்டமைவு




***உரு 6.3 :*** *போக்குவரத்து நோக்கங்களுக்கு அமைய கட்டமைவு*
***மூலம் :*** *Urban Transport Systems Development Project for Colombo Metropolitan Region and Suburbs அறிக்கை, 2017*


## 6.3.2.4. வீதி மற்றும் போக்குவரத்துத் திட்டத்திற்கான மூலோபாயங்கள்

மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லைக்கான வீதி மற்றும் போக்குவரத்துத் திட்டத்திற்கான 3 மூலோபாயங்கள் பின்வருமாறு இனங் காணப்பட்டுள்ளதுடன், அதன் பொருட்டு வகுக்கப்பட்ட ஒட்டுமொத்த வீதி அபிவிருத்தித் திட்டமானது வரைபட இலக்கம் 6.8 மூலம் காட்டப்பட்டுள்ளது.

*அ) மொறட்டுவை நகரிற்கு அருகாமையிலுள்ள நகர கேந்திரங்களுக்கிடையிலான உறவை மேம்படுத்துவதற்கு பிரதேசத்தின் வீதி முறைமை மற்றும் பொது போக்குவரத்து வலையமைப்பை விருத்தி செய்தல்.*

*ஆ) கூட்டு போக்குவரத்து முறைமை ஒன்றை உருவாக்குவதன் மூலம் ஒன்றிணைந்த நகர மாதிரி ஒன்றை உருவாக்கல்.*

*இ) நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசங்களை மக்களுக்காகத் திறந்து, அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.*




உருவாகும் மொத்த ஓட்ட தடவைகளின் அடர்த்தி -2013
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்


0 0.25 0.5 1 1.5 2 Kilometers

நகர அபிவிருத்தி அதிகார சபை
டிசம்பர் 2018

மூலம்: கொம் டிரான்ஸ் ஆய்வு | மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) | தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 6.7 :*** *மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் உருவாகும் ஒட்டுமொத்த பயணத் தடவைகளின் அடர்த்தி*

***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*




போக்குவரத்துத் திட்டம் -2030
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்

0 0.25 0.5 1 1.5 2 Kilometers

**நகர அபிவிருத்தி அதிகார சபை**
டிசம்பர் 2018

மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை | மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) | தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 6.8 :*** *மொறட்டுவை போக்குவரத்துத் திட்டம் – 2030* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

### *அ) மொறட்டுவை நகரிற்கு அருகாமையிலுள்ள நகர கேந்திரங்களுக்கிடையிலான உறவை மேம்படுத்துவதற்கு பிரதேசத்தின் வீதி முறைமை மற்றும் பொது போக்குவரத்து வலையமைப்பை விருத்தி செய்தல்.*

கொழும்பு மையப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் துரித நகரமயமாக்கலுடன் இணைந்து, கொழும்பை அண்மித்த நகர கேந்திரங்களை நோக்கி பிரதான வீதிகளின் ஊடாக நகரமயமாக்கல் பரம்பலடைந்தமையால் அதற்கு அருகாமையில் உப நகர தரமொன்று உருவாகியுள்ளதோடு, கொழும்பு மையப் பிரதேசத்துடன் தொடர்புடைய காலி கொரிடோவை பிரதானமாகக் கொண்டு, கொள்ளுப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை, இரத்மலானை மற்றும் மொறட்டுவை ஆகிய உப நகர கேந்திரத் தரமொன்று உருவாகியுள்ளது.

மொறட்டுவைக்கு அருகாமையில் அமைந்துள்ள சுயாதீன நகர கேந்திரங்களாக வடக்கே தெஹிவளை, கிழக்கே பிலியந்தலை மற்றும் மகரகம, தெற்கே பாணந்துறை என்பவற்றைக் குறிப்பிடலாம். பொரலஸ்கமுவை, இரத்மலானை, கெஸ்பேவை மற்றும் கஹத்துடுவை போன்ற பிரதேசங்கள் எதிர்காலத்தில் நகர மத்திய நிலையங்களாக அபிவிருத்தி அடைவதன் மூலம் மொறட்டுவை நகரத்துடனான தொடர்புகள் விருத்தி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உரு 6.4)




***உரு 6.4 :** மொறட்டுவை மற்றும் நகர கேந்திரங்களுக்கு இடையிலான வலய ரீதியிலான தொடர்புகள் |*
***மூலம் :** நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள மாற்று பொது போக்குவரத்து ஊடகங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் வீதி அபிவிருத்தி ஊடாக மேற்குறித்த நகர கேந்திரங்கள் மற்றும் மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்திற்கு இடையிலான வலய ரீதியிலான தொடர்பை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

(மொறட்டுவை போக்குவரத்துத் திட்டக் குறியீடு – TP)

## i. இலகு புகையிரத சேவை (LRT)

மேற்கு வலய பெருநகர போக்குவரத்துத் திட்டம் மூலம் உத்தேச இலகு புகையிரத வீதி களனியில் ஆரம்பமாகி, தெமட்டகொடை, பொரளை, நாராஹேன்பிட்டி, நுகேகொடை ஊடாக மொறட்டுவை பன்முக போக்குவரத்து நிலையம் பயண முடிவிடமாக அமையும்.

தற்போதுள்ள நெடுஞ்சாலைக்கு மேலாக நிர்மாணிக்கப்படும் புகையிரத வீதியின் ஊடாக போக்குவரத்திற்காக அறிமுகப்படுத்தப்படும் இலகு புகையிரத சேவையானது, மட்டுப்படுத்தப்பட்ட தரிப்பிடங்களைக் கொண்டிருப்பதோடு, பொதுமக்களுக்கு அதிக வினைத்திறனான மற்றும் வசதியான பொது போக்குவரத்து சேவையை வழங்கக் கூடியதாகவும் இருக்கும்.

**TP01 – பிலியந்தளை, கட்டுபெத்த ஊடாக மொறட்டுவை நகர மையம் வரையான இலகு புகையிரத சேவை**

உரு 6.5 இல் காட்டப்பட்டுள்ளவாறு நிர்மாணிக்கப்படவுள்ள இலகு சேவையானது 5 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்டிருப்பதோடு, மொறட்டுவை பிரதேசத்திற்குச் சொந்தமான தரிப்பிடங்களாக மொறட்டுவை பல்கலைக்கழகம், கட்டுபெத்த, ராவத்தாவத்தை மற்றும் மொறட்டுவை பன்முக போக்கவரத்து நிலையம் என்பன இனங் காணப்பட்டன.

## ii. புகையிரத வீதி அபிவிருத்தி


**TP02 – கரையோர புகையிரத வீதி நவீனமயமாக்கல்**

புகையிரத சேவையை அதிக வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு புதிய சமிக்ஞை முறைமையுடன் கூடிய புகையிரத முறைமையை இலத்திரனியல் மயமாக்கி, கரையோர புகையிரத வீதியை நவீனமயமாக்கல் மற்றும் அங்குலானை, லுனாவை, கொரளவெல்ல மற்றும் எகொட உயன புகையிரத நிலையங்களை நவீனமயமாக்கல்.

## iii. நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி

**TP03 – காலி வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்**


மொறட்டுவை புதிய காலி வீதி மற்றும் பழைய காலி வீதி இணையும் இடத்திலிருந்து மொறட்டுவை உத்தேச பன்முக போக்குவரத்து நிலையம் வரை 1 கி.மீ. நீளத்துடனான வீதியை 6 ஒழுங்கைகளுடன் அபிவிருத்தி செய்தல் (குறுக்குவெட்டு உரு 6.5 மூலம் காட்டப்பட்டுள்ளது)




***உரு 6.5 :** P1 – காலி வீதி குறுக்குவெட்டு*
***மூலம் :** நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

**TP04 – பொருப்பன வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்**


கொம்டிரான்ஸ் அறிக்கைக்கு அமைய 6 ஒழுங்குகைகளுடன் கூடியதாக அபிவிருத்தி செய்வதற்காக இனங் காணப்பட்டுள்ள மத்திய சுற்று வட்ட வீதி, மகரகம, பத்தரமுல்லை, களனி, வத்தளை மற்றும் மொறட்டுவை போன்ற நகர கேந்திரங்களை ஒன்றுக்கொன்று இணைக்கும் வீதியை அபிவிருத்தி செய்யக் கூடியவாறு பொருப்பன சந்தியில் இருந்து கங்காராம வீதி வரை 200 மீற்றர் நீளத்துடனான பொருப்பன வீதியை 6 ஒழுங்கைகளுடன் அபிலிருத்தி செய்தல். (குறுக்குவெட்டு உரு 6.6 மூலம் காட்டப்பட்டுள்ளது)




***உரு 6.6 :** P1 – பொருப்பன வீதி குறுக்குவெட்டு*
***மூலம் :** நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

**TP05 – கொழும்பு முறை வீதி எனப்படும் கடலோர வீதியை நீடித்தல்**


மேல் மாகாண பெருந்தெருத் திட்டம் மூலம் உத்தேச கொழும்பு முறை வீதியை தெஹிவளையில் இருந்து வீரப்புரன் அப்பு வீதி ஊடா உத்தேச மொறட்டுவை பன்முக போக்குவரத்து நிலையம் வரை நீடித்தல். (குறுக்கு வெட்டு உரு 6.7 மூலம் காட்டப்பட்டுள்ளது).




***உரு 6.7 :** P2 – உத்தேச கடலோர வீதி குறுக்குவெட்டு*
***மூலம் :** நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

**TP06 – பண்டாரநாயக்க மாவத்தை அபிவிருத்திக் கருத்திட்டம்**


கொம்டிரான்ஸ் அறிக்கைக்கு அமைய மொறட்டுவை நகரம் பண்டாரநாயக்க மாவத்தை ஊடாக பிலியந்தலை, பன்னிப்பிட்டிய, மாலம்பே, பொல்லெகெல, சப்புகஸ்கந்தை, ஹுணுப்பிட்டிய மற்றும் ஹெந்தலையுடன் தொடர்புபடும் வகையில் கிழக்கு சுற்று வட்ட வீதி அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய கட்டுபெத்த சந்தியில் இருந்து கொஸ்பலான பாலம் வரை 2 கி.மீ. நீளத்துடனான பண்டாரநாயக்க மாவத்தையை 4 ஒழுங்குகைகளுடன் அபிவிருத்தி செய்தல். (குறுக்கு வெட்டு உரு 6.8 மூலம் காட்டப்பட்டுள்ளது)




***உரு 6.8 :** P2 – பண்டாரநாயக்க மாவத்தை குறுக்குவெட்டு*
***மூலம் :** நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

**TP07 – டீ சொய்சா வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்**

கொம்டிரான்ஸ் அறிக்கைக்கு அமைய இனங் காணப்பட்டுள்ள கிழக்கு சுற்று வட்ட வீதியுடன் ராவத்தாவத்தை சந்தி தொடர்புபடும் வகையில் ராவத்தாவத்தை சந்தியில் இருந்து கட்டுபெத்த கொஸ்பலான பாலம் வரை 3 கி.மீ. நீளத்துடனான டீ சொய்சா வீதியை 4 ஒழுங்குகைகளுடன் அபிவிருத்தி செய்தல். (குறுக்கு வெட்டு உரு 6.9 மூலம் காட்டப்பட்டுள்ளது




***உரு 6.9 :** P2 – டீ சொய்சா வீதி குறுக்கு வெட்டு*
***மூலம் :** நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## *ஆ) கூட்டு போக்குவரத்து முறைமை ஒன்றை உருவாக்குவதன் மூலம் ஒன்றிணைந்த நகர மாதிரி ஒன்றை உருவாக்கல்.*


நகர வடிவமைப்பின் எண்ணக்கருவான ஒருங்கிணைந்த நகரம் அல்லது குறுந்தூர நகரமானது, வினைத்திறனான மற்றும் கூட்டு போக்குவரத்து சேவையுடன் கூடிய நகர மாதிரியுடனான நகரமாகக் கருதப்படுகிறது. இதற்கமைய மொறட்டுவை நகரிலும் இத்தகைய ஒருங்கிணைந்த நகர மாதிரி ஒன்றை உருவாக்குவதற்கு பின்வரும் பிரேரணைகள் முன்வைக்கப்படுகின்றன.

**TP08 – உத்தேச பன்முக போக்குவரத்து நிலையம்**

தற்போது மொறட்டுவை புகையிரத நிலையம் மற்றும் பேருந்து தரிப்பிடம் அமைந்துள்ள புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான 10 ஏக்கர் அளவிலான காணியில் புகையிரத, இலகு புகையிரத மற்றும் பேருந்து போக்குவரத்து ஊடகங்களினால் ஒன்றிணைந்த பன்முக போக்குவரத்து நிலையத்தை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, அதனை பேருந்து மற்றும் புகையிரத முனையம், இலகு புகையிரத தரிப்பிடம் மற்றும் வோகனத் தரிப்பிட நிலையம் போன்ற வசதிகளுடன் கூடிய கலப்பு அபிவிருத்திப் பணிக்காகப் பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**TP09 – நடைபாதை மற்றும் சைக்கிள் வீதி வலையமைப்பு**

ஒருங்கிணைந்த நகர மாதிரியுடனான நகரங்களில் தனியார் மோட்டார் வாகனப் பாவனைக்கு ஒப்பீட்டளவில் கால்நடையாக செல்லல் மற்றும் சைக்கிள் பாவனை மேம்படுத்தப்படுவதுடன், அதன் ஊடாக நகரின் ஒட்டுமொத்த எரிசக்தி நுகர்வு மற்றும் சூழல் மாசடைவைக் குறைப்பது நோக்கமாகக் கொள்ளப்படும். அதற்கமைய மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தை உள்ளடக்கும் வகையில் வீதியின் இரு மருங்கிலும் செல்லும் சைக்கிள் மற்றும் நடைபாதை வலையமைப்பு ஒன்று அறிமுகப்படுத்தப்படுவதுடன், அது வரைபட இலக்கம் 6.10 மூலம் காட்டப்பட்டுள்ளது.




நடைபாதை மற்றும் சைக்கிள் வீதி முறைமை -2030
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்


0 0.25 0.5 1 1.5 2 Kilometers

**நகர அபிவிருத்தி அதிகார சபை**
டிசம்பர் 2018

மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை — மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) — தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 6.9 :*** *மொறட்டுவை நகரிற்கு நடைபாதை மற்றும் சைக்கிள் வீதி வலையமைப்பு*

***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*





**உரு 6.10 :** *P2 – வீதி குறுக்கு வெட்டு*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

**TP10 – புகையிரத உட்பிரவேச வீதி அபிவிருத்தி**

மொறட்டுவை புகையிரத நிலையம் உட்பட உள்ளகப் புகையிரத நிலையங்கள் காலி வீதியுடன் தொடர்புபடும் வரைபட இலக்கம் 6.6 இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் பிரதான உட்பிரவேச வீதிகள் நடைபாதை மற்றும் சைக்கிள் வீதிகளுடன் கூடிய 2 ஒழுங்குகைகளுடனானதாக அபிவிருத்தி செய்தல். அவ் வீதிகளின் குறுக்குவெட்டு உரு 6.11 மூலம் காட்டப்பட்டுள்ளது.

- கொரலவெல்ல புகையிரத உட்பிரவேச வீதி – 400 மீற்றர்
- எகொட உயன புகையிரத உட்பிரவேச வீதி – 400 மீற்றர்
- அங்குலானை புகையிரத உட்பிரவேச வீதி – 2 கிலோ மீற்றர்
- லுனாவை புகையிரத உட்பிரவேச வீதி – 2 கிலோ மீற்றர்
- மொறட்டுவை புகையிரத உட்பிரவேச வீதி – 200 மீற்றர்



**உரு 6.11** : *P3 – வீதி குறுக்கு வெட்டு*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## இ) நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசங்களை மக்களுக்காகத் திறந்து, அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

பொல்கொடை ஆற்றை அண்டிய பிரதேசங்களில் இடம்பெறும் அனுமதியற்ற காணி மீட்பு-க்களைத் தடுத்து, நீர் வளத்தைக் காப்பதற்கான ஒரு மூலோபாயமாக நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசங்களை பொது மக்களுக்காகத் திறந்து, நீரை முக்கியமாகக் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தலே இங்கு கருதப்படுகிறது.

**TP11 – உத்தேச பொல்கொட சிறி வீதி**

திகொரெல்ல புதிய பாலத்திலிருந்து பொல்கொடை ஆற்று எல்லை ஊடாக பொருப்பன வீதி வரை 20 அடி அகலமுடைய புதிய வீதியொன்றை நிர்மாணித்தல். (வரைபட இலக்கம் 6.8)

**TP12 – கட்புல பிரவேச கொரிடோ**

பொல்கொடை ஆறு மற்றும் மொறட்டுவை கடற்கரையை ஒரே தடவையில் காணக்கூடியவாறு கொரலவெல்லேயிலிருந்து எகொட உயனவுக்கு இடையே அமைந்துள்ள குணவர்தனாராம வீதி, சமாஜவாதீ நிவஹன் பிரதேசம், ரீ.எல்.சீ. பீரிஸ் மாவத்தை மற்றும் மகவத்தை மாவத்தையை 2 ஒழுங்கைகளுடன் அகலமாக்கல். (வரைபட இலக்கம் 6.8) குறுக்குவெட்டு உரு 6.12 மூலம் காட்டப்பட்டுள்ளது.)




***உரு 6.12 :*** *கட்புல பிரவேச கொரிடோ குறுக்குவெட்டு*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

**அத்தியாயம் 06**
அபிவிருத்தித் திட்டம்

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் மூலோபாயத் திட்டம்

வீதி மற்றும் போக்குவரத்துத் திட்டம்

## 6.3.2.3. வீதிகளை வகைப்படுத்தல்

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 மூலம் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டதுடன், முதலாவது முன்னுரிமை வீதிகள் P1 எனவும், இரண்டாவது முன்னுரிமை வீதிகள் P2 எனவும், மூன்றாவது முன்னுரிமை வீதிகள் P3 எனவும், நான்காவது முன்னுரிமை வீதிகள் P4 எனவும் காட்டப்பட்டுள்ளன.

**i. திட்டமிடல் காலப்பகுதியினுள் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டள்ள வீதிகள்**

P1, P2 மற்றும் P3 என அபிவிருத்திக்காக இனங் காணப்பட்டுள்ள வீதிகள் மற்றும் அவற்றின் உத்தேச வீதி அகலம்

| எதிர்பார்க்கப்படும் கழிவு நீர் உற்பத்தி – 2030 | | | | | |
|---|---|---|---|---|---|
| வீதி முன்னுரிமை | வீதி அறிகுறிகள் | இனங் காணப்பட்ட வீதிகள் | ஒழுங்கைகளின் எண்ணிக்கை | சேவை ஒழுங்கை | உத்தேச வீதிகளின் அகலம் - மீற்றர் |
| முதலாவது முன்னுரிமை வீதிகள் P1 வீதிகள் | நகரிற்கு வெளியே வேறு பிரதான நகர கேந்திரங்கள் சிலவற்றுடன் தொடர்புடைய, பௌதீக அகலம் 20 அடி அல்லது அதற்கு மேற்பட்ட வீதிகள் | TP3 காலி வீதி – மொறட்டுவை புதிய காலி வீதி மற்றும் பழைய காலி வீதியுடன் தொடர்புடைய இடத்திலிருந்து மொறட்டுவை பன்முக போக்குவரத்து நிலையம் | 6 | ஏற்புடையதாகும் | 36.6 |
| | | TP4 பொருப்பன வீதி – பொருப்பன சந்தியிலிருந்து கங்காராம வீதி வரை | 6 | ஏற்புடையதாகும் | 31.7 |
| இரண்டாவது முன்னுரிமை வீதிகள் P2 வீதிகள் | நகரிற்கு வெளியே வேறு பிரதான நகர கேந்திரங்களுடன் தொடர்புடைய, வீதியின் பௌதீக அகலம் 20 அடி அல்லது அதற்கு மேற்பட்ட வீதிகள் | TP6 பண்டாரநாயக்க மாவத்தை – கட்டுபெத்த சந்தியிலிருந்து கொஸ்பலான பாலம் வரை | 4 | ஏற்புடையதாகும் | 27.2 |
| | | TP5 உத்தேச கடலோர வீதி – தெஹிவளையிலிருந்து வீரப்புரன் அப்பு வீதி ஊடாக உத்தேச மொறட்டுவை பன்முக போக்குவரத்து நிலையம் வரை | 4 | ஏற்புடையதாகும் | 24.7 |
| | | TP7 டீ சொய்சா வீதி - ராவத்தாவத்தை சந்தியிலிருந்து கட்டுபெத்த கொஸ்பலான பாலம் வரை | 4 | ஏற்புடையதாகும் | 24.7 |
| மூன்றாவது முன்னுரிமை வீதிகள் P3 வீதிகள் | வீதியின் பௌதீக அகலம் 20 அடி அல்லது அதற்கு மேற்பட்ட வீதிகள் | TP11 உத்தேச பொல்கொடை சிறி வீதி திகொரெல்ல புதிய பாலத்திலிருந்து பொல்கொடை ஆற்று எல்லை ஊடாக பொருப்பன வீதி வரை | 2 | ஏற்புடையதாகும் | 17.1 |
| | வீதியின் பௌதீக அகலம் 20 அடியை விடக் குறைந்த வீதிகள் | TP10 மொறட்டுவை புகையிரத நிலைய உட்பிரவேச வீதி காலி வீதியிலிருந்து மொறட்டுவை புகையிரத நிலையம் வரை | 2 | ஏற்புடையதாகும் | 17.1 |
| | | TP10 கொரலவெல்ல புகையிரத நிலைய உட்பிரவேச வீதி காலி வீதியிலிருந்து கொரலவெல்ல புகையிரத நிலையம் வரை | 2 | ஏற்புடையதாகும் | 17.1 |

| எதிர்பார்க்கப்படும் கழிவு நீர் உற்பத்தி – 2030 | | | | | |
|---|---|---|---|---|---|
| வீதி முன்னுரிமை | வீதி அறிகுறிகள் | இனங் காணப்பட்ட வீதிகள் | ஒழுங்கை-களின் எண்ணி-க்கை | சேவை ஒழுங்கை | உத்தேச வீதிகளின் அகலம் - மீற்றர் |
| | | TP10 எகொட உயன புகையிரத நிலைய உட்பிரவேச வீதி காலி வீதியிலிருந்து எகொட உயன புகையிரத நிலைய வீதி வரை | 2 | ஏற்புடையதாகும் | 17.1 |
| | | TP10 அங்குலானை புகையிரத நிலைய உட்பிரவேச வீதி காலி வீதியிலிருந்து லுனாவை புகையிரத நிலையம் வரை | 2 | ஏற்புடையதாகும் | 17.1 |
| | | TP10 லுனாவை புகையிரத நிலைய உட்பிரவேச வீதி காலி வீதியிலிருந்து லுனாவை புகையிரத நிலைய உட்பிரவேச வீதி வரை | 2 | ஏற்புடையதாகும் | 17.1 |
| | | TP12 குணவர்தனாராம வீதி புதிய காலி வீதியிலிருந்து பொல்கொடை உத்தேச சைக்கிள் மற்றும் நடைபாதை வரை | 2 | ஏற்புடையதாகும் | 12.2 |
| | | TP12 சமாஜவாதீ நிவஹன் பிரதேசம் புதிய காலி வீதியிலிருந்து பொல்கொடை உத்தேச சைக்கிள் மற்றும் நடைபாதை வரை | 2 | ற்புடையதாகும் | 12.2 |
| | | TP12 றீ.எல்.சீ. பீரிஸ் மாவத்தை புதிய காலி வீதியிலிருந்து பொல்கொடை உத்தேச சைக்கிள் மற்றும் நடைபாதை வரை | 2 | ஏற்புடையதாகும் | 12.2 |
| | | TP12 மஹவத்தை மாவத்தை புதிய காலி வீதியிலிருந்து பொல்கொடை உத்தேச சைக்கிள் மற்றும் நடைபாதை வரை | 2 | Relevant | 12.2 |

**அட்டவணை இலக்கம் 6.1 :** மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 ஊடாக செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வீதிகளின் முன்னுரிமை
**மூலம் :** நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 மூலம் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் மேற்குறித்த வீதிகளுக்கு செல்லுபடியாகும் ஒழுங்குவிதிகள் தொகுதி II அத்தியாயம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**ii. திட்டமிடல் காலப்பகுதியினுள் அபிவிருத்திக்காக இனங் காணப்படாத வீதிகள்**

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் மூலம் எதிர்வரும் 12 வருட காலப்பகுதியினுள் அபிவிருத்திக்காக இனங் காணப்படாத வீதிகள் நான்காவது முன்னுரிமை வீதிகள் P4 வீதிகள் பட்டியல் தொகுதி II அத்தியாயம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 6.3.3. நீர் விநியோகத் திட்டம்

2019 – 2030 காலப்பகுதிக்கு வகுக்கப்பட்ட மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கத்தை அடைகையில், பொது மக்களுக்கு போதிய மற்றும் தொடர்ச்சியான நீர் விநியோகத்தை நாளாந்தம் மேற்கொள்வது அத்தியாவசியமாவதோடு, 2030 ஆண்டிற்காக கணிப்பிடப்பட்ட நீருக்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு தற்போது காணப்படும் செயன்முறைகள் மற்றும் உத்தேச கருத்திட்டங்களை இனங் காண்பது இந் நீர் விநியோகத் திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.


### *அ) 2030 ஆம் ஆண்டாகையில் எதிர்பார்க்கப்படும் நீருக்கான கேள்வி*

மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்துக்கு 151,000 குடியிருப்பு சனத்தொகையும், 87,000 பயணிகள் தொகையினரும் கணிப்பிடப்பட்டதோடு, வரைபட இலக்கம் 6.10 இல் காட்டப்பட்டுள்ளவாறு அபிவிருத்தி வலயத்திற்கு அமைவாக நீருக்கான கேள்வி கணக்கிடப்பட்டது. அதன் போது குடியிருப்பு தனிநபர் நாளாந்த நீர் தேவை 130 லீற்றராகவும், கருத்திற் கொள்ளப்பட்டதோடு, நகரிற்கு வெளியிலிருந்து வருகை தரும் நபர்களின் நாளாந்த நீர் தேவை 50 லீற்றராகவும் கருத்திற் கொள்ளப்பட்டது.

அதற்கமைய 2030 ஆம் ஆண்டாகையில் மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் நாளாந்த நீருக்கான கேள்வி 25,500 கன மீற்றராக இருப்பதோடு, வீட்டுக்கான நீர் கேள்வி 19,600 கன மீற்றரும், வீடு அல்லாத நடவடிக்கைகளுக்கான நீர் கேள்வி நாளாந்தம் 5,900 ன மீற்றரும் ஆகும். ஒவ்வொரு அபிவிருத்தி வலயத்திற்கும் உரிய நீர் கேள்வி மற்றும் ஒட்டுமொத்த நீர் கேள்வி பின்வரும் அட்டவணை இலக்கம் 6.2 இல் காட்டப்பட்டுள்ளது.

| அபிவிருத்தி வலயம் | வீட்டு நீர் கேள்வி (நாளொன்றிற்கு கன மீற்றர்) | வீடு அல்லாத நீர் கேள்வி (நாளொன்றிற்கு கன மீற்றர்) | ஒட்டுமொத்த நீர் கேள்வி (நாளொன்றிற்கு கன மீற்றர்) |
|---|---|---|---|
| அதிக அடர்த்தியுடைய கலப்பு அபிவிருத்தி வலயம் | 2833 | 1695 | 4528 |
| அதிக அடர்த்தியுடைய பசுமை குடியிருப்பு வலயம் | 5296 | 1017 | 6313 |
| குறைந்த அடர்த்தியுடைய கலப்பு அபிவிருத்தி வலயம் | 1089 | 396 | 1485 |
| குறைந்த அடர்த்தியுடைய குடியிருப்பு வலயம் | 4749 | 283 | 5031 |
| தச்சுத் தொழிலுடன் தொடர்புடைய உற்பத்தி மேம்பாட்டு வலயம். | 2535 | 1130 | 3665 |
| நீரை முக்கியமாகக் கொண்ட பொல்கொடை அபிவிருத்தி வலயம் | 3071 | 1130 | 4201 |
| ஒட்டுமொத்த நீர் கேள்வி (நாளொன்றிற்கு கன மீற்றர்) | 19573 | 5650 | 25223 |

**அட்டவணை இலக்கம் 6.2 :** *கணிப்பிடப்பட்ட நீர் கேள்வி – 2030*
**மூலம் :** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*




***வரைபட இலக்கம் 6.10 :*** *மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தின் ஒட்டுமொத்த நீர் கேள்வி – 2030*

***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

**அத்தியாயம் 06**
அபிவிருத்தித் திட்டம்

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் மூலோபாயத் திட்டம்

நீர் விநியோகத் திட்டம்

மின் விநியோகத் திட்டம்

500,000 மற்றும் 60,000 கொள்திறன் உடைய அம்பத்தலே மற்றும் கலட்டுவாவ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் நாளாந்த, தொடர்ச்சியான மற்றும் போதிய நீர் விநியோகத்தை மேற்கொண்டு, மொறட்டுவை மாநகர சபை பிரதேசம் உள்ளடக்கப்படுகிறது. இருப்பினும் இந் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் மொறட்டுவை பிரதேசத்திற்கு மேலதிகமாக வேறு பிரதேசங்களுக்கும் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதால் நீர் விநியோத்தை முறைப்படுத்தி, எதிர்கால அபிவிருத்தி சாத்தியம் நிலவும் பிரதேசங்களுக்கான நீர் கேள்வியை பூர்த்தி செய்வதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மூலம் பிரேரிக்கப்பட்ட சில யோசனைகள் வருமாறு.

i. *கலட்டுவாவ நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நடைமுறை நாளாந்த விநியோக கொள்திறனான 60,000 கன மீற்றரானது 140,000 கன மீற்றர் வரை அதிகரித்துள்ளது.*


ii. *கலட்டுவாவ நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நிலத்தடி நீர் தாங்கி முறைமையின் நடைமுறை கொள்திறனான 4,600 கன மீற்றருக்கு மேலதிகமாக 20,000 கன மீற்றரால் உயர்த்துதல்.*

iii. *குறித்த நிலத்தடி நீர் தாங்கி முறைமையிலிருந்து கெசெல்வத்தை வரை 3 கி.மீ. வரையான நீளத்துடனான பரிமாற்ற குழாயை அமைத்தல்.*

## 6.3.4. மின் விநியோகத் திட்டம்


மொறட்டுவை அபிவிருத்தித் திட்டத்தை வகுக்கையில் அவ் அதிகார எல்லைக்குப் போதுமானவாறு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதும் ஒரு நோக்கம் என்பதால் அப் பிரதேசத்திற்கு போதுமானவாறு மின் வசதிகளை வழங்குவதை முகாமைத்துவம் செய்வதற்கு மின் விநியோகத் திட்டம் வகுக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் எரிசக்தி பாவனை மற்றும் தற்போது காணப்படும் மின் இணைப்புக்கள் குறித்த தகவல்கள் உரு 6.13 மற்றும் 6.14 மூலம் காட்டப்பட்டுள்ளன.

**எரிசக்தி பாவனை - 2017**




***உரு 6.13 :*** *எரிசக்தி பாவனை - 2017*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

**மின் இணைப்பு அலகுகள் - 2017**




***உரு 6.13 :*** *மின் இணைப்பு அலகுகள் - 2017*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

மேற்குறித்த வரைபடங்களில் காட்டப்பட்ட தகவல்களுக்கு அமைய உயர் எரிசக்தி பாவனை அதாவது 44% குடியிருப்பு பாவனைக்கானது என்பதுடன், ஏனைய பணிகளுக்கான எரிசக்தி பாவனை இறங்கு வரிசை ஒழுங்கில் கைத்தொழில், வணிகம் மற்றும் வேறு பாவனைகளுக்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாகிறது. மேலும் 2017 ஆண்டாகையில் வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பு அலகுகள் இறங்கு வரிசை ஒழுங்கில் குடியிருப்பு, வணிகம், கைத்தொழில் மற்றும் வேறு பாவனைகளாகக் குறிப்பிடலாம் என்பதோடு, கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பு அலகுகள் வணிக அலகுகளின் எண்ணிக்கையை விட குறைந்ததாக காணப்பட்டாலும் கைத்தொழில்களுக்கான எரிசக்தி பாவனை உயர் பெறுமதியைக் காட்டுகிறது.

இலங்கை மின்சார சபை மற்றும் வ/ப இலங்கை மின்சார தனியார் கம்பனி மூலம் மொறட்டுவை அதிகார எல்லையின் அனைத்து நகர பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் மின் விநியோகம் கம்பி வடம் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 2030 ஆம் ஆண்டிற்காக கணக்கிடப்பட்ட சனத்தொகைக்குப் போதுமான எரிசக்தி கேள்வியைப் பூர்த்தி செய்யும் இயலுமை காணப்படுகின்றமை உறுதியாகியுள்ளது.

மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 மூலம் உயர் மற்றும் நடுத்தர மாசு கைத்தொழில்கள் பரம்பலடைவது தடுக்கப்பட்டதன் காரணமாக மேலே விபரிக்கப்பட்டவாறு கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக ஏனைய பாவனைகளுக்கு ஒப்பீட்டளவில் உயர் எரிசக்தி விநியோகம் தொடர்ச்சியாக தேவைப்பட்டாலும் பிரதேசத்தின் கைத்தொழில்களின் அளவு குறைந்து 2030 ஆம் ஆண்டாகையில் கைத்தொழில்களுக்கான எரிசக்தி கேள்வியும் ஒப்பீட்டளவில் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதோடு, ஒட்டுமொத்த எரிசக்தி கேள்வியும் குறைவடையும்.

மேற்குறித்த நிலைமையின் அடிப்படையில் மொறட்டுவை திட்டமிடல் பிரதேசத்தில் 2030 ஆம் ஆண்டாகையில் மின்சார பற்றாக்குறை ஏற்படாது என எதிர்பார்க்கப்படுகிறது

## 6.3.5. மலம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத் திட்டம்

மொறட்டுவை பிரதேசத்தில் உயர் அடர்த்தியுடன் கூடிய பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் வீடுகள் பரவிக் காணப்படுவதால் அவற்றின் பாவனைகள் மூலம் நாளாந்தம் உருவாகும் கழிவு நீரை முறையாக அகற்றும் முறையொன்று இல்லாமை பலவீனமாக இனங் காணப்பட்டது

### *அ) 2030 ஆம் ஆண்டாகையில் உத்தேச கழிவு நீர் உற்பத்தி*

2030 ஆம் ஆண்டாகையில் கணிப்பிடப்பட்ட சனத்தொகைக்கு கழிவு நீர் உருவாவதை கணக்கிடுவதற்காக நாளாந்தம் தனிநபர் குடியிருப்பு கழிவு நீர் உற்பத்தி 130 கன மீற்றர் என அனுமானிக்கப்பட்டது. அதற்கமைய பின்வரும் அட்டவணை இலக்கம் 6.3 இல் காட்டப்பட்டுள்ளவாறு மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் நாளாந்தம் 30112 கனமீற்றர் வீட்டுக் கழிவு நீர் உற்பத்தியும், நாளாந்தம் 8879 கன மீற்றர் வீடு சாராத கழிவு நீர் உற்பத்தியும் மேற்கொள்ளப்படுவதாக கணக்கிடப்பட்டது. அதிக அடர்த்தியுடனான கலப்பு அபிவிருத்தி வலயம் மற்றம் அதிக அடர்த்தியுடனான பசுமை குடியிருப்பு வலயம் மூலம் உயர் கழிவு நீர் உற்பத்தியாகின்றமை பின்வரும் வரைபட இலக்கம் 6.11 மூலம் தெளிவாகிறது.

| *அபிவிருத்தி வலயம்* | *வீட்டு கழிவு நீர் (நாளொன்றிற்கு கன மீற்றர்)* | *வீடு சாராத கழிவு நீர் (நாளொன்றிற்கு கன மீற்றர்)* | *ஒட்டு மொத்த கழிவு நீர் (நாளொன்றிற்கு கன மீற்றர்)* |
|---|---|---|---|
| *அதிக அடர்த்தியுடைய கலப்பு அபிவிருத்தி வலயம்* | *4,358* | *2,664* | *7,022* |
| *அதிக அடர்த்தியுடைய பசுமை குடியிருப்பு வலயம்* | *8,148* | *1,598* | *9,747* |
| *குறைந்த அடர்த்தியுடைய கலப்பு அபிவிருத்தி வலயம்* | *1,676* | *622* | *2,297* |
| *குறைந்த அடர்த்தியுடைய குடியிருப்பு வலயம்* | *7,306* | *444* | *7,750* |
| *தச்சுத் தொழிலுடன் தொடர்புடைய உற்பத்தி மேம்பாட்டு வலயம்.* | *3,899* | *1,776* | *5,675* |
| *நீரை முக்கியமாகக் கொண்ட பொல்கொடை அபிவிருத்தி வலயம்* | *4,724* | *1,776* | *6,500* |
| *ஒட்டுமொத்த நீர் கேள்வி (நாளொன்றிற்கு கன மீற்றர்)* | *30,112* | *8,879* | *38,990* |

***அட்டவணை இலக்கம் 6.3:*** *எதிர்பார்க்கப்படும் கழிவு நீர் உற்பத்தி – 2030*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## *ஆ) நடைமுறை கழிவு நீர் சுத்திகரிப்புக் கருத்திட்டம்*

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் இரத்மலானை மற்றும் மொறட்டுவை பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் கழிவு நீரை அகற்றும் முறைமையை தாபிக்கும் கருத்திட்டம் மூலம் மொறட்டுவை திட்டமிடல் எல்லையில் 23 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு அகற்றுவதற்காக கழிவு நீரை வெளியேற்றும் 5 நிலையங்களைத் தாபிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது. குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாக மொரட்டுமுல்ல வடக்கு, ராவத்தாவத்தை தெற்கு, ராவத்தாவத்தை மேற்கு, ராவத்தாவத்தை கிழக்கு, உயன தெற்கு, உயன வடக்கு, மோல்பே, கடுவாமுல்ல, லக்ஷப்பத்திய மத்திய, லக்ஷப்பத்திய தெற்கு, லக்ஷப்பத்திய வடக்கு, அங்குலானை வடக்கு, அங்குலானை தெற்கு, மொரட்டுவெல்ல வடக்கு, இடம, சொய்சாபுர தெற்கு, சொய்சாபுர வடக்கு, தஹம்புர, தெலவல தெற்கு, தெலவல வடக்கு, கல்தெமுல்ல, பொருப்பன மற்றும் கட்டுபெத்த என்பவற்றைக் குறிப்பிடலாம். இரண்டு கட்டங்களின் கீழ் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கரு-த்திட்டத்தின் முதற் கட்டம் இது தற்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் நாளாந்தம் இரத்மலானை மற்றும் மொறட்டுவை பிரதேசங்களில் கழிவு நீர் 7,000 கன மீற்றர் அளவில் சேகரித்து, சுத்திகரிக்கப்பட்டாலும், முதற் கட்டத்தில் ஒட்டுமொத்த நாளாந்த கொள்திறன் 17,000 கன மீற்றர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய மேலும் முதற் கட்டத்தில் கழிவு நீரை சேகரிப்பதற்காக 10,000 கன மீற்றர் கொள்திறன் கொண்டதாக இருக்கின்றமை இனங் காணப்பட்டது.

## *இ) கழிவு நீர் முகாமைத்துவத்திற்கான பரிந்துரைகள்*


மொறட்டுவை மாநகர சபை எல்லையில் நாளாந்தம் கழிவு நீர் 39,000 கன மீற்றர் அளவு உற்பத்தியாவதால் மேலே இனங் காணப்பட்ட கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் மூலம் உள்ளடங்காத மொறட்டுவை தெற்கு பகுதியைச் சார்ந்த 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் ஒன்றிற்கான தேவை நிலவுகிறது. குறிப்பாக, கொரலவெல்லேயிலிருந்து எகொட உயன வரை நிலப் பரப்பில் சனத்தொகை மற்றும் கட்டிடங்களின் அடர்த்தி அதிகமாக காணப்படுவதால் முறையான கழிவு நீர் முகாமைத்துவ முறைமை ஒன்றிற்கான தேவை எழுந்துள்ளது. அதற்கான சில பரிந்துரைகள் வருமாறு.

i. *மொறட்டுவை நகர சபை எல்லையில் உருவாகும் கழிவு நீரை கழிவு நீர் சேகரிக்கும் குழாய் முறைமை ஒன்றின் ஊடாக மத்திய சுத்திகரிப்பு நிலையத்திடம் அனுப்பி சுத்திகரித்து, நீர் மூலங்களுக்கு விடுவித்தல்.*

ii. *மேற்குறித்த உத்தேச கழிவு நீர் சுத்திகரிப்புக் கருத்திட்டம் மூலம் உள்ளடங்காத பிரதேசங்களிலும் உருவாகும் கழிவு நீரை சுத்திகரிக்கக் கூடியவாறு உத்தேச கழிவு சுத்திகரிப்பு முறைமையின் கொள்திறனை அதிகரித்தல்.*

iii. *மேற்குறித்த கருத்திட்டம் மூலம் உள்ளடங்காத பிரதேசங்களில் கழிவு நீரை சேகரிக்கும் கழிவுக் குழாய் முறைமையை தாபித்தல்.*

iv. *அப் பிரதேசங்களில் இனங் காணப்பட்ட இடங்களில் கழிவு வெளியேற்றும் நிலையங்களைத் தாபித்தல்.*




கணிப்பிடப்பட்ட வடிகால் மற்றும் கழிவுநீர் உருவாக்கம் -2030
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்

0 0.25 0.5 1 1.5 2 Kilometers

நகர அபிவிருத்தி அதிகார சபை
டிசம்பர் 2018

மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை | மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) | தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 6.11 :*** *மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் வடிகால் மற்றும் மலக் கழிவு உற்பத்தி – 2030*

***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

## 6.3.6. திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம்

நகரப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் துரித அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக பாரிய அளவில் உற்பத்தியாகும் திண்மக் கழிவுகள் இயற்கையான உயிரியல் சிதைவுச் செயற்பாடு மூலம் சிதைவடைவதற்கு எடுக்கும் காலத்தை விட அதிக வேகத்தில் உற்பத்தியாவதால் உரிய முறையில் கழிவுகளை வகைப்படுத்தி, சேகரித்தல், கழிவுகளைக் கொண்டு செல்லல், இடைநிலை சுத்திகரிப்பு மற்றும் முறையான அகற்றல் என்றவாறு முறையான முகாமைத்துவ முறையொன்றைப் பேணுதல் அத்தியாவசியமாகும். அவ்வாறு இடம் பெறாவிட்டால் பெரும்பாலான பிரதேசங்களில் காணக் கூடிய வகையில் நகரின் இரு மருங்கிலும் மற்றும் பொது இடங்களைப் போன்றே தாழ்வான இடங்கள் மற்றும் நீர் மூலங்கள் போன்ற உணர்வுபூர்வமான சூழற் பகுதியில் இக் கழிவுகள் அகற்றப்படுகின்றன. இம் முறையற்ற கழிவகற்றல் காரணமாக ஏற்படக் கூடிய நிலத்தடி நீர் மாசு, கன உலோகங்கள் மூலம் ஏற்படும் மண் மாசடைவு மற்றும் மீத்தேன், ஹைட்ரஜன், சல்பைட் போன்ற வாயுக்கள் மூலம் ஏற்படும் வளி மாசடைதல் காரணமாக உயர் செறிவுடன் கூடிய விஷத் தன்மையான மூலங்கள் சூழல் முறைமையில் சுழற்சியடைவதால் நகரில் வசிக்கும் மக்களுக்கு பெரிதும் சுகாதார மற்றும் சமூக சிக்கல்களுக்கு முகங் கொடுக்க நேரிட்டுள்ளது.

### *அ) 2030 ஆம் ஆண்டாகையில் உத்தேச திண்மக் கழிவுகள் உற்பத்தி*

மொறட்டுவை நகரமானது மாநகர சபை பிரதேசமாக இருப்பதால் ஒரு தனிநபரின் நுகர்வுத் தேவை மற்றும் திண்மக் கழிவு உற்பத்தியைக் கருத்திற் கொண்டு, குடியிருப்பு தனிநபர் நாளாந்த திண்மக் கழிவு உற்பத்தி 0.75 கிலோ கிராம் எனவும், வெளியில் இருந்த வரும் நபர்களின் நாளாந்த திண்மக் கழிவு உற்பத்தி 0.25 கிலோ கிராம் எனவும் கொள்ளப்பட்டது. அதற்கமைய அபிவிருத்தி வலயங்களுக்கு ஏற்ப திண்மக் கழிவு உற்பத்தி அட்டவணை இலக்கம் 6.4 இலும் வரைபட இலக்கம் 6.12 இலும் காட்டப்பட்டுள்ளது.


| அபிவிருத்தி வலயம் | வீட்டு திண்மக் கழிவுகள் உற்பத்தி (நாளொன்றிற்க மெட்ரிக் டொன்) | வீடு சாராத திண்மக் கழிவுகள் உற்பத்தி (நாளொன்றிற்க மெட்ரிக் டொன்) | ஒட்டு மொத்த திண்மக் கழிவுகள் உற்பத்தி (நாளொன்றிற்க மெட்ரிக் டொன்) |
|---|---|---|---|
| அதிக அடர்த்தியுடைய கலப்பு அபிவிருத்தி வலயம் | 16 | 6 | 22 |
| அதிக அடர்த்தியுடைய பசுமை குடியிருப்பு வலயம் | 6 | 1 | 8 |
| குறைந்த அடர்த்தியுடைய கலப்பு அபிவிருத்தி வலயம் | 31 | 4 | 34 |
| குறைந்த அடர்த்தியுடைய குடியிருப்பு வலயம் | 27 | 1 | 28 |
| தச்சுத் தொழிலுடன் தொடர்புடைய உற்பத்தி மேம்பாட்டு வலயம். | 15 | 4 | 19 |
| நீரை முக்கியமாகக் கொண்ட பொல்கொடை அபிவிருத்தி வலயம் | 18 | 4 | 22 |
| ஒட்டுமொத்த நீர் கேள்வி (நாளொன்றிற்கு மெட்ரிக் டொன்) | 113 | 20 | 133 |

***அட்டவணை இலக்கம் 6.4 :*** *உத்தேச திண்மக் கழிவுகள் உற்பத்தி – 2030*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

மேற்குறித்த அட்டவணை இலக்கம் 6.4 இல் காட்டப்பட்டுள்ளவாறு மொறட்டுவை மாநகர சபை எல்லையில் நாளாந்தம் 135 மெட்ரிக் டொன் அளவிலான திண்மக் கழிவுகள் உற்பத்தியானாலும், அத்தியாயம் 2.2.2.1. (இ) படி திண்மக் கழிவுகளை சேகரிப்பதற்காக மாநகர சபையில் தற்போது காணப்படும் நடைமுறை கொள்திறனக்கு அமைய நாளாந்தம் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளின் அளவு ஏறத்தாழ 70 – 120 மொட்ரிக் டொன்னாக இருப்பதால் 14 – 64 மெட்ரிக் டொன் அளவிலான திண்மக் கழிவுகளின் மிகை காணப்படுகின்றமை இனங் காணப்பட்டது இலும் காட்டப்பட்டுள்ளது.

## ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான பரிந்துரைகள்

2019 ஆம் ஆண்டில் அகற்றப்படவுள்ள 500 மெட்ரிக் டொன் கொள்திறன் அளவுடைய கரதியான கழிவுகள் மூலம் மின் உற்பத்தி மற்றும் பசளை உற்பத்திக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் 14 – 64 மெட்ரிக் டொன் அளவிலான மிகை திண்மக் கழிவுகளின் முகாமைத்துவத்திற்கு வாய்ப்பு கிடைப்பதோடு, பிராண வாயு உற்பத்திக்கும், மின் உற்பத்திக்கும், திரவ மற்றும் சேதனப் பசளை உற்பத்திக்கும் வாய்ப்புக் கிட்டும்.




கணிப்பிடப்பட்ட திண்மக் கழிவு உருவாக்கம் -2030
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்

0 0.25 0.5 1 1.5 2 Kilometers

நகர அபிவிருத்தி அதிகார சபை
டிசம்பர் 2018

மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 6.12 :*** *மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் திண்மக் கழிவுகள் உற்பத்தி – 2030*

***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

# 6.4. பொருளாதார அபிவிருத்தி மூலோபாயத் திட்டம்

## 6.4.1. குறிக்கோள்கள்


மொறட்டுவைத் திட்டமிடல் பிரதேசத்தில் நிலவும் வளங்களை நீடித்த முறையில் பயன்படுத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை விரத்தி செய்து, வணிக மற்றும் நிதித் துறை, சுற்றுலாத் துறை மற்றும் தச்சுத் தொழில் போன்ற பொருளாதார முறைகளை ஒன்று திரட்டி பொருளாதார அபிவிருத்தியை அடைவதை பொருளாதார அபிவிருத்தி மூலோபாயத் திட்டத்தின் குறிக்கோளாகக் குறிப்பிடலாம்.

## 6.4.2. விடயப் பரப்பு

மொறட்டுவை நகரின் பொருளாதாரத் துறையை விருத்தி செய்யும் குறிக்கோளை முன்னோடியாகக் கொண்டு வகுக்கப்படும் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் காலம் 2019 – 2030 வரை மட்டுப்படுத்தப்படும். இப் பொருளாதார அபிவிருத்தி மூலோபாயத் திட்டமானது தச்சுத் தொழில், வணிக மற்றும் நிதித் துறை, சுற்றுலாத் துறை போன்ற துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு அமைய பகுப்பாய்வு செய்யப்படுவதோடு, மொறட்டுவை நகரில் மேற்கொள்ளப்படும் உவர் நீர், நன்னீர் மீன்பிடித் துறை மூலம் பெறும் வருடாந்த மீன் உற்பத்தியானது பிரதேசத்தின் வீட்டுப் பாவனைக்கு மாத்திரமே போதுமானதாக இருப்பதால் இத் திட்டத்தின் மூலம் மீன் பிடித் துறை குறித்து விசேட கவனம் செலுத்தப்படவில்லை.

மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்திற்கு உத்தேச ஒட்டுமொத்த பொருளாதார மூலோபாயத் திட்டமானது வரைபட இலக்கம் 6.13 மூலம் காட்டப்பட்டுள்ளது.

*(மொறட்டுவை பொருளாதார அபிவிருத்தி மூலோபாயத் திட்டக் குறியீடு – EcP)*




பொருளாதார அபிவிருத்தி மூலோபாயத் திட்டம் -2030
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்

0 0.25 0.5 1 1.5 2 Kilometers

நகர அபிவிருத்தி அதிகார சபை
டிசம்பர் 2018

மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை | மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) | தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 6.13 :*** *பொருளாதார மூலோபாயத் திட்டம் – 2030* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

# 6.4.3. பொருளாதார அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் கருத்திட்டங்கள்

## *அ) மொறட்டுவை மாநகர சபை அதிகார எல்லையில் பொருளாதாரத்திற்காக பல்வேறு துறைகளினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு மற்றும் தற்போதைய நிலப் பாவனை முறைக்கு அமைய அபிவிருத்தி வலயங்களை இனங் காணல்.*

தச்சுத் தொழில் பெரும்பாலும் பரவிக் காணப்படும் பிரதேசங்கள் தச்சுத் தொழிலுடன் தொடர்புடைய உற்பத்தி வலயமாகவும், காலி வீதி மற்றும் நகர மத்தியப் பிரதேசம் வணிக மற்றும் நிதி நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கான அதிக அடர்த்தியுடைய கலப்பு அபிவிருத்தி வலயமாகவும், நீரை முக்கியமாகக் கொண்ட பிரதேசங்களை சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்துவதற்காகவும் வலயங்களாக்கப்பட்டதுடன், அவ் அபிவிருத்தி வலயங்களுக்கு அருகாமையில் அணுகல் வசதிகளை விருத்தி செய்வதற்காக அத்தியாயம் 6.3.2. வீதிகள் மற்றும் போக்குவரத்துத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி மூலோபாயம் பிரேரிக்கப்பட்டது.

i. *TP03 காலி வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்*
ii. *TP06 கட்டுபெத்த வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்*
iii. *தச்சுத் தொழிலுடன் தொடர்புடைய உற்பத்தி வலயத்தின் ஊடாக செல்லும் பிரதான வீதியான டீ சொய்சா வீதி அபிவிருத்திக்கான TP07 டீ சொய்சா வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்*

### அதிக அடர்த்தியுடனான கலப்பு அபிவிருத்தி வலய அபிவிருத்திக்கான பிரவேச வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

காலி வீதிக்கு அருகாமையிலான வரிசை அபிவிருத்தியுடன் செறிவடையும் பல்வேறு வணிக மற்றும் நிதி நிலப் பாவனைச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக மாற்று போக்குவரத்து ஊடாக TP01 – இலகு புகையிரத முறைமை தாபிக்கப்படுவதோடு, நகர மத்திய பிரதேசத்தில் TP08 – பன்முக போக்குவரத்து நிலையம் நிர்மாணிக்கப்படும்.


### நீரை முக்கியமாகக் கொண்ட பொல்கொடை அபிவிருத்தி வலய அபிவிருத்திக்கான பிரவேச வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

ஆற்றை முக்கியமாகக் கொண்ட பொல்கொடை பிரதேச அபிவிருத்திக்கு உத்தேச TP11 பொல்கொடை சிறி வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் மூலம் அப் பிரதேசமானது ஹோட்டல் தொழில் மற்றும் கூட்டு கட்டுமானத்துடன் தொடர்புடைய முதலீட்டு வாய்ப்புக்களுக்காகத் திறக்கப்படும்.

## *ஆ) மொறட்டுவை நகர மத்திய பிரதேசத்தை முதல் நிலை சந்தி பிரதேசமாக அபிவிருத்தி செய்தல்*

மொறட்டுவை நகரத்தின் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு போதிய வசதிகளை வழங்குவதற்காக வணிகத் துறையின் பங்களிப்பைப் பெறுவதன் மூலம் பொருளாதார மட்டத்தை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதன் போது மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் 2019 – 2030 ஊடாக மொறட்டுவை மாநகர சபை எல்லைக்கு கணிப்பிடப்பட்ட 150,000 அளவிலான குடியிருப்பு சனத்தொகை மற்றும் 87,000 அளவிலான பயணிகளுக்குத் தேவையான வணிக வசதிகளை வழங்கக் கூடியவாறு ஊக்கித் கருத்திட்டங்கள் சிலவற்றை ஆரம்பிப்பதற்கு பிரேரிக்கப்படுதோடு, அக் கருத்திட்டங்கள் உரு 6.15 மூலம் காட்டப்பட்டுள்ளன.

i. *EcP01* – பொது வர்த்தகத் தொகுதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம்
ii. *EcP02* – வீரப்புரன் அப்பு பூங்கா கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்
iii. *EcP03* – பன்முக போக்குவரத்து நிலையத்துடன் தொடர்புடைய கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்
iv. *EcP04* – திறந்தவெளி அரங்கம் மற்றும் கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்
v. *EcP05* – புதிய அலுவலகத் தொகுதி கருத்திட்டம்




***உரு 6.15 :*** *மொறட்டுவை நகர மத்திய முதல் நிலை சந்தி பிரதேச அபிவிருத்திக் கருத்திட்டம்*
***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*



## i. EcP01 – பொது வர்த்தகத் தொகுதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம்

மொறட்டுவை மாநகர சபைக்குச் சொந்தமான மொறட்டுவை மற்றும் கட்டுபெத்த பொது வர்த்தகத் தொகுதிக் கட்டிடங்களின் குறைப் பயன்பாடு மற்றும் ஆபத்தான நிலை காரணமாக தொடர்ந்தும் பாவனைக்குப் பொருந்தாது என்பது புலனாவதால் புதிய வர்த்தகத் தொகுதியொன்றை நிர்மாணித்து, வணிக நடவடிக்கைகளுக்குத் தேவையான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து மற்றும் உரிய பராமரிப்புடன் பேணுவதற்கு பிரேரிக்கப்படுகிறது.

### கட்டுபெத்த பொது வர்த்தகத் தொகுதிக் கருத்திட்டம்

அண்ணளவாக 32 பேர்ச்சஸ் அளவில் உள்ளடங்குமாறு காலி வீதிக்கு எதிரே கட்டுபெத்த சந்தியில் அமைந்துள்ள கட்டுபெத்த பொது வர்த்தகத் தொகுதியானது தற்போது பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகிறது. இவ் இரு மாடிக் கட்டிடத்தில் 42 கடைகள் காணப்பட்டாலும், தற்போது 25 கடைகள் மாத்திரமே செயற்பாட்டு நிலையில் காணப்படுகின்றன. கழிவறை முறைமை பாவனைக்கு உதவாமை, நீர் மற்றும் மின்சாரம் போன்ற பொது வசதிகள் இன்மை மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகள் இன்மை போன்ற விடயங்கள் காரணமாக இக் கட்டிடத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளதோடு, தற்போது காணப்படும் உடைந்த நிலையிலான இரு மாடிக் கட்டிடத்தை அகற்றி, தற்போதுள்ள 42 கடைகளுக்கு மேலதிகமாக கடைகளைப் போன்றே வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடியவாறு வாகனத் தரிப்பிடத்துடன் கலப்பு அபிவிருத்திக் கட்டிடமாக கருத்திட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மொறட்டுவை பொது வர்த்தகத் தொகுதிக் கருத்திட்டம்

களுத்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கையில் புதிய காலி வீதிக்கு எதிரே இடது பக்கம் அமைந்துள்ள மொறட்டுவை பொது வர்த்தகத் தொகுதியானது மொறட்டுவை நகருக்கு உட்பிரவேசிக்கையில் காணப்படும் பிரதான வீதி அடையாளமாகும். இவ் வர்த்தகத் தொகுதியானது மொறட்டுவை மாநகர சபைக்குச் சொந்தமான 72 பேர்ச்சஸ் அளவில் வியாபித்துள்ள 37 கடைகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டிடமாகும். தற்போது இப் பொது வர்த்தகத் தொகுதி சேதமடைந்த நிலையில் காணப்படுவதோடு, எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் ஒன்றிணைந்த கலப்பு அபிவிருத்தியுடனான சுப்பர் மார்க்கட் கட்டிடத் தொகுதியொன்றை இவ் இடத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ii. EcPo2 – வீரப்புரன் அப்பு பூங்கா கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்

புதிய காலி வீதிக்கு எதிரே, மொறட்டுவை பொது வர்த்தகத் தொகுதிக்கு முன்னால் அமைந்துள்ள மொறட்டுவை மாநகர சபைக்குச் சொந்தமான வீரப்புரன் அப்பு பூங்காவானது அண்ணளவாக 115 பேர்ச்சஸ் பரப்பளவைக் கொண்டது. நகர மத்தியில் அமைந்துள்ள இப் பூங்கா தற்போது பல்வேறு வைபவங்களுக்குப் பயன்படுத்தப்பட்டாலும், சிறந்த முறையில் உரிய பாவனை பெறப்படுவதில்லை. அதே போன்று மொறட்டுவை நகரில் வாகனத் தரிப்பிடங்கள் இன்மையும் ஒரு சிக்கலாக இருப்பதுடன், அதற்கான தீர்வாகவும் வீரப்புரன் அப்பு பூங்காவை மக்கள் பிரவேசத்திற்குக் கவர்ச்சியான முறையில் நிலக்கீழ் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய நகரப் பூங்காவாக அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கப்படுகிறது. மேலும், உத்தேச மொறட்டுவை சுப்பர் மார்க்கட் கட்டிடத் தொகுதி மற்றும் வீரப்புரன் அப்பு பூங்கா புதிய காலி வீதியின் இரு மருங்கிலும் காணப்படும் இடமாகையில் இவ் உத்தேச நிலக்கீழ் வாகனத் தரிப்பிடம் மற்றும் மொறட்டுவை சுப்பர் மார்க்கட் கட்டிடத் தொகுதி என்பன நிலத்தடி சுரங்க வழியுடன் தொடர்புபடுத்தப்படும்.

### iii. EcPo3 – பன்முக போக்குவரத்து நிலையத்துடன் தொடர்புடைய கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்

மொறட்டுவை நகர மத்தியில் காணப்படும் இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான 8 ஏக்கர் அளவிலான பரப்பளவைக் கொண்ட புகையிரத நிலையம் மற்றும் பேருந்து நிலையம் அமைந்துள்ள காணியை பன்முகப் போக்குவரத்து நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேச பன்முகப் போக்குவரத்து நிலைய வளாகம் அதாவது, மொறட்டுவை புகையிரத நிலையம், மொறட்டுவை பேருந்து நிலையம் மற்றும் புகையிரத உத்தியோகப்பூர்வ இல்லம் போன்ற இடங்களில் ஆங்காங்கே முறையற்றவாறு பரவியுள்ள கட்டிடங்களை அகற்றி, மீண்டும் ஒரு அபிவிருத்தியாக கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் போது இக் கருத்திட்டமானது உத்தேச பன்முகப் போக்குவரத்து நிலைய வளாகத்திற்கு மேலதிகமாக முழு வசதிகளுடனான புகையிரத உத்தியோகப்பூர்வ இல்லம், வாகனத் தரிப்பிடம் மற்றும் வியாபாரக் கூடங்கள் ஆகியவற்றைக் கொண்டு அமைந்திருக்கும்.

### iv. EcPo4 – திறந்தவெளி அரங்கம் மற்றும் கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்

மொறட்டுவை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியை, மொறட்டுவை நகர மத்தியில் காணப்படும் வரலாற்றுப் பெறுமதி மிக்க ஒரே கட்டிடம் காணப்படும் காணியாகக் குறிப்பிடலாம். மேலும், இக் காணியை, மொறட்டுவை மத்திய பிரதேசத்திற்கு பொல்கொடை ஆறு நேரடியாகத் தென்படும் காணியாகவும் குறிப்பிட முடியும் என்பதோடு, அது அண்ணளவாக 3 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. இப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியானது இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்குச் சொந்தமான ஆதனமாவதோடு, தற்போது அதில் பொலிஸ் நிலையம் மற்றும் பொலிஸ் உத்தியோகப்பூர்வ இல்லம் என்பன பேணப்பட்டு வருகின்றன. இக் காணியின் அமைவிடத்தை கருத்திற் கொண்டு, தொல்பொருளியல் பெறுமதியுடைய கட்டிடத்தைப் பாதுகாத்து, பொல்கொடை ஆற்றின் வனப்பை இரசித்து, அழகியல் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு திறந்த வெளி அரங்கமொன்றுடன் கூடிய பொழுதுபோக்கு இடமாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பொலிஸ் நிலையக் கட்டிடத்தை மீளமைத்து கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டமாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

v. EcPo5 – புதிய அலுவலகத் தொகுதி கருத்திட்டம்

மொறட்டுவை நகரில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆங்காங்கே பரவிக் காணப்படுவதோடு, பொது மக்களுக்கு மிகச் சிறந்த சேவையை வழங்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஒரே இடத்தில் ஒன்றிணைத்து, மொறட்டுவை மாநகர சபை வளாகத்திற்கு அருகாமையில் மொறட்டுவை புதிய அலுவலகத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கப்படுகிறது. இதன் பொருட்டு மொறட்டுவை நகர சபைக்குச் சொந்தமான மொறட்டுவை நகர சபை கட்டிடத்திற்கு அருகாமையிலுள்ள காணியைப் பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதன் போது உத்தேச திறந்த வெளி அரங்கம் மற்றும் கலப்புக் கட்டிடக் கருத்திட்டம் காரணமாக அகற்ற நேரிடும் பொலிஸ் நிலையத்தையும் இக் காணியிலேயே தாபிப்பதற்குப் பிரேரிக்கப்படுகிறது.


# 6.5. நீடித்த சுற்றாடல் மூலோபாயத் திட்டம்

மொறட்டுவை மாநகர சபை அபிவிருத்திப் பிரதேசத்தில் நீடித்த சுற்றாடல் அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் உத்தேச நோக்கை நிதர்சனமாக்கக் கூடியவாறு "நீரால் செழிப்புறும் நகரம்" எனும் நோக்கம் முன்வைக்கப்பட்டது. அந் நோக்கத்தை அடைவதன் பொருட்டு "2025 ஆம் ஆண்டாகையில் பிரதேசத்தில் காணப்படும் நீர் மூலங்களை (பொல்கொடை ஆறு, லுனாவை களப்பு மற்றும் கடற்கரை) உட்பட ஈர நிலம் மற்றும் சதுப்பு நிலங்களை 100% பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்" எனும் குறிக்கோள் மற்றும் "2025 ஆம் ஆண்டாகையில் லுனாவை களப்பை சுற்றாடல் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தல்" எனும் குறிக்கோள் பயன்படுத்தப்படும். இதற்கமைய நீடித்த சுற்றாடல் மூலோபாயத் திட்டமானது பிரதானமான நான்கு உப பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

- *சுற்றாடல் பாதுகாப்புத் திட்டம்*
- *இயற்கை முகாமைத்துவத் திட்டம்*
- *பொது திறந்த வெளி மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் குறித்த இடம்சார் திட்டம்*
- *அனர்த்த முகாமைத்துவத் திட்டம்*

இதற்கமைய மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் நீடித்த சுற்றாடல் அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக இனங் காணப்பட்ட ஊக்கிக் கருத்திட்டம் உள்ளடங்கிய ஒட்டுமொத்த சுற்றாடற் திட்டமானது வரைபட இலக்கம் 6.14 மூலம் காட்டப்பட்டுள்ளது.

(நீடித்த சுற்றாடல் மூலோபாயத் திட்டத்திற்கான குறியீடு – En)




நீடித்த சுற்றாடல் அபிவிருத்தித் திட்டம் -2030
மொறட்டுவை நகர சபைப் பிரதேசம்

0 0.25 0.5 1 1.5 2 Kilometers

நகர அபிவிருத்தி அதிகார சபை
டிசம்பர் 2018

மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை | மொறட்டுவை அபிவிருத்தித் திட்டம் (2019-2030) | தயாரிப்பு : மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

***வரைபட இலக்கம் 6.14 :*** *மொறட்டுவை நீடித்த சுற்றாடல் மூலோபாயத் திட்டம் 2019 – 2030* ***மூலம் :*** *நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018*

# 6.5.1. சுற்றாடல் பாதுகாப்புத் திட்டம்

## 6.5.1.1. திட்டமிடல் குறிக்கோள்கள்

உணர்திறன் பகுப்பாய்வு ஊடாக இனங் காணப்பட்ட சுற்றாடல் உணர்திறன் பிரதேசங்களில் முறையான நிலப் பாவனையை ஏற்படுத்தி, அப் பிரதேசத்தைப் பாதுகாப்பதை சுற்றாடல் பாதுகாப்புத் திட்டத்தின் குறிக்கோளாகக் குறிப்பிடலாம்.

## 6.5.1.2. திட்டமிடல் விடயப் பரப்பு

திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் நீர் மூலங்களும் அந் நீர் மூலங்களுடன் தொடர்புபடும் ஏனைய நீர் வழிகள் மற்றும் நீரை முக்கியமாக கொண்ட அனைத்துப் பிரதேசங்களும் பாதுகாக்கப்படுவதுடன், மிக விசேடமான சூழல் நிலைமைகளுடன் கூடிய பிரதேசங்கள் இனங் காணப்பட்டன. சுற்றாடல் பாதுகாப்புத் திட்டமானது மிகக் குறுகிய காலப் பகுதியில் நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கப்படுவதுடன், அதன் செல்லுபடிக் காலம் மிக நீண்டதாகும்.

## 6.5.1.3. திட்டமிடல் மூலோபாயங்கள்

### *அ) சுற்றாடல் ரீதியில் மிக விசேடமான மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய அதீத தேவைப்பாடுடைய பிரதேசங்களை இனங் காணல் மற்றும் அப் பிரதேசங்களை சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகமன-ப்படுத்துவதற்கு பரிந்துரைத்தல்*

#### i. பரிந்துரைக்கப்பட்ட லுனாவை களப்புப் பாதுகாப்புப் பிரதேசம்

அத்தியாயம் 5.2.1.1 ; பலங்களின் கீழ் லுனாவை களப்புப் பிரதேசத்தில் உயர்ந்த அளவில் விலங்கினங்கள் மற்றும் விசேட தாவர இன அடர்த்தி மற்றும் பன்மைத்துவம் காணப்படுகின்றமை இனங் காணப்பட்டுள்ளதுடன், மேலும் நீர்வள அடிப்படையில் முக்கியத்துவமுடைய நீரியல் மற்றும் நிலத்துடன் தொடர்புடைய சுற்றாடல் முறைமையொன்று காணப்படுகின்றமை உறுதியாகியுள்ளது. 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க மற்றும் 1986 ஆம் ஆணடின் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இல்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 24 (இ) மற்றும் 24 (ஈ) ஆகிய பிரிவுகளின் பிரகாரம் சுற்றாடல் ரீதியில் மிக விசேடமான அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள அல்லது பாதுகாக்கப்பட வேண்டிய அதிக தேவையுடைய பிரதேசங்களை வர்த்தமானியொன்றில் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் சுற்றாடல் விடயப் பொறுப்பு அமைச்சர் சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தலாம். அதற்கமைய மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசமாக ஏதேனும் ஒரு பிரதேசம் பிரகடனப்படுத்தப்படுகையில் "பொருத்தமான பிரதேசங்கள்/ இடங்கள்" எனக் குறிப்பிடப்படும் விடயங்களுள் லுனாவை களப்புப் பிரதேசம் பின்வரும் விடயங்களுக்கு அமைவாக பொருத்தமானது என இனங் காணப்பட்டது.

- *சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துவதற்குப் பொருத்தமான பிரதேசங்கள்/ இடங்கள்*

- *தனித்துவமான பண்புகளைக் கொண்ட சுற்றாடல் முறைமை*

*உ-ம் : உயிரியல் பன்மைத்துவத்தினால் வளம் மிக்க அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள அல்லது உள்நாட்டு விலங்கினங்கள்/ தாவரங்களைக் கொண்ட பிரதேசம்*

